26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
# உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Cnaada
Canada's Other Voices
National Ethnic Press and Media Council of Canada
Issue: 1363
Friday May 20, 2022

## இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் முன்னைய கனடிய அரசுகள் தவறிழைத்து விட்டன என்கிறார் கன்சர்வேடிவ் தலைமைப் பதவிக்கான வேட்பாளர் பேட்ரிக் பிரவுன்



"இலங்கைத் தமிழர்கள் விடயத்தீல் முன்னைய கனடிய அரசுகள் தவறிழைத்து விட்டன தற்போது கனடிய அரசாங்கம் உதவிகள் வழங்கியும் அகதிகள் அந்தஸ்த்து வழங்கியும் உதவியளிக்கின்ற உக்ரேனிய மக்கள் மற்றும் முன்னர் கனடிய அரசுகளின் உதவி-களை கிட்டிய சிரிய மக்கள். மற்றும் வியட்னாம் மக்கள் ஆகிய பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கிய உதவிகள் போன்று இன்னல்களை அனுபவித்த இலங்கைத் தமிழர்களுக்கு உடனடி உதவிகளை அளிக்கவில்லை. எனவே அவர்களிடம் நான் மன்னிப்புக் கேட்டுக்கொள்கின்றேன்."

இவ்வாறு அண்மையில் தனது கருத்துக்களை வெளியிட்டுள்ளார். கன்சர்வேடிவ் தலைவர் பதவிக்கான வேட்பாளர் பேட்ரிக் பிரவுன் அவர்கள்

தமிழ் சமூகப் பிரதிநிதிகள் மத்தியில் உரையாடிய-போது பெற்றிக் பிரவுண் தெரிவித்துள்ளார்.

இங்குள்ள, தமிழ் சமூகத்தின் மீதான தனது அனுதாபங்களைப் பகிர்ந்து கொண்ட பெற்றிக் பிரவுண், கனடாவிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயத்தால் "புலிகள்" என்று தனக்கு முத்திரை குத்தப்படுவதற்கு வழிவகுத்தது - என்றும் தெரிவித்தார்.

2006 இல் கனடா விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்பாகப் பட்டியலிட்டபோது ஸ்டீபன் ஹார்ப்பரின் கொன்சர்வேர்ட்டிவ் அரசாங்கம் ஆட்சியில் இருந்தது. பின்னர் 2018 இல் ஜஸ்டின் ட்ரூடோவின் லிபரல் அரசாங்கம் ஆட்சியைக் கைப்பற்றியபோதும். அந்தத் தடை தொடர்ந்து உறுதிப்படுத்தப்பட்டது.

"நான் உடனடியாக முடிந்தவரை பல தமிழ் குடும்பங்களை மீண்டும் இணைக்க விரும்புகிறேன் என்றும் பெற்றிக் பிரவுண் தெரிவித்துள்ளார் என அறியப்படுகின்றது.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# என் மீது நடைமுறைக்கு ஒவ்வாத பொலிஸ் புலனாய்வாளர்கள் கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகின்றது

## வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் சாடல்



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினமான இன்று வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் பயணிக்கும் வாகனம் எங்கு நிற்கின்றது என பிரதேச சபை உத்தியோகத்தர்களை பொலிஸ் புலனாய்வாளர்கள் தொலைபேசியில் விசாரித்துள்ளனர். இது மக்கள் பிரதிநிதியான தனது உரிமைகளை மீறும் செயல் என தவிசாளர் நிரோஷ் சாடியுள்ளார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில், நான் காலையில் சபையில் சென்று நினைவேந்தலை மேற்கொண்டு விட்டு மல்லாகம் நீதிமன்றில் எனக்கு எதிராகத் தொடுக்கப்பட்டுள்ள வழக்கிற்கு முன்னிலையாவதற்காக சென்றிருந்தேன். அவ்வாறு சென்றிருந்த சந்தர்ப்பத்தில் எமது சபை உத்தியோகத்தர்களைத் தொடர்பு கொண்ட பொலிஸ் புலனாய்வாளர்கள் எனது பயன்பாட்டில் உள்ள வாகனம் எங்கே நிற்கின்றது என வினவியுள்ளனர். இச்சம்பவம் அடிப்படையில், பிரதேச சபை ஒன்றிற்காக ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்டதும் சட்டரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மக்கள் பிரதிநிதியான என் மீது நடைமுறைக்கு ஒவ்வாத கண்காணிப்பு மேற்கொள்ளப்படுவதைக் காட்டுகின்றது. இந் நிலை தொடரக்கூடாது என எதிர்பார்க்கின்றேன்.

எவ்வகையான நோக்கத்தின் அடிப்படையில் எனது நடமாட்டம் குறித்து மேற்குறிப்பிட்ட அணுகுமுறை ஊடாக கண்காணிப்பதற்கான தேவை பொலிஸாரிற்கு எழுந்துள்ளது என இலங்கை மனித உரிமை ஆணைக்குழு ஊடாக இலங்கை பொலிஸ் திணைக்களத்திடம் கோரவுள்ளேன்.

கடந்த காலங்களில் நினைவேந்தல்களின் போது அநாகரீகமான முறையில் எல்லை தாண்டிய வகையில் புலனாய்வாளர்களின் செயற்பாடுகள் வடக்குக் கிழக்கில் காணப்பட்டுவருகின்றது. இம் முறை இறந்தவர்களை நினைவுகூர்வதற்கு தடையெதும் இல்லை என அரசாங்கம் அறிவித்துள்ள போதும் அச்சுறுத்தல்கள் பிரயோகிக்கப்படுகின்றன.

**தியாகராஜா நிரோஷ்**
**தவிசாளர்**
**வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை**
**புத்தூர்**
0776569959

# "தயவு செய்து வேலைக்கு வரவேண்டாம்.." அரசு ஊழியர்களுக்கு இலங்கை பிரதமர் ரணில் அறிவிப்பு






பெட்ரோலை சேமிக்கும் விதமாக அத்தியாவசிய சேவைகளை தவிர பிற துறைகளை சேர்ந்த அரசு ஊழியர்கள் நாளை பணிக்கு வரவேண்டாம் என்று இலங்கை பிரதமர் ரணில் கேட்டுக்கொண்டுள்ளார். மேலும், பொது மக்கள் எரிபொருளுக்காக வரிசையில் நிற்பது பயனற்றது என்றும், பெட்ரோல் விநியோகத்திற்கு குறைந்தது இரண்டு நாட்களேனும் தேவைப்படும் எனவும் மின்சக்தி அமைச்சர் கூறியுள்ளார்.

எரிவாயு, மண்ணெண்ணெய் ஆகியவற்றை பெற்றுக் கொள்ளவதில் கொழும்பு மாவட்ட மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கிறார்கள் எனவும், இவர்கள் வீதிக்கிறங்கிய பின்னர் அவர் தூண்டி விட்டார், இவர் தூண்டி விட்டார் என குறிப்பிட வேண்டாம் எனவும் முஜிபுர் ரஹ்மான் சபையில் எச்சரிக்கை விடுத்தார். மேலும், பொதுமக்கள் தமது கையில் பணமாக வைத்திருக்கக்கூடிய வெளிநாட்டு நாணயத்தின் பெறுமதி 15,000 டாலர்களில் இருந்து 10,000 டாலர்களாகக் குறைக்கப்பட்டுள்ளது.

# இலங்கையிலிருந்து அவுஸ்ரேலியாவுக்கு படகு மூலம் செல்லயிருந்த 21 பேர் அதிரடிப்படையினரால் கிரான்குளத்தில் கைது!!



மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிரான்குளம் பகுதியிலிருந்து அவுஸ்ரேலியாவுக்கு படகு மூலம் செல்லயிருந்த 21பேரை விசேட அதிரடிப்படையினர் கைதுசெய்துள்ளனர்.

கிரான்குளம் தர்மபுரம் பகுதியில் உள்ள கடற்கரையில் வைத்தே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

களுவாஞ்சிகுடி மற்றும் தாண்டியடி விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் நேற்று இரவு 10 மணியளவில் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் வவுனியா, கிளிநொச்சி, திருகோணமலை மற்றும் கிரான்குளம் பகுதிகளை சேர்ந்தவர்கள் எனவும் நான்கு பெண்கள் அடங்களாக 21பேர் இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது இவர்கள் அவுஸ்ரேலியாவுக்கு செல்வதற்காக பயன்படுத்தியதாக தெரிவிக்கப்படும் இரண்டு படகுகளையும் விசேட அதிரடிப்படையினர் கைப்பற்றியுள்ளதுடன் பெருமளவு எரிபொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.



கைதுசெய்யப்பட்டவர்களும் படகும் காத்தான்குடி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான விசாரணைகளை விசேட அதிரடிப்படையினர் மற்றும் காத்தான்குடி பொலிஸார் இணைந்து முன்னெடுத்துவருகின்றனர்.

# மன்னார் மாந்தை மேற்கு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் தர்க்க நிலை

## பெற்றோலை பெற்றுச் சென்ற மக்கள்



மன்னார் நகர பகுதியில் உள்ள மாந்தை மேற்கு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் வியாழக்கிழமை (19) மதியம் மக்களின் மோட்டார் வாகனங்களுக்கான எரிபொருள் (பெற்றோல்) வழங்கப்படாமையால் பதற்ற நிலை ஏற்பட்டது.

குறித்த எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் கையிருப்பில் காணப்பட்ட பெற்றோல் அரச உத்தியோகத்தர்கள் மற்றும் படையினருக்கு வழங்கப்பட்டு வந்தது.

எனினும் மக்களுக்கு வழங்கப்பட வில்லை. அவசர தேவை கருதி மோட்டார் வாகனங்களில் எரி பொருளை பெற்றுக் கொள்ள (பெற்றோல்) சென்றவர்களுக்கு எரிபொருள் வழங்கவில்லை.

இதனால் அங்கு கூடிய மக்களுக்கும் எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் கடமையாற்றுகின்றவர்களுக்கும் இடையில் தர்க்கம் ஏற்பட்டது.

இதன் போது சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முயன்றனர். எனினும் அங்கு கூடிய மக்கள் எரிபொருளை கேட்டு தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

உடனடியாக குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு வருகை தந்த மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெல் மக்களுடன் கலந்துரையாடியதுடன், கையிருப்பில் உள்ள எரிபொருளை (பெற்றோல்) வாடிக்கையாளர்கள் ஒவ்வொருவருக்கும் 500 ரூபாய் வீதம் பெற்றோல் வழங்க நடவடிக்கைகளை மேற்கொண்டார். அதற்கு அமைவாக எரிபொருள் வழங்கப்பட்டது.

குறித்த எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் அரச உத்தியோகத்தர்கள் மற்றும் படையினருக்கு மாத்திரம் எரிபொருள் வழங்கப்பட்டதாகவும், மக்களாகிய தமக்கு அவசர போக்குவரத்து நடவடிக்கைகளை மேற்கொள்ள பெற்றோல் கேட்ட போது வழங்காமையினால் குறித்த தர்க்க நிலை ஏற்பட்டதாகவும் தெரிய வருகின்றது.

**- மன்னார் நிருபர்**



DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com
homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurence;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
Canadian Media Circulation Audit
$1.00
416-752-1524 www.uthayannews.ca
உதயம் 1363
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday May 20, 2022

# மே 18 – ஈழத் தமிழர் இனப்படுகொலை நாள் கடைப்பிடிக்க கனடா நாடாளுமன்றம் தீர்மானதை தலைவர் பழ. நெடுமாறன் பாராட்டுகின்றார்





"ஈழத் தமிழர்கள் இனப்படுகொலைக்கு ஆளான நினைவு நாளாக மே-18ஆம் நாளை கடைப்பிடிக்கும்படி" கனடா நாடாளுமன்றம் ஒரே மனதாகத் தீர்மானம் ஒன்றினை நிறைவேற்றியுள்ளதை உலகத் தமிழர்கள் மற்றும் மனித உரிமைப் போராளிகள் அனைவரும் வரவேற்றுப் பாராட்டுவார்கள் என்பதில் ஐயமில்லை. இத்தீர்மானத்தை முன்மொழிந்த லிபரல் கட்சியைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் கேரி ஆனந்தசங்கரி அவர்களுக்கும் கனடா நாட்டின் தலைமையமைச்சர் ஜஸ்டின் ட்ரூடோ அவர்களுக்கும் நன்றி கூறிப் பாராட்டுகிறேன்.

RE/MAX ACE REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

கனடா தலைமையமைச்சர் இதுகுறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் "போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் உயிர்ப் பிழைத்து எஞ்சியிருக்கும் தமிழ் மக்களுக்கும் நீதி கிடைக்கவேண்டும் என்பதற்காக கனடா தொடர்ந்து போராடும். ஐ.நா. மனித உரிமை குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி, இலங்கையில் மனித உரிமைகளை நிலைநாட்டுவதற்கும், காப்பதற்கும் இலங்கை அரசு முன்வரவேண்டும் என்பதையும் தொடர்ந்து நாங்கள் வலியுறுத்துவோம்.

கனடாவில் வாழும் ஈழத் தமிழ் மக்களுக்கு ஆறுதல் கூறி அரவணைக்க வேண்டிய கடமை கனடா மக்களுக்கு உண்டு. எதிர்காலத்தில் இத்தகைய கொடுமைக்கு அவர்கள் ஆளா-காதவாறு தடுப்பதற்கு நாம் ஒன்றிணைந்து செயல்படுவோமாக" எனக் கூறியுள்ளார்.

உலகின் மிக முக்கிய நாடுகளில் ஒன்றான கனடா நாட்டின் நாடாளுமன்றம் நிறைவேற்றியுள்ள இந்த தீர்மானம் வரலாற்றுச் சிறப்புமிக்கதாகும். உலக நாடுகளின் விழிகளைத் திறப்பதற்கும் கனடாவைப் பின்பற்றி மற்ற நாடுகளும் ஈழத் தமிழர் துயரைத் தடுப்பதற்கும் முன்வர இத்தீர்மானம் உதவும் என நம்புகிறேன்."

*அன்புள்ள, பழ.நெடுமாறன்*

# யாழ் மாநகர சபையை கலைக்க வேண்டிவரும் என நான் கூறவில்லை என்கிறார் வடக்கு ஆளுநர்



ஆரிய குளத்தில் இராணுவத்தினர் வெசாக் கூடு அமைப்பதற்கு அனுமதி கொடுக்கா விட்டால் யாழ் மாநகர சபையை கலைக்க வேண்டிவரும் என எந்த சந்தர்ப்பத்திலும் கூறவில்லை என வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட வடக்கு ஆளுநர், ஆரியகுளம் பகுதி விடயம் தொடர்பில் ஊடகவியலாளர் வினவிய போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ் மாநகர சபை விடயம் தொடர்பில் நான் தற்போது பேச விரும்பவில்லை. எனினும் நான் மாநகர சபையை கலைப்பதாக யாரிடமும் கூறவில்லை. எனவே அந்த விடயம் தொடர்பில் நான் பேச வேண்டிய தேவை இல்லை எனவும் தெரிவித்தார் தலைவர்.

SRI NADARAJASUNDARAM
Broker
416-276-6666
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

MONEY PROBLEMS?™
உங்களின் சகல கடன்களுக்கும் ஒரு சிறு தொகையை செலுத்துக
Make one small payment for all your DEBTS!
gta credit
Direct Tamil Line
(416) 489-2000
Visit: www.GtaCredit.Com
North York, Scarborough & Brampton.

வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
TEAM BLUE FORCE
RE/MAX REALTRON BLUE FORCE
416 2888882
கவாஸ். சோம சச்சிதானந்தன்

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East (2nd flr) Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX REALTRON TEAM







## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

### Manufacturing Workers & General Labour Needed

**உற்பத்தித் தொழிலாளர்கள் மற்றும் பொதுத் தொழிலாளர்கள் முழுநேர காலைப் பணிகளுக்குத் தேவை**

Manufacturing Workers and General Labour Needed
for Full-time Morning Shifts
Looking for Workers to add to our team.
We are looking for hard-working and dedicated people for long-term positions.
Located in Scarborough near Markham and Ellesmere.
Salary starting from $16.00 + with benefits.

**Contact - Essan : 647-993-2872**

### LOYAL PEST CONTROL

Licensed / Experienced Service Technician
உங்கள் விடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.



Residential, Commercial,
Industrial Elimination of Roaches & Mice

**RAJAN: 416-464-2415**

### Help Wanted

**Part time (evenings and Saturdays).**
**General helper needed for a furniture finishing shop.**

**தொடர்புகளுக்கு:**
**416-636-3655**

### Sales Representative Needed / விற்பனை பிரதிநிதி தேவை

We are looking for an individual who has a desire to succeed, is highly self-motivated, is client-oriented proactive, organized, have quick thinking, and has excellent time management skills. Eco-Friendly Pallet provides all training necessary to ensure you are set up for success and a complete understanding of the pallet industry.

Responsibilities:
-Present and sell company products to potential customers
-Find and cold-call new prospects in existing and in new markets
-Prospect and contact potential customers while generating quality leads
-Must be result-driven and reach agreed sales targets by the deadline
-Resolve customer inquiries and complaints about the products
-Strong organization, and communication skills and be goal-oriented
-Ability to work in B2B corporate sales environment
-Must have a professional appearance and manner

Qualifications:
-Must have 2 or more years of outside sales experience
-Great written and verbal communications skills
-Good Microsoft Office abilities
-Ability to build a great and strong rapport with clients
-Strong negotiation skills
-Deadline and detail-oriented
-Exceptional Time Management skills and Organizational Skills Required
-Must have a valid driver's license and reliable transportation
-Bonus: has experience in the pallet industry

Benefits:
-Competitive base salary + Uncapped commission
-On-going training and development to ensure your success
-Health Benefits option available

**Contact - Essan : 647-993-2872**

### ATSIN LAW
### சட்ட அலுவலகம்

**உங்கள் சட்டத் தேவைகளுக்கு எம்மை நாடுங்கள்**

Matrimonial/Family
- property equalization, custody, access, child/ spousal support, domestic agreements, divorce
Real Estate
- residential purchase, sale & refinance transactions
Powers of Attorney, Guardianship, Wills
Notary Public/Commissioner

**SAROJINI SINIVASAN**
Barrister, Solicitor & Notary Public
250 Consumers Road, Suite 517
Toronto, Ontario M2J 4V6
Office: (416) 613 8998
Fax: (416) 494 8938 --- Email: atsinlaw@gmail.com

### வேலைக்கு ஆட்கள் தேவை

ஸ்காபுறோவில் அமைந்துள்ள தொழிற்சாலை ஒன்றில் வேலைக்கு ஆட்கள் தேவை. ஆண்/பெண்கள் இருவரும் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு உடன் அழைக்கவும்
**Jeya: (647) 669-2739**

### BASEMENT FOR RENT

**Stouffville** நகரத்தில் **9th and Stouffville Rd** சந்திப்பிற்கு அருகில் புதிதாக திருத்தி அமைக்கப்பெற்ற **2 Bedroom Basement in** உடனடியாக வாடகைக்கு உண்டு.
அதிக வசதிகள் கொண்டது. அழகிய 3**-pc** குளியல் அறை. **Separate entrance.** தனியான **Washer/dryer.**
**Water softener**, குடிப்பதற்கு **Filtered water system** ஆகியனவும் உண்டு.
வாடகை **$1800 all inclusive** எதிர்பார்க்கப்படுகின்றது.

**Please call/text 416-303-6931**

### Help Wanted

**1) Part-time dishwashers**
**2) Part-time cooks (Canadian and South Indian)**
**3) Waiters for Banquet Hall**
**4) Wait staff (part-time)**

**Location: Woodbine & 14th Ave**

**Call Amar: 416-988-9518**

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள்

Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## உதயன் கதிரோட்டம்

# இலங்கை அமைச்சரவையில் மீண்டும் 'ஆபத்தான பேர்வழிகள்'

எமது கடந்த வார கதிரோட்டம் பக்கத்தில் 'மக்கள் ஏற்றுக்கொள்ளாத ஒருவருக்கு பிரதமர் பதவியா என்று கேள்வியை முன்வைத்திருந்தோம். ஊலகின் பல நாடுகளிலும் ஜனநாயக முறைப்படி மக்களால் வாக்களிக்கப்பட்டு தெரிவுசெய்யப்படும் ஒருவர் பிரதமராக வருவதே நியாயமானது. அவ்வாறு தெரிவு செய்யப்பெறுகின்றவர்கள் ஜனநாயகவாதிகளாக இருப்பார்கள் என்புத கேள்விக்குறியாக இருந்தாலும். அவர்கள் தம்மை 'ஜனநாயகவாதிகளாகவே' காட்டிக் கொள்வார்கள். அவ்வாறான ஒருவர் தான் தற்போது .இலங்கையின் பிரதமராக பதவியேற்றுள்ள ரணில் விக்கிரமசிங்க என்றும் மக்கள் விரோதி ஆவார். மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒருவரைத் தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினராக்கி, அவரையே பிரதமராக்கி அழகு பார்ப்பதெல்லாம் ஆட்சி பீடம் அசிங்கத்தனமான ஒன்றாக மாறிவிட்ட இலங்கையில் மட்டுமே நடக்கும் ஆச்சரியம்.

நிறைவேற்று அதிகார பலமுடைய ஜனாதிபதி தனக்கிருக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி இதுபோன்று மேற்கொள்ளும் நடவடிக்கைகளால் மக்கள் ஜனநாயகம் மீது வைத்திருக்கும் நம்பிக்கை பலவீனமடையும். எந்த ராஜபக்சவினர் தேவையில்லை என மக்கள் நிராகரித்தார்களோ, அவர்களை மீள அரியணை ஏற்றவும் இதேபோன்றதொரு அதிகாரத் துஸ்பிரயோகத்தைப் பயன்படுத்தவும் வாய்ப்புள்ளது. இவ்வளவு நாட்களும் சகோதரர்கள் இருவர் முறையே ஜனாதிபதியாகவும் பிரதமராகவும் பதவி-களை வகிக்க.. நாடு பொருளாதார வீழ்ச்சியை நோக்கிச் செல்ல மக்கள் வாழ்வின் அடிமட்டத்திற்கு 'அழைத்துச் செல்லப்பட்டார்கள்' ஆனால தற்போது அரசாங்கத்தை வழி நடத்தும் இருவரும் ஏற்கெனவே தமிழ் மக்கள் விரோதிகளாக மட்டும் இல்லாமல் நாட்டின் அனைத்து மக்களுக்கும் நம்பிக்கைத் துரோகம் இழைத்தவர்களாகவே கருதப்படுகின்றார்கள்.

மக்கள் ஜனநாயக முறைப்படி இதனை எதிர்ப்பினும், சில நாட்கள் ஊரடங்கும், சுட்டுத்தள்ளுவதற்கான அனுமதியும் அப்போராட்டங்களை வலுவிழக்க செய்துவிடும். இதனாலேயே தற்போதைய எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுர குமார திஸ்ஸ நாயக்க, பௌத்த பிக்குகள் சிலர், கோட்டாகோகம போராட்டக்காரர்களில் சிலர் இந்த நியமிப்பைக் கடுமையாக விமர்சிக்கின்றர். புதிய பிரதமருக்கு எதிராகவும் போராடத் தயார் என்கின்றனர்.

மேலும் தற்போது புதிய அமைச்சரவையில் இடம்பெற்றுள்ளவர்களும் மக்கள் விரோதிகளாகவே உள்ளார்கள். அவர்களில் சிலர் பரம்பரை பரம்பரையாக அப்பாவி மக்களைக் கொள்ளையடித்த குடும்பங்களின் வாரிசுக்கள் என்பதும் மக்கள் அறிந்த ஒன்றே.

முன்னைய அமைச்சரவையில்அங்கம் வகித்தவர்கள் சிலர் வேறு முகமூடிகளோடு வந்துள்ளார்களா என்றும் சந்தேகிக்கப்படுகின்றதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

# விடுதலைப் புலிகளுடனான யுத்தம் சரியான வழியில் வெல்லப்பட்டதாக நான் நினைக்கவில்லை

## ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹசன் அலி




விடுதலைப்புலிகள் ஒரு இயக்கமாக இருந்தாலும் விடுதலைப்புலிகள் என்ற விடயம் ஒரு சர்ச்சைக்குரிய விடயமாகும். கடந்த காலத்தில் விடுதலைப் புலிகளுடன் இடம்பெற்ற யுத்தமானது சரியான வழியில் வெல்லப்பட்டதாக நான் நினைக்கவில்லை. அதாவது உள்நாட்டு யுத்தம் அல்லது பிரச்சினை என்றால் அது ஒரு பேச்சுவார்த்தை மேசையில் தான் முடிந்திருக்க வேண்டும்.இந்த போரின் முடிவு சமாதான முறையில் நிறைவிற்கு கொண்டு வரவில்லை.பெரும் அழிவுகளுடன் தான் நிறைவடைந்தது என ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹசன் அலி தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பில் அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பகுதியில் உள்ள அவரது கட்சி அலுவலகத்தில் வியாழக்கிழமை(19) நடாத்திய விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தெரிவித்ததாவது,

வட கிழக்கு மாகாண சபையில் முதலமைச்சராக இருந்த வரதராஜ பெருமாள் காலத்தில் ஒரு உறுப்பினராக இருந்துள்ளேன்.அதுமாத்திரமன்றி வரதராஜ பெருமாள் அவர்கள் தமிழீழ பிரகடனம் செய்த போது வெளிநடப்பு செய்த குழுவிலும் நான் அங்கம் வகித்திருந்தேன்.அதாவது இந்த நாட்டை பிரிப்பதற்கு ஒருபோதும் நாங்கள் உடன்பட மாட்டோம் என அப்போது நாம் வெளியேறி இருந்தோம்.இந்நிலையில் பின்னர் அங்கு பல பிரச்சினைகள் எழுந்தமையினால் நாங்கள் ஐ.பி.கேயின் உதவியுடன் விசேட விமானத்தில் இரத்மலான விமான நிலையத்திற்கு பாதுகாப்பாக அழைத்து செல்லப்பட்டோம்.

மேலும் விடுதலைப்புலிகள் ஒரு இயக்கமாக இருந்தாலும் அந்த இயக்கத்தில் இருந்தவர்கள் விடுதலை புலிகள் என்ற உயரிய சிந்தனைகளில் இருந்தார்களா? என்பதை நாம் சிந்திக்க வேண்டும்.அதாவது விடுதலை புலிகளின் உயர் மட்டத்தலைவர்கள் என கூறப்படுவோர் தற்போது கூட சிங்கள கட்சிகளின் உயர்பதவிகளில் வந்து இருக்கின்றார்கள்.இவ்வாறானவர்களும் விடுதலைப்புலிகளில் கடந்த காலங்களில் அங்கம் வகித்துள்ளார்கள் என்பதை நாங்கள் புரிந்து கொள்ள முடிகின்றது.

ஆகவே விடுதலைப்புலிகள் என்ற விடயம் ஒரு சர்ச்சைக்குரிய விடயமாகும். கடந்த காலத்தில் விடுதலைப் புலிகளுடன் இடம்பெற்ற யுத்தமானது வெல்லப்பட்டது என்பதற்காகவே ராஜபக்ஸக்களை மக்கள் ஆட்சிக்கு கொண்டு வருகின்றார்கள்.

இந்த யுத்தமானது வெளிநாடு ஒன்றுடன் செய்யப்படவில்லை.இலங்கை பிரஜைகளுடன் தான் இலங்கை அரசாங்கம் யுத்தம் செய்தது உண்மையாகும்.இந்த யுத்தமானது சரியான வழியில் வெல்லப்பட்டதாக நான் நினைக்கவில்லை.அதாவது உள்நாட்டு யுத்தம் அல்லது பிரச்சினை என்றால் அது ஒரு பேச்சுவார்த்தை மேசையில் தான் முடிந்திருக்க வேண்டும்.ஒரு போர்க்களத்தில் நின்று கொண்டு பொதுமக்களை இராணுவம் சுட்டுத்தள்ளி அல்லது ஒரு விடுதலை இயக்கம் இராணுவத்தை சுட்டுத்தள்ளுவதை ஒரு காலமும் யுத்தமோ சமாதானமோ என்று கூற முடியாது.

இந்த போரின் முடிவு சமாதான முறையில் நிறைவிற்கு கொண்டு வரவில்லை.பெரும் அழிவுகளுடன் தான் அவ்யுத்தம் நிறைவடைந்தது.உதாரணமாக தென்னாபிரிக்காவில் 243 இயக்கங்கள் போர் இட்டு வந்திருந்தன.அதில் வெள்ளையர் கறுப்பர் குழு மோதலும் இடம்பெற்றிருந்தது.

நெல்சன் மண்டேலா அந்த காலகட்டத்தில் வெஸ்மன் ரூட்டோ போன்றவரகள் இப்போராட்ட இயக்கங்களுடன் எத்தனையோ பேச்சுவார்த்தைகளை நடாத்தி 11 குழுக்களாக மேற்குறித்த இயக்கங்களை ஒருங்கிணைத்தனர்.இவ்வாறு 11 குழுக்களுடனும் பின்னர் அவர்கள் பேச்சுவார்த்தை மேற்கொண்டு பிணக்குகளை தீர்த்து வைத்தனர்.இதனால் தான் அவருக்கு கூட நோபல் பரிசு கிடைக்கப்பெற்றிருந்தது.

இந்த நாட்டிலும் ஒரு இணக்கப்பாட்டுடன் நடந்து முடிந்த யுத்தத்தை முடிவிற்கு கொண்டு வந்திருந்தால் இவர்களுக்கும் நோபல் பரிசு கிடைக்க சந்தர்ப்பம் கிடைத்திருக்கும்.ஆனால் இந்த யுத்தமானது அரைகுறையாக நிறைவடைந்து விட்டது என்பதே உண்மையாகும்.சமாதான மேசையில் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டு இந்த யுத்தம் முடிவிற்கு கொண்டு வரப்படவில்லை.மாறாக பெரும் அழிவு யுத்த அவலத்துடன் தான் இந்த யுத்தம் அரைகுறையாக நிறைவடைந்துள்ளது என்பதை நான் பார்க்கின்றேன் என்றார்.



மதுரை ஸ்ரீ மீனாட்சி அம்மன் துணை

ஜாதகம் பார்க்கப்படும்

கடந்த 40 வருடமாக தென்னிந்தியா, ஆசியா, அவுஸ்திரேலியா, ஐரோப்பா, வட அமெரிக்கா மற்றும் கனடாவில் பல தமிழ் மக்களின் வாழ்க்கையை மாற்றியமைத்த திரு. கோ. காசிலிங்கம் அவர்கள் இப்போது கனடாவில். பிறந்த வருடம், மாதம், திகதி, நேரத்தை சொன்னால் போதும் நந்தி வாக்கியம் மூலம் நாள் நட்சத்திரம் கண்டு நடந்தது நடக்கப் போவதை தனது திறமையால் மிகத் துல்லியமாகக் குறித்து எழுதி பலன் சொல்லப்படும்.

குழந்தைகளுக்கு ஜாதகம் எழுதிக் கொடுக்கப்படும்

திருமணப் பொருத்தம் பார்த்து சொல்லப்படும்

கோ. காசிலிங்கம்

1320 Pharmacy Ave, Scarborough ON, M1R 2T3 (Main Intersection Pharmacy and Ellesmere Rd)

Phone:- 437-925 5643 Whatsapp:- 437- 329 4164



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் ஊர்தி மன்னாரை வந்தடைந்தது

தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாடு செய்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் ஊர்தி பவணி திங்கட்கிழமை (16) மன்னாரை வந்தடைந்தது.

கடந்த 12 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் ஆரம்பமானது. இதன் போது வடக்கில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் குறித்த நினைவேந்தல் ஊர்தி சென்று முள்ளிவாய்க்கால் வாரம் அனுஸ்ரிக்கப்பட்டு வருகின்றது.



இந்த நிலையில் முள்ளிவாய்க்கால் வாரத்தின் 5 ஆவது நாளான திங்கட்கிழமை (16) குறித்த ஊர்தி மன்னாரை வந்தடைந்தது.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு முன் அஞ்சலி இடம் பெற்றது. தமிழினப் படுகொலைக்கு நீதி கோரி இடம் பெற்ற ஊர்திப்பவனியில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பிரதி நிதிகள் மற்றும் மக்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்த மக்களை நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனைத்தொடர்ந்து கலந்து கொண்டவர்களுக்கு முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

**- மன்னார் நிருபர்**



# மீண்டும் வடக்கு – கிழக்கின் இளைஞர்களால் சிறைகளை நிரப்பும் நிலை ஏற்படலாம்: அருட்தந்தை மா.சக்திவேல்



அரசியல் கைதிகள் தாம் எப்போது விடுதலை அடைவோம் என ஏங்கித் தவிக்கும் நிலையில், மீண்டும் வடக்கு, கிழக்கின் இளைஞர்களால் சிறைகளை நிரப்பும் நிலையும் அத்தோடு சிறைக்குள்ளேயே வன்முறையும் வெடிக்கலாம் என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இவ்வாறு கூறியுள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, த ஹிந்து பத்திரிகையின் "மே பதினெட்டில் முன்னாள் விடுதலைப்புலி போராளிகள் தாக்குதல் நடத்த உள்ளார்கள்" என்பது அரசியல் சதி மட்டுமல்ல, வடக்கு, கிழக்கில் இராணுவ கட்டமைப்பை மேலும் பலப்படுத்தவும் அப்பாவி இளைஞர்களைச் சிறைக்குள் தள்ளவும் வழிவகுக்கும்.

மறைந்திருக்கும் மகிந்த ராஜபக்ச வெளியே வருவதற்கும், காலிமுகத்திடலின் "கோட்டா கோ ஹோம்", அலரிமாளிகையின் முன்னால் நடக்கும் "நோ டீல் கம" போராட்டங்கள் நீர்த்துப் போகச் செய்வதற்கான சூழ்ச்சியாகவே கொள்ள வேண்டும்.

மீண்டும் வடக்கு - கிழக்கின் இளைஞர்களால் சிறைகளை நிரப்பும் நிலையும் ஏற்படலாம்: அருட்தந்தை மா.சத்திவேல்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச காலிமுகத்திடல் போராட்டத்தை நீர்த்துப் போகச் செய்வதற்காக எடுத்த முயற்சிகள் அனைத்தும் தோல்வி கண்டுள்ளன.

இந்நிலையில் அரச பயங்கரவாதத்தின் துணையோடு வன்முறையைக் கட்டவிழ்த்து விட்ட நிலையில், அதுவும் தோல்வியில் முடியவே தற்போது பாதுகாப்பு கருதி தமிழர் பகுதியிலேயே மறைந்து வாழும் நிலையில் அந்த வெட்கத்திலிருந்து மீள்வதற்கு இந்து பத்திரிகை செய்தி துணையாக உள்ளது.

அத்தோடு தமது அரசியல் நலனுக்காகக் கடந்த காலங்களில் இனவாத, மதவாத வன்முறைக்குத் துணை நின்றவர்களின் ஆதரவோடு இனவாதத்தையும், மதவாதத்தையும் மீண்டும் தேசியக்கொடியாக்கியே ஆட்சியில் அமர்ந்தவர்கள் அதனை கைவிடவில்லை.

கடந்த 9ஆம் திகதி அவர்களின் வன்முறை கும்பல் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து நீர்கொழும்பில் கிறிஸ்தவ முஸ்லிம் சமய பிரிவினரை மோத விடுவதற்குத் திட்டமிட்டுச் செயல்பட்டனர். அதுவும் தோல்வி கண்ட நிலையிலேயே அடுத்த கட்டத்தில் முன்னெடுப்பாக இந்து பத்திரிக்கை செய்தி அமைந்துள்ளது.

2019 தொடர்ந்து பல்வேறு வகையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலைத் தடுக்க முயற்சி செய்தவர்கள் தற்போதைய சூழ்நிலையில் இந்து பத்திரிகையின் ஊடாக புலி புரளியைக் கிளப்பி அடுத்த இனகலவரத்திற்கும் விடுகிறார்களோ எனவும் சிந்திக்கத் தோன்றுகின்றது.

அரசியல் கைதிகள் தாம் எப்போது விடுதலை அடைவோம் என ஏங்கித் தவிக்கும் நிலையில், மீண்டும் வடக்கு, கிழக்கின் இளைஞர்களால் சிறைகளை நிரப்பும் நிலையும் ஏற்படலாம். அத்தோடு சிறைக்குள்ளேயே வன்முறையும் வெடிக்கலாம்.

2009 தொடர்ந்து ஆயுதம் மௌனிக்கப்பட்ட நிலையில் சாத்வீக போராட்டத்தை முன்னெடுத்துக் கொண்டிருக்கும் வடக்கு, கிழக்கு மக்கள் சர்வதேச ரீதியில் நீதியின் கதவை தட்டிக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் தாயக பிரதேசத்தில் உள்ள புல்லுருவிக களை அடையாளங்கண்டு அவதானமாகச் செயற்பட வேண்டிய காலம்மிது.

இது மே 18 நினைவேந்தலுக்குப் பின்னரும் தூர நோக்கோடு பயணிக்க வேண்டும் என்பதையும் உணர்த்துகின்றது. தமிழ் மக்களின் அரசியல் எதிரிகள் பல்வேறு முகங்களோடு விழிப்புடன் இருக்கையில், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாளன்று உணர்வுப் பூர்வமாகச் சுடரேற்றும் அனைவரும் அரசியல் எதிரிகளுக்குத் துணை போகும் அரசியலை முன்னெடுக்கமாட்டோம் எனவும் தியாகச்சுடர் முன் உறுதியேற்க வேண்டும்.

அதுவே அரசியல் எதிரிகளைத் தோல்விக்கான செய்யும். ஒரு இலக்கோடு அரசியல் இலக்கையும் அடைவதற்கும் வழி வகுக்கும்" இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

# தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்ச்சி




தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்ச்சி செவ்வாய்க்கிழமை (17.05.2022) இடம்பெற்றது.

தமிழினப் படுகொலை நாளான மே-18 ஐ நினைவுகூரும் முகமாக ஆண்டுதோறும் மே-12 இல் இருந்து 18 வரையான ஒருவார காலப்பகுதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரமாகத் தமிழர் தாயகம் எங்கும் உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இதனை முன்னிட்டு தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் நினைவேந்தல் நிகழ்ச்சி யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் அமைந்துள்ள அதன் தலைமைப் பணிமனையின் முன்பாக இடம்பெற்றுள்ளது. தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் நினைவுச்சுடர் ஏற்றி முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தோருக்கு அஞ்சலி செலுத்தியதைத் தொடர்ந்து, முள்ளிவாய்க்கால் கஞ்சி அனைவருக்கும் பரிமாறப்பட்டது.





யுத்தத்தின்போது முள்ளிவாய்க்காலில் உணவின்றித் தவித்த மக்களுக்கு விடுதலைப் புலிகளினாலும், பொது அமைப்புகளினாலும் தயாரித்து வழங்கப்பட்ட உப்புக் கஞ்சியே ஒரேயொரு உயிர் ஆகாரமாக இருந்து வந்தது. இதனால், எமது எதிர்கால சந்ததிகளுக்குப் போரின் வலியையும் தமிழினம் பட்ட வதையையும் எடுத்துச்சொல்லும் விதமாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தில் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# முள்ளிவாய்க்கால் வாரத்தையொட்டி மன்னாரில் முள்ளிவாய்க்கால் கஞ்சி மக்களுக்கு வழங்கி வைப்பு



மே-18 முள்ளிவாய்க்கால் வாரத்தையொட்டி வியாழக்கிழமை (12) காலை 10.30 மணியளவில் மன்னார் பள்ளிமுனை பெருக்க மரத்தடி பகுதியில் மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்கத்தின் தலைவி மனுவல் உதயச்சந்திரா தலைமையில் மன்னார் பள்ளிமுனை பெருக்க மரத்தடி பகுதியில் மே-18 முள்ளிவாய்க்கால் வாரத்தையொட்டி முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சும் நடவடிக்கை இடம் பெற்றது.

அதனைத்தொடர்ந்து பள்ளிமுனை பங்குத்தந்தையின் மத பிரார்த்தனை யை தொடர்ந்து அங்கு கூடி நின்றவர்களுக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்க உறுப்பினர்களினால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வளாகத்தி செய்தில் சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளருக்கு அச்சுறுத்தல்

இலங்கை செய்திகள் Sri Lanka News



தமிழினப் படுகொலை நினைவேந்தல் நிகழ்வுகள் இம்மாதம் 18ஆம் திகதி இடம் பெறவுள்ள நிலையில் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் நிலைமைகள் தொடர்பில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்களுக்கு பொலிசார் அச்சுறுத்தல் விடுத்துள்ளனர்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வளாகத்திற்கு அருகில் இராணுவ காவலரண் ஒன்று அமைக்கப்பட்டு கண்காணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதோடு முள்ளிவய்க்கால் நினைவு முற்றத்திற்கு அருகில் பொலிசாரும் காவல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அத்தோடு முள்ளிவய்க்கால் நினைவு முற்றத்திற்கு திரும்பும் சந்தியில் இராணுவத்தினர் போலிசார் குவிக்கப்பட்டு சோதனைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தை சென்று ஊடகவியலாளர் சண்முகம் தவசீலன் வீடியோ பதிவு செய்ததன் பின்னர் ஊடகவியலாளர் திரும்பி சென்ற நிலையில் முள்ளிவய்க்கால் நினைவு முற்றத்திற்கு திரும்பும் சந்தியில் நின்ற பொலிசார் இராணுவ புலனாய்வாளர்களின் தூண்டுதலின் பெயரில் குறித்த சந்தியில் ஊடகவியலாளரை மறித்தனர்.

ஊடகவியலாளர் எதற்காக மறிக்கிரீர்கள் என்று கேட்டபோது எந்தவித பதிலையும் சொல்ல முடியாது நின்ற பொலிசார் சிறிது நேரத்தில் ஊடகவியலாளரின் அடையாள அட்டையை கோரினர் அடையாள அட்டை வழங்கிய ஊடகவியலாளர் ஏன் என்று கேட்டபோது வீடியோ எடுத்தீர்களா? என கோரி தங்களுடைய பதிவேடு ஒன்றில் விபரங்களை பதிவு செய்தனர்.

இவ்வாறான பின்னணியில் பொலிசாரின் உடையை இந்த செயற்பாடுகள் தொடர்பில் காணொளி பதிவு செய்ய முயன்ற போது உங்களுடைய வாகனத்தின் சாரதிஅனுமதி பத்திரம் மற்றும் ஆவணங்களை காண்பிக்குமாறு பொலிஸார் கோரி அவற்ரையும் வாங்கி பதிவுசெய்து அனுப்பியுள்ளனர்.

ஊடகவியலாளர் வரும்போது குறித்த பகுதியில் இராணுவ புலனாய்வாளர்கள் பொலிசாருடன் கலந்துரையாடிய வண்ணம் இருந்ததாகவும் அவர்களுக்கு தகவல்களை வழங்கவே பொலிசார் குறித்த நடவடிக்கையை மேற்கொண்டதாகவும் ஊடகவியலாளர் குற்றம் சுமத்தியுள்ளார்.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரத்தில் நினைவேந்தல் நிகழ்வுகள் செய்யப்படலாம் என்ற நிலையில் மக்களை அச்சமடைய செய்யும் நோக்குடன் பொலிஸார் அங்கு செல்பவர்கள் அச்சுறுத்தும் விதமாக இராணுவத்தினர், இராணுவப் புலனாய்வாளர்களுடன் இணைந்து தங்களுடைய நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.



இதன் ஒரு அங்கமாகவே குறித்த பகுதிக்கு சென்றுவந்த ஊடகவியலாளரை மறிந்த பொலிசார் ஊடகவியலாளரிடம் ஆவணங்களை கோரி ஆவணங்களை தங்களுடைய புத்தகங்களில் பதிவு செய்ததன் ஊடாக குறித்த தகவல்களை புலனாய்வாளர்களும் இராணுவத்தினருக்கும் வழங்குவதற்காகவே பெற்றுக் கொண்டுள்ளனர் எனவும் இராணுவம், புலனாய்வாளர்கள் விபரங்களை பெற்றால் அது பிரச்சினையாக வரும் என்பதால் அவர்களின் எடுபிடிகளாக பொலிசார் செயற்படுவதாக ஊடகவியலாளர் குற்றம் சுமத்தியுள்ளார்.

**- மன்னார் நிருபர்**



# மன்னார் இளைஞர்களால் சாந்திபுரம் பௌத்த விகாரை சுத்தப்படுத்தும் செயல்பாடு முன்னெடுப்பு

இளைஞர்கள் மத்தியில் "சமூக ஒத்திசை வை பலப்படுத்தல்" எனும் தொனிப் பொருளில் வாழ்வுக்கான தன்னார்வத் தொண்டர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் ரஹமா நிறுவனத்தின் அனுசரணையில் முன்னெடுக்கப்பட்டுவரும் இளைஞர் செயற் திட்டத்தின் ஒரு பகுதியாக ஞாயிற்றுக்கிழமை (15) காலை சாந்திபுரம் பௌத்த விகாரை சிரமதான பணி முன்னெடுக்கப்பட்டது.

பௌத்த மக்களால் வெசாக் தினம் கொண்டாடப்படவுள்ள நிலையில் திருமதி ரெஜினா ராமலிங்கம் தலைமையில் லியோ மற்றும் இளைஞர் கழகங்கள், தன்னார்வ இளைஞர்கள் இணைந்து குறித்த சிரமதான பணியை முன்னெடுத்திருந்தனர்.

குறித்த சிரமதான பணியில் சர்வமத இளைஞர்கள் மற்றும் யுவதிகள் கலந்து கொண்டு மதங்களுக்கிடையிலான புரிந்துணர்வை செயற்பாட்டு ரீதியாக வெளிப்படுத்தினர்.



குறித்த சிரமதான பணியில் அதிகளவான இஸ்லாமிய இளைஞர் யுவதிகளும் கலந்து சிரமதான பனியை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



RIGHT AT HOME REALTY INC.
Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

# சீமான் தலைமையில் நடைபெற்ற மே 18, இன எழுச்சிப் பொதுக்கூட்டத் தீர்மானங்கள்



மே 18 தமிழினப் படுகொலை நாள்: 13 ஆண்டுகளுக்கு முன்னர் இதே நாட்களில் ஈழப்பெருநிலத்தில் இலட்சக்கணக்கில் இனப்படுகொலை செய்யப்பட்ட நம் உறவுகளை நினைவுகூரவும், வீழ்ந்த இடத்திலிருந்து மீள் எழுச்சிப்பெற்று, அவர்கள் விட்டுச்சென்ற தாயக இலட்சியக் கனவினை தொடர்ந்து முன்னெடுத்து வென்றிடும் நோக்கிலும், 18-05-2022 அன்று பூந்தமல்லியில் நாம் தமிழர் கட்சி சார்பாக தலைமை ஒருங்கிணைப்பாளர் செந்தமிழன் சீமான் அவர்களின் தலைமையில் நடைபெற்ற மாபெரும் இன எழுச்சிப்பொதுக்கூட்டத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டத் தீர்மானங்கள்:

1. தமிழ்த்தேசிய இனத்தின் மற்றொரு தாய் நிலமான தமிழீழ மண்ணில் இனப்படுகொலைக்கு தமிழர்கள் ஆட்படுத்தப்பட்டு, பதின்மூன்று ஆண்டுகள் கடந்துவிட்டப்பின்னரும் இன்னும் எவ்விதமான நியாயத்தீர்வும் கிடைத்தபாடில்லை. எம்மின மக்களுக்கு உள்ள ஒரே அரசியல் தீர்வு என்பது பொது வாக்கெடுப்பு மட்டுமே! ஐ.நா.மன்றம் மற்றும் உலக நாடுகள் முன்னிலையில் சனநாயக முறைமையில் ஒரு பொது வாக்கெடுப்பை நடத்தி சிங்களர்களோடு சேர்ந்து





வாழ்கிறீர்களா? அல்லது தனித்தமிழீழ சோசலிசக்குடியரசு நாடாக மீள்கிறீர்களா? என்கிற முடிவை எம் மக்கள் சுதந்திரமான வகையில் எடுப்பதற்கான ஒழுங்கை, இந்தியா உள்ளிட்ட உலக அரங்கு ஏற்படுத்தித் தரவேண்டும் என்பதுதான் எம்மக்களின் நீண்ட நாள் எதிர்பார்ப்பாக இருந்து வருகிறது. இனப்படுகொலைக்கு உள்ளாகி, உயிர், உரிமை, உடைமை, நிலம் என அனைத்தையும் இழந்து நிற்கும் எம் மக்களுக்கு தனித்தமிழீழம் மட்டுமே தீர்வாக இருக்க முடியும் என்பதையுணர்ந்து இந்திய ஒன்றிய அரசு பொதுவாக்கெடுப்பிற்கான முன்னெடுப்புகளைச் செய்ய பன்னாட்டுச்சமூகத்திற்கு அரசியல் நெருக்கடி தர வேண்டும் எனவும், அதற்கான உரிய அரசியல் அழுத்தங்களை ஒட்டுமொத்த தமிழினத்தின் சார்பில் தமிழக அரசு இந்திய ஒன்றிய அரசிற்குத் தர வேண்டுமெனவும் இந்தப் பொதுக்கூட்டத்தின் வாயிலாக நாம் தமிழர் கட்சி வலியுறுத்துகிறது.

2. சிங்கள இனவாத அரசும், இந்தியப் பேரரசும் உலக வல்லாதிக்கங்களின் துணையோடு ஈழ நிலத்தில் நிகழ்த்திய இனப்படுகொலைக்கு இன்னும் நீதி கிடைத்திராத சூழலில், தாயக விடுதலைப்போராட்டக் காலக்கட்டத்தில் சிங்கள அரசால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் உயிரோடு இல்லை என்று கூறி, சிங்கள இனவாத அரசு பொத்தாம் பொதுவாக அலட்சிய மனப்பான்மையுடன் தமிழர்களைப் புழுவினும் கீழாகக் கருதி கடந்து செல்ல முற்படுவது இனப்படுகொலை செய்யப்பட்ட இனத்திற்கு இழைக்கப்பட்ட மற்றுமொரு பெரும் அநீதியாகும். காணா-மல் ஆக்கப்பட்ட தமிழர்கள் உணவின்றி இறந்தார்களா? உடல் நலிவுற்று இறந்தார்களா? இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டார்களா? தூக்கிலிடப்பட்டார்களா? உயிரோடு புதைக்கப்பட்டார்களா? எரிக்கப்பட்டார்களா? கடலி-ல் எறியப்பட்டார்களா? என்கிற எந்த கேள்வியையும் மனித மாண்பும், நாகரீகமும் வளர்ந்த இத்தனை நாடுகள் இந்தப்பூமிப்பந்தில் இருந்தும் ஒரு நாட்டிற்கும் கேட்க வேண்டும் என்று தோன்றவில்லை என்பதோடு மட்டுமில்லாமல், எந்த ஒரு நாட்டின் மனசாட்சியையயும் தமிழர் அழிவு உலுக்கவில்லை என்பது உச்சபட்ச வேதனைக்குரியது. ஐ.நா. மன்றம் உட்பட அத்தனைப் பன்னாட்டு மன்றங்களிலும் இந்தக்கேள்வியை எழுப்பி அதன் வாயிலாகக் காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களின் குடும்ப உறவுகளின் கண்ணீருக்கு இனிமேலாவது நீதி கிடைத்திட உலக நாடுகள் முன்வர வேண்டும் எனவும், இனப்படுகொலை மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் குறித்துப் பன்னாட்டுப்போர்க்குற்ற விசாரணையை ஐ.நா. மன்றமும், உலக நாடுகளும் உடனடியாக மேற்கொள்ள வேண்டும் எனவும், கடந்த 13 வருடங்களாக உலகத்தமிழர்கள் கோரி வருகின்ற மானுட நீதி இனியும் மறுக்கப்படக்கூடாது எனவும் பொதுக்கூட்டத்தின் வாயிலாக நாம் தமிழர் கட்சி வலியுறுத்துகிறது.





3. தமிழர்களின் பூர்வீக நிலமான தமிழீழ மண்ணின் மொழி, பண்பாட்டு வரலாற்றுக்காரணிகளை அழித்து, தமிழர்களின் நிலங்களை பறித்து சிங்கள இனவாத அரசு, சிங்களக்குடியேற்றங்களை தொடர்ச்சியாக செய்து வருகிறது. உடனடியாக, இந்தக் குடியேற்றங்கள் தடுத்து நிறுத்தப்பட வேண்டியது மட்டுமில்லாமல், ஏற்கனவே சிங்களக்குடியேற்றங்களால் பறிக்கப்பட்ட தமிழர் மண்ணை மீட்டு, மீண்டும் எம் மக்களிடமே ஒப்படைக்க வேண்டும் எனவும், இதற்கான வலிமையான அரசியல் அழுத்தங்களை இந்திய ஒன்றிய அரசு இலங்கை அரசுக்குக் கொடுத்திட வேண்டும் எனவும் இந்தப் பொதுக்கூட்டத்தின் வாயிலாக நாம் தமிழர் கட்சி வலியுறுத்துகிறது.

4. ஊழல் நிறைந்த ஆட்சி முறை, குடும்ப அரசியல் போன்றவற்றால் இலங்கையில் ஆட்சி அதிகாரத்தை இழந்து, மக்களின் எதிர்ப்பினை தாங்க முடியாமல் இன்று ஓடி ஒளிந்து கொண்டு இருக்கின்ற இனப்படுகொலையாளன் மகிந்தா ராஜபக்சேவிற்கு இந்திய ஒன்றிய அரசு எவ்வித அடைக்கலமும் தரக்கூடாது எனவும், ஒட்டுமொத்த தமிழர்களும் வெளிப்படுத்தும் எதிர்ப்புணர்வுக்கு மதிப்பளித்து, வேறு எந்த உதவிகளும் செய்திடக்கூடாது எனவும் இந்தப் பொதுக்கூட்டம் வாயிலாக நாம் தமிழர் கட்சி வலியுறுத்துகிறது.

5. போரின்போதும், போருக்குப் பின்பும், தாய்த்தமிழ்நாட்டை நாடி வந்த எம் இரத்த உறவுகளான தமிழீழச்சொந்தங்களை, "சிறப்பு முகாம்கள்" என்ற பெயரில் திறந்தவெளிச்சிறைக்கூடங்களுக்குள் அடைத்து வதைக்கும் போக்கை ஒன்றிய, மாநில அரசுகள் உடனடியாகக் கைவிட வேண்டுமெனவும், அவர்களுக்கான குடியுரிமை, கல்வி, வேலைவாய்ப்பு, உள்ளிட்ட இன்றியமையாச் சமூகப்பொருளாதார மேம்பாடுகளில் சமவாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும் எனவும் இந்த இன எழுச்சிப் பொதுக்கூட்டத்தின் வாயிலாக நாம் தமிழர் கட்சி வலியுறுத்துகிறது.

6. கடுமையானப் பொருளாதார நெருக்கடியில் சிக்கிக்கொண்டிருக்கும் இலங்கைக்கு இந்திய ஒன்றிய அரசு செய்து வருகின்ற உதவிகள் அனைத்தும் சிங்களர்களுக்கு மட்டுமே சென்று சேருவதை நாம் தமிழர் கட்சி கடுமையாக எதிர்க்கிறது. தமிழர்களாகிய நாங்கள் வாக்கு செலுத்தி, வரிசெலுத்தி செழுமைப்படுத்தி வருகிற இந்திய ஒன்றிய அரசு, இலங்கை மண்ணின் பூர்வக்குடிகளான ஈழத்தமிழர்களுக்கும் எல்லா உதவிகளும் சென்று சேர்வதை உறுதிப்படுத்த வேண்டுமென இந்த பொதுக்கூட்டம் வாயிலாக நாம் தமிழர் கட்சி வலியுறுத்துகிறது.

7. இராமநாதபுரம் சேதுபதி மன்னருக்கு சொந்தமான தமிழர்களின் தொன்றுதொட்ட நிலவுடைமையான கச்சத்தீவை, தமிழ்நாடு அரசின் ஒப்புதலைப் பெறாமலும், இந்திய நாடாளுமன்றத்தைக் கூட்டி தீர்மானம் நிறைவேற்றாமலும், தன்னிச்சையாக அன்றைய காங்கிரசு அரசு இலங்கைக்குத் தாரைவார்த்தது தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட வரலாற்றுத் துரோகமாகும். கடந்த 50 ஆண்டுகாலமாக தமிழகத்தை ஆளும் இரு திராவிட அரசுகளும் கச்சத்தீவை மீட்பதாகத் தேர்தல் கால அறிக்கை நாடகம் ஆடுவதை நாம் தமிழர் கட்சி இந்நேரத்தில் சுட்டிக்காட்டுகிறது. மேலும், கச்சத்தீவு குறித்து உச்சநீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்கை விரைவுப்படுத்தி, கச்சத்தீவை மீட்பதற்கான நேர்மையான முயற்சியை மேற்கொள்ள திமுக அரசு முன்வர வேண்டும் எனவும் இப்பொதுக்கூட்டம் வலியுறுத்துகிறது.

8. தமிழ்நாட்டு மீனவர்கள் தொடர்ச்சியாக இலங்கை இராணுவத்தால் கைதுசெய்யப்படுவதை நிரந்தரமாக தடுத்து நிறுத்த இந்திய ஒன்றிய அரசு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். திமுக ஆட்சிக்கு வந்தப் பிறகு, தமிழ்நாட்டு மீனவர்கள் தாக்கப்படுவதும், படகுகள் பறிமுதல் செய்யப்படுவதும் அதிகரித்துள்ளதை நாம் தமிழர் கட்சி சுட்டிக்காட்டுகிறது. நாடாளுமன்றத்தில் தமக்குள்ள அதிகாரப்பலத்தை பயன்படுத்தி தமிழக மீனவர்கள் சிக்கலுக்கு நிரந்தர தீர்வு காண ஒன்றிய அரசிற்கு திமுக அரசு உரிய அழுத்தம் கொடுக்க வேண்டும் என இப்பொதுக்கூட்டத்தின் வாயிலாக நாம் தமிழர் கட்சி வலியுறுத்துகிறது.

9. 31 ஆண்டுகள் கொடுந்தாமதத்திற்குப் பிறகு, விடுதலை கிடைத்திருந்தாலும், பேரறிவாளனுக்கு இன்று கிடைத்திருக்கும் நீதியை இந்த இன எழுச்சி நாளின் சிறப்பாகவே கருதி நாம் தமிழர் கட்சி பெருமகிழ்ச்சியோடு அதனை வரவேற்கிறது. இந்த வரலாற்றுச் சிறப்புமிக்கத் தீர்ப்பை வழங்கிய உச்சநீதிமன்றத்தின் மாண்புமிகு நீதியரசர்கள் பி.ஆர். கவாய் மற்றும் நாகேஸ்வர ராவ் ஆகியோரது அமர்வுக்கு இப்பொதுக்கூட்டத்தின் வழியே நாம் தமிழர் கட்சி தன் மாண்பு நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறது. எழுவரை விடுதலை செய்யும் தமிழ்நாடு அரசின் அமைச்சரவைத் தீர்மானத்தில் கையெழுத்திடாது, அரசியலமைப்புச்சாசனத்திற்கு எதிராக மூன்று ஆண்டுகள் காலந்தாழ்த்திய தமிழ்நாடு ஆளுநருக்கு இப்பொதுக்கூட்டம் வாயிலாக கண்டனங்களைப் பதிவுசெய்வதோடு, இவ்வழக்கில் சிக்கி இன்னும் சிறைக்கொட்டடியில் வாடி வருகிற முருகன், சாந்தன், நளினி, இராபர்ட் பயாஸ், ரவிச்சந்திரன், ஜெயக்குமார், ஆகிய 6 தமிழர்களையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமெனவும், ஆளுநரோ, ஆட்சியாளர்களோ இனியும் அவர்களது விடுதலையில் குறுக்கிட்டு, காலந்தாழ்த்தக்கூடாது எனவும் நாம் தமிழர் கட்சி இந்தத் தமிழின எழுச்சிப் பொதுக்கூட்டத்தின் வாயிலாக வலியுறுத்துகிறது.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.





# ஐநா மனித உரிமை ஆணைய ஈழத்தமிழரின் நீதி விசாரணைகளில் இனவழிப்பாளர்களைப் பாதுகாத்த ரணில் மீண்டும் பிரதமரானார்

International Council of Eelam Tamils
அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை

**ஈழத்தமிழருக்கான நிரந்தர அரசியல் தீர்வை வழங்கும் வரை இலங்கைத்தீவில் என்றுமே அமைதியானதும் சுபீட்சமானதுமான மக்கள் வாழ்விற்கு இடமில்லை. - அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை**

ஆயிரமாயிரம் கறுப்பு யூலைகளையும், செம்மணிகளையும், செஞ்சோலைகளையும் ஒன்றாகச் சேர்த்து சிங்கள பௌத்த பேரினவாத பேயாட்சி ஆடிய ஊழிக்கூத்தின் அழியா சாட்சியாக முள்ளிவாய்க்கால் இரத்த சரித்திரத்தின் 13வது ஆண்டை கடக்கும் நிலையில், ஈழத்தமிழர்களை இனவழிப்புச்செய்த ராஜபக்ச சகோதரர்களின் ஆட்சிக்கெதிராக சிங்கள மக்களே கிளர்ந்து எழுந்துள்ளனர். 13வது இனவழிப்பு நினைவேந்தல் நாளில் கொடுங்கோலர்களின் ஆட்சி அவர்களது சொந்த மக்களாலேயே அடித்துத் வீழ்த்தப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. இலங்கையில் இருந்து ஆங்கிலேயர்கள் வெளியேறிய காலத்திலிருந்து ஈழத்தமிழர்களை வஞ்சித்து செய்த இனவாத அரசியலின் விளைவே இன்றைய நிலைக்குக் காரணம். ஈழத்தமிழருக்கான நிரந்தர அரசியல் தீர்வை வழங்கும் வரை இலங்கைத்தீவில் என்றுமே அமைதியான வாழ்வும் ஆரோக்கியமான பொருளாதார வளர்ச்சியும் கிட்டாது என்பது நிதர்சனமான உண்மை.

கொன்று பிணமாகவும், உயிருடனும் முள்ளிவாய்க்காலில் புதைக்கப்பட்ட 70.000ற்கு மேற்பட்ட எமது உறவுகளுக்கு கிடைக்கும் நீதியானது எமக்கானதாக மட்டுமன்றி அனைத்துலக மனிதநேயத்தின் மாண்பினை காப்பதாகவும் அமையும். ஏனென்றால், தமிழர் உடல்களுடன் அனைத்துலக மனிதநேயமும் முள்ளிவாய்க்கால் மண்ணில் ஆழப்புதைக்கப்பட்டுள்ளது. விடுதலை வேட்கையுடன் மரித்துப்போன மண்ணுறங்கும் மாவீரர்கள் விடுதலையின் பால் கொண்ட பற்றுறுதியே இன்று சிங்களத்தை அல்லோலகல்லோலப் படுத்துகின்றது. தமிழர்களைத் துயிலுரிந்து மானபங்கப்படுத்தியவர்கள், இன்று தங்கள் சொந்த இனத்தாலேயே துயிலுரிந்து அடித்துக் கலைக்கப்படுகிறார்கள்.

இன்று வரை 146,679 பேருக்கு என்ன நேர்ந்தது என்பது தெரியாமலே 13 ஆண்டுகள் கடந்துவிட்டது. ஒருபக்கம் எமக்கான நீதி தடுத்து தாமதப்படுத்தப்பட்டு வருகையில் மறுபக்கம் வேறு வடிவிலான இனவழிப்பு செயற்பாடுகளும் சிங்கள அரசுகளால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. 2009ல் ஆயுதம் மௌனிக்கப்பட்ட பின்னரும் வடக்குக் கிழக்கில் 300.000 இராணுவத்தினர் குடிகொண்டுள்ளனர். இராணுவத்தளபதியும் இனவழிப்பாளனுமான சவேந்திர சில்வா எந்தத் தயக்கமும் இல்லாமல் வடக்கில் அமைக்கப்படும் பௌத்த விகாரையைப் பார்வையிட வந்து செல்கிறான். சிங்கள மக்களை மூளைச்சலவை செய்து பௌத்த சிந்தனைவாதத்திற்குள்ளும் மகாவம்ச மாயைக்குள்ளும் வைத்துக்கொண்டு தமிழரையும் முசுலீம்களையும் நசுக்கி இனவாத அரசியல் மேற்கொண்டு வருகிறது சிங்களம். இன்றைய எதிர்ப்புகள் ராஜபக்சக்களோடு முடங்கிப் போகுமானால், எதிர்வரும் காலங்களில் மீண்டும் ராஜபக்சக்களோ அவர்களின் ஆதரவாளர்களோ ஆட்சிபீடமேறுவதற்கான சாத்தியமுண்டு. சிங்கள பௌத்த பேரினவாத கட்டமைப்பும் மகாவம்ச மனப்பாங்கும் மாறாமல் சிங்கள தேசத்தில் நீண்டகால மாற்றங்களை எதிர்பார்க்க முடியாது.

இலங்கை 70 ஆண்டுகளுக்கும் மேலாக அதன் மிக மோசமான நிதி நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. இலங்கையில் உணவுப் பொருட்களின் விலைகள் 2022 மார்ச் மாதத்தில் மட்டும் 30 வீதத்தால் அதிகரித்துள்ளன. சுற்றுலாப் பயணிகளைச் சார்ந்துள்ள நாட்டின் வாழ்க்கைச் செலவை நாட்டு மக்களால் தாங்க முடியாத அளவிற்கு மிக அகோரமாக அதிகரித்துள்ளது. இதன் விளைவாக சனாதிபதி இராஜினாமா செய்ய வேண்டும் என்று கோரி நாடு பூராவும் ஆயிரக்கணக்கானோர் அண்மையில் பாரிய ஆர்ப்பாட்டங்களில் வீதிகளில் இறங்கினர். 22 மில்லியன் மக்களைக் கொண்ட இலங்கைத் தீவு உணவு, எரிபொருள், மருந்து மற்றும் பிற அத்தியாவசிய அடிப்படைப் பொருட்களின் கடுமையான பற்றாக்குறையை அனுபவித்து வருகிறது. இது அரசிற்கு ஒரு பாரிய நெருக்கடியாகும், 1948ல் ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து சுதந்திரம் பெற்ற பின்னர் இலங்கைத் தீவில் ஏற்பட்டுள்ள மிக மோசமான பொருளாதார வீழ்ச்சியாகும். இப்படியான பெரு நிதி நெருக்கடி பல காரணிகளால் ஏற்படுகிறது, தமிழ் மக்களுடனான சிங்களப் பேரினவாதிகளின் இன முரண்பாட்டு அரசியல் முக்கிய காரணிகளில் ஒன்றாகும்.


Table 1: Defence Spending Higher Than Wartime Peak (Cont.)

| Average Military Expenditure, US$ million (2012 prices) | |
|---|---|
| Eelam War I (1983 – 1987) | 421 |
| Eelam War II (1990 – 1995) | 766 |
| Eelam War III (1995 – 2002) | 1,346 |
| CFA (2002 – 2005) | 1,056 |
| Eelam War IV (2006 – 2009) | 1,499 |
| **Post-War (2009 – 2017)** | **1,716** |

Source: SIPRI.

இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் உற்பத்திகளை ஏற்படுத்தி நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்குப் பதிலாக தமிழர்களை அழிப்பதிலேயே சிங்களத் தலைமைகள் கவனத்தைச் செலுத்தியதின் விளைவே இன்றைய பொருளாதார நெருக்கடிக்குக் காரணமாகும். சிங்கள அரசு நடாத்தய தமிழின அழிப்பிற்கு வாங்கிய கடன் சுமையின் எதிர்த்தாக்கமே இலங்கை மக்களை பட்டினி போட வைத்துள்ளது. சிங்கள மக்களால் தெரிவுசெய்யப்பட்ட கோட்டா அரசு இப்போது பணவீக்கத்திற்கு எதிராகவும், உணவு, எரிவாயு, மருந்துக்காகவும் போராடிக் கொண்டிருக்கிறது. ஆனால் 30 வருடங்களாக பட்டினியிலும் மண்ணெண்ணை ஒளியிலும் வாழ்ந்து பழகிய தமிழ் மக்கள் இன்றும் நீதிக்காகவும் ஒரு நிரந்தர அரசியல் தீர்வுக்காகவும் போராடிக் கொண்டிருக்கின்றனர். இந்த நெருக்கடிகளுக்கு மிக முக்கியமான காரணம் நீண்ட காலப் போர் தான். போருக்காகத்தான் கடன் பெறப்பட்டது. கொள்ளளவுக்கு மீறிய இராணுவம் உருவாக்கப்பட்டது. ஆயுதங்கள் வாங்கி குவிக்கப்பட்டன. ஊழலுக்கான சூழல் திறந்து விடப்பட்டது. இலங்கையின் அரச ஊதியம் பெறும் ஊழியர்களின் தொகையில் 48 வீதமான அரச ஊதியம் இராணுவத்திற்கே கொடுக்கப்படுகின்றது. 2009 ஆயத மௌனிப்பின் பின் இலங்கையின் இராணுவச் செலவுகள் 3 வீதமாக அதிகரித்துள்ளது. இராணுவ ஓய்வூதிய செலவுகள் மிகவேகமாக அதிகரித்து வருகின்றன.


Figure 3: Military Salaries Nearly Half of Government Salary Spending



Source: R Venugopal, op. cit.

சர்வதேச நாணய நியத்திடம் இருத்து நிதியைப் பெற்று இன்றைய பதட்டமான நிலையைச் சீர் செய்யலாம் என்ற கனவு உடனடியாக நிறைவேறாத பட்டசத்தில் நிலைமைகளைச் சீர்செய்யும் நோக்கில் மகிந்தரைப் பதவியில் இருந்து இறக்கி மக்களால் நிராகரிக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்கவை பிரதமர் பதவியில் ஏற்றி உள்ளனர். மக்களால் நிராகரிக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்க ஆறாவது முறையாக இலங்கையின் பிரதமராக பதவியேற்றுள்ளது உலக சாதனைகளில் ஒன்று எனபது உலகறிந்த விடயம். ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை எந்த சிங்களக் கட்சிகளும் நம்பிக்கைக்கு உரியவர்கள் அல்ல. சிங்கள தேசத்தின் இரண்டு பெரிய கட்சிகளும் தமிழ் மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களோ நம்பத்தகுந்தவர்களோ அல்ல. அமைதிப் பேச்சுவார்த்தை என்ற போர்வையில் தமிழ் மக்களையும் விடுதலைப்புலிகளையும் சுற்றி ஓர் சதிவலைப்பின்னலை ஏற்படுத்தி ஈழத்தமிழனா அழித்தது ரணில் விக்கிரமசிங்க என்பது யாரும் அறிந்த விடயம். இன்று இவரை ஆட்சியில் அமர்த்தும் சக்தி யார்? அவர்களின் நோக்கம் என்ன? இலங்கைத் தீவில் அவர்களின் நலன் என்ன? நாட்டுமக்களுக்கே ரணிலின் வருகை பற்றி பாரிய சந்தேகங்கள் உள்ளது. இவர் சனநாயக முறையில் தெரிவுசெய்யப்பட்டவரா? ஆல்லது நியமன அடிப்படையில் உள் நுழைகிறாரா? இவரை உள் நுழைப்பவர்கள் இந்தியாவா? அமெரிக்காவா? மேற்கா?

Figure 4: Military Pension Spending Rising Rapidly



Source: Department of Pensions, Government of Sri Lanka.

நல்லாட்சி அரசு என்று தங்களைத் தாங்களே குறிப்பிட்ட காலத்தில் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க மீண்டும் அரியாசனத்தில் அமர்த்தப்பட்டுள்ளார். வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளைத் தேடிய நூற்றிற்கு மேற்பட்ட உறவுகள் மரணித்துள்ள நிலையில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன பதில் சொல்லப்போகிறார். இவர் பிரதமராக இருந்த போது ஐநா மனித உரிமை ஆணையகத்தில் ஈழத்தமிழரின் நீதி விசாரணையை நீர்த்துப்போவதற்கான பெரு முயற்சிகளைச் செய்து இனவழிப்பாளர்களைப் பாதுகாத்தார்.

Table 2: Defence Spending 3x Higher Than Last Peacetime (Cont.)

| Defence Expenditure, % of GDP | |
|---|---|
| Peacetime (1948 – 1982) | 0.8% |
| Wartime (1983 – 2009) | 3.3% |
| **Post-War (2009 – 2017)** | **2.4%** |

Sources: World Bank and SIPRI.

ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை தமிழின அழிப்பிற்கு காலதாமதம் இன்றி உடனடியான அனைத்துலக சுயாதீன விசாரணை நடாத்தப்பட்டு குற்றவாளிகள் சர்வேதச நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும் என்ற விடா முனைப்புடன் செயற்பட்டு சிங்களத்திற்கும் சர்வதேசத்திற்கும் அழுத்தங்களை தொடர்ந்தும் கொடுக்கவேண்டும். தமிழர்களிடம் இருந்து கையகப்படுத்தப்பட்ட காணிகள் அனைத்தும் திருப்பி அளிக்கப்படுவதுடன் எதிர்காலத்தில் நடைபெற இருக்கும் சிங்களக் குடியேற்றங்கள், நில அபகரிப்புகளும் நிறுத்தப்பட வேண்டும். தமிழர்களின் கலை, கலாச்சாரம், பாரம்பரியம், பண்பாடுகளைச் சீரழிக்கும் அனைத்து நடவடிக்கைகளும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இலங்கைத் தீவின் தேசிய இனமாகிய தமிழர்கள் தமது தலைவிதியைத் தாமே நிர்ணயிக்கும் வகையில் தாயகத்திலும், புலத்திலும் வாழும் ஈழத்தமிழர் மத்தியில் ஐநாவின் கண்காணிப்பில் சர்வசன வாக்கெடுப்பு நடாத்தப்பட வேண்டும். தமிழர்களுக்கான அரசியல் தீர்வை வழங்காமல் இலங்கைத் தீவில் ஒரு பொருளாதார ஸ்திரத்தன்மையை உருவாக்க முடியாது என்பதே நாம் வரலாற்று ரீதியாகக் கண்ட உண்மை.

முள்ளிவாய்கால் வரை கொண்டுவந்து விடப்பட்ட ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டத்தை அந்தப்புள்ளியில் இருந்து முன்னகர்த்திச் சென்றிருக்க வேண்டிய தமிழ் அரசியல் தலைமைகள், இன்றுவரை இனத்திற்கான அரசியலை முன்னெடுக்காது, அடுத்தவர்கள் நலன்சார்ந்தும், தம்மை வளப்படுத்தும் சுயலாப அரசியலையுமே மேற்கொண்டு வருகின்றனர். தாயகம், தேசியம், தன்னாட்சி, சுயநிர்ணய உரிமை ஆகிய கோட்பாடுகளை முன்னிறுத்தி எமது மக்களுக்கான நிரந்தர அரசியற் தீர்வை பெற்றுத்தருவதற்காகவே மக்கள் இவர்களுக்கு வாக்களித்தனர். நாம் காண்கின்ற ஒருசில அரசியல்வாதிகள் மட்டுமே ஓரளவிற்கு எமது உரிமைகளுக்காகக் குரல்கொடுக்கின்றனர். இது ஈழத்தமிழர்கள் சிந்திக்க வேண்டிய காலம். ஒன்றுக்கும் உதவாத உக்கிப்போன சுயநல அரசியல் கலாச்சாாத்தை நடாத்தும் செயற்திறன் அற்ற தமிழ் அரசியல்வாதிகளை இனியும் வைத்துக்கொண்டு எமது விடியலைத் தேட முடியாது. இவர்கள் அனைவரையும் அகற்றி புதிய தலைமைகளை நாமும் தேடவேண்டிய காலம் வந்துவிட்டது.

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்
அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை



# ஒரு அம்மாவின் போராட்டமும் பல அம்மாக்களின் ஏமாற்றமும்

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர், லண்டன்)



இந்திய உச்சநீதிமன்றம் மிக அபூர்வமான வகையில் தனக்கான சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனைக் கைதியாக இருந்த பேறறிவாளனை கடந்த புதன்கிழமை (18) அன்று விடுதலை செய்தது. உடனடியாக இந்த வழக்கையோ அல்லது நீதிபதிகள் எதன் அடிப்படையில் தீர்ப்பளித்தார்கள் என்பதை வாசித்துப் பார்க்கக் கூட பொறுமை அல்லது திறமை இல்லாதவர்கள் - இதில் மூத்த ஊடகவியலாளர்கள் என்று தங்களைக் கூறிக் கொள்பவர்களும் உடனடியாக "கருத்துக் கண்ணாயிரங்களாக" மாறி தமக்குத் தெரிந்ததைவிட தெரியாத பல விஷயங்களை உளறிக்கொட்ட ஆரம்பித்தனர்.

பேறறிவாளன் விடுதலை தொடர்பில் பல பரிமாணங்கள் உள்ளன. ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட வழக்கு மற்றும் அதன் விசாரணை, அதன் அடிப்படையில் உச்சநீதிமன்றத்தின் "மரண தண்டனைத் தீர்ப்பு" பின்னர் அது "ஆயுள் தண்டனையாக குறைப்பு" போன்ற எந்த விஷயங்களையும் தாங்கள் பரிசீலனைக்கு எடுக்கப் போவதில்லை என்று நீதிபதிகள் ஆரம்பத்திலேயே தெளிவுபடுத்திவிட்டனர்.

ராஜீவ் காந்தியின் படுகொலை குற்றச்செயல் மற்றும் குற்றப் புலனாய்வில் மிகவும் சவாலானது மற்றும் தனித்துவமானது. ஈழப் போரின் பாதையை முற்றாக மாற்றி ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டும் இன்றளவும் தேடப்படும் அளவிற்கு இட்டுச்சென்று ரத்தக்களறியுடன் என்றும் துடைத்தெறிய முடியாதபடி இலங்கை அரசிற்கு களங்கத்தை ஏற்படுத்திய ஒரு மோசமான செயல்பாடாகும்.

இந்த வழக்கு மற்றும் அந்த தீர்ப்பைப் பற்றி சற்று விரிவாகப் பார்ப்பதற்கு முன், அவரை விடுவிப்பதற்கான போராட்டத்தை ஒரு தனி நபராக அவரது தாயார் அற்புதம் அம்மாள் அவர்கள் எப்படி முன்னெடுத்தார்கள் என்பதை அறிந்துகொள்ள வேண்டும். ராஜீவ் கந்தி 1991 மே மாதம் 21 ஆம் திகதி சென்னையை அடுத்த ஸ்ரீபெரும்புதூரில் கொல்லப்பட்ட நிலையில், ஜூன் மாதம் 11 ஆம் திகதி அவர் சிறப்பு விசாரணைக் குழுவால் கைது செய்யப்பட்டார். அவரை விசாரணைக்கு அழைத்துச் சென்ற பொலிசார் அவரை விசாரித்துவிட்டு ஓரிரு நாட்களில் அனுப்பிவிடுவதாக அவரின் பெற்றோரிடம் தெரிவித்தனர். ஆனால் 19 வயதில் கைது செய்யப்பட்ட அவருக்கு அந்த ஓரிரு நாள் என்பது 31 ஆண்டுகள் நீடித்தது.



தூக்கிலிடுவதற்கு நாள் குறிக்கப்பட்ட நிலையில், சென்னை உயர்நீதிமன்ற விதித்த தடை காரணமாக அவர்கள் உயிர்பிழைத்தனர். பின்னர் கருணை மனு அளிக்கப்பட்டு அதன் மீதான முடிவு எடுக்கப்படாமல் இருந்த நிலையில், அவர் மீண்டும் நீதிமன்றத்தை நாடும் நிலை ஏற்பட்டது. பின்னர் அவர் இறுதியில் உச்சநீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகளின் அமர்வால் விடுவிக்கப்பட்டார்.

இதில் இரண்டு விஷயங்கள் முக்கியமாக கவனிக்கப்பட வேண்டும். முதலாவது ஒரு தாயாக மட்டுமின்றி, ஒரு செயற்பாட்டாளராக, மனித உரிமை போராளியாக, அனுபவத்தின் மூலம் பெற்ற அறிவு காரணமாக ஒரு சட்டத்தரணியாக பல வகைகளில் அவரது அன்னை அற்புதம் அம்மாள் ஆற்றிய பங்கு அளப்பரியது. அதை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. விசாரணைக்கென்று அவர் அழைத்துச் செல்லப்பட்ட நாள் முதல் தனது மகன் குற்றமற்றவர் அவருக்கும் ராஜீவ் காந்தி படுகொலைக்கும் நேரடியாக எந்த தொடர்பும் இல்லை என்று அவர் தொடர்ந்து கூறி வாதிட்டு வந்தார்.

நாத்திக கொள்கைகளைப் பின்பற்றி வாழ்ந்த அவரது குடும்பம் இது தொடர்பில் எவ்விதமான ஆர்ப்பாட்டமும் இல்லாமல், தனியொரு மனுஷியாக அவர் போராடினார். அவரது கணவரும் கவிஞருமான குயில்தாசன் உடல்நலப் பிரச்சனைகளால் தீவிர பங்களிப்பைச் செய்ய இயலாத நிலையில் இருந்தார். இந்த வழக்கை ஆரம்பக்காலம் முதலே உண்ணிப்பாக கவனித்து வருபவன் என்கிற வகையிலும், அவரை பல சந்தர்ப்பங்களில் அவரைச் சந்திக்கும் வாய்ப்பு பெற்றவன் என்கிற வகையிலும் அவரது அயராத போராட்டம் மற்றும் தளராத மனவலிமை, தன் மகன் மீதான மாறாத நம்பிக்கை ஆகியவற்றை மட்டுமே அடித்தளமாகக் கொண்டு அந்த அம்மையார் 31 ஆண்டுக்காலம் அயராது போராடினார். இயற்கையின் விதிப்படி ஒரு தாயாக மகனை விடுவிக்க தன்னால் ஆன அனைத்தையும் அவர் செய்தார்.

இதேவேளை இந்தியாவில் விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டு நீதிமன்றங்களும் நீதிபதிகளும் சட்டத்தின் பக்கம் நின்றுள்ளனர். இந்த வழக்கில் என்ன நடைபெற்றது என்பதை சுருக்கமாக கனேடிய வாசகர்கள் புரிந்துகொள்வதற்காக விவரிக்கிறேன்.

முன்னரே கூறியபடி, உச்சநீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள், ராஜீவ் காந்தியின் படுகொலை குறித்தோ, அதன் விசாரணை மற்றும் குற்றவாளிகள் என்று நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டு தண்டனை விதிக்கப்பட்டது பற்றியோ நீதிமன்றம் பரிசீலிக்காது என்று கூறிவிட்டனர். அவர்கள் முன்னாள் இருந்த கேள்வி, தனி மனித வாழ்வுரிமை மற்றும் கருணை மனு கோரி அளிக்கப்பட்ட விண்ணப்பம் உரிய நேரத்தில் பரிசீலிக்கப்பட்டு முடிவு எடுக்கப்படாமல் காலம் கடத்தியது சரியா தவறா, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசு ஒரு கொள்கை முடிவை எடுக்கும் போது, அதை மத்திய அரசின் சார்பில் நியமிக்கப்படும் ஆளுநர் நிராகரிக்க முடியுமா மற்றும் சமஷ்டி ஆட்சியில் மாநில அரசுகளின் உரிமை ஆகியவை பற்றி மட்டுமே இந்த மூவர் நீதிமன்ற அமர்வு பரிசீலித்தது.

அதேநேரம் மத்திய மாநில அரசுகள் நீதி பரிபாலன செயல்பாட்டில் உரியவகையில், சட்டத்திற்கு உட்பட்டு, நேரத்திற்கு நடவடிக்கை எடுக்காவிட்டால், உச்சநீதிமன்றம் சுயமாக பாதிக்கப்பட்டவருக்கு "முழுமையான நீதியை" வழங்க வழி செய்யும் அரசியல் யாப்பின் 142 ஆவது பிரிவைப் பயன்படுத்தி,



பேரரிவாளின் கருனை மனு நிராகரிப்பில் மத்திய அரசு முழுமையான நீதியை வழங்கத் தவறிவிட்டது என்று கூறி அவரை விடுதலை செய்து உத்தரவிட்டது.

இதற்கு பல அரசியல் கட்சிகள் உரிமை கோரின. ஆனால் அவர் விடுதலைக்கு முழுப் பொறுப்பு அற்புதம் அம்மாள் அவர்களின் அயராத உழைப்பு, சட்டத்தரணிகளின் நுணுக்கமான வாதம் ஆகியவை மட்டுமே காரணம்.

சட்டம் என்பது மக்களின் நல்வாழ்விற்கே அதிலும் குறிப்பாக தனிமனித சுதந்திரம் மற்றும் உயிர் பாதுகாப்பு என்று வரும் போது, நீதிமன்றம் தனக்கான தனித்துவத்தை வெளிப்படுத்த வேண்டும், பாதிக்கப்பட்டவர் தவறே செய்திருந்து நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டிருந்தாலும், அவரது தனி மனித சுதந்திரம் மற்றும் உயிர் பாதுகாப்பு அனைத்திலும் மேலானது என்பதை இந்த தீர்ப்பு நிரூபித்துள்ளது.

இந்த தீர்ப்பு வெளியானவுடன் எனது நினைவுகள் இதே போன்று தமது உறவுகளை 13 ஆண்டுகளாகத் தேடி அற்புதம் அம்மாளின் போராட்டத்திற்கு சற்றும் தளராத ஆயிரக்கணக்கான தாய்மார்களை நோக்கியே சென்றது. அவர்களும் தமது உறவுகள் - மகன்கள், கணவன்மார், சகோதரர்கள் ஆகியோரை தேடி அலைகின்றனர். அவர்கள் விஷயத்திலும் தனிமனித சுதந்திரம் மற்றும் உயிர் பாதுகாப்பு ஆகியவையே அடிப்படை அம்சங்கள்.



அவர்கள் வேண்டுவது "காணாமல் ஆக்கப்பட்ட அல்லது கையளிக்கப்பட்ட தமது உறவுகள் எங்கே" என்பதற்கான பதிலை மட்டுமே. அந்த பதிலை இலங்கை அரசு இன்று வரை அளிக்க மறுத்துள்ளது. போர் நடைபெற்ற போது ஆட்சி அதிகாரத்திலிருந்த மஹிந்த ராஜபக்ச, போர் வெற்றியில் மிதந்த அவரை முதல் நாள் வரை உடனிருந்து, அவர் வெளிநாடு சென்றிருந்த போது, இறுதிக்கட்ட யுத்தத்தின் கடைசி சில நாட்கள் பாதுகாப்பு அமைச்சராகப் பொறுப்பு வகித்து, தன்னை புனிதராகக் காட்டிக் கொண்டு, அடுத்து வந்த தேர்தலில் அவரையே எதிர்த்துப் போட்டியிட்டு வென்ற மைத்ரிபால சிறிசேன மற்றும் அவருடன் "நல்லாட்சி அரசை" அமைத்த ஐக்கியமில்லாத தேசி-ய கட்சியில் அப்போதும், இப்போது தார்மீகமற்ற முறையில் பிரதமராகப் பொறுப்பேற்றுள்ள ரணில் விக்ரமசிங்க, இறுதி யுத்த காலத்தில் பாதுகாப்புச் செயலராக இருந்து தற்போது ஜனாதிபதியாகவும் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகியிருக்கும் கோத்தாபய ராஜபக்ச என அனைவரும் சுமார் 2000 நாட்களாகப் போராடும் இந்த தாய்மார்களுக்கு முறையான பதிலை அளிக்கவில்லை.

அரசு முறையான நீதியை வழங்கவில்லை என்று கூறி இந்திய உச்சநீதிமன்றம் கொலைக் குற்றச்சாட்டில் தண்டனையளிக்கப்பட்ட ஆயுள் கைதி ஒருவரை விடுவிக்கும் வகையில் சுயாதீனமாக செயல்படும் போது, அதே போன்ற ஒரு உறுதிப்பாட்டை ஏன் இலங்கை நீதியரசர்கள் காட்டவில்லை என்கிற கேள்வி எழுவதை தவிர்க்க முடியவில்லை.

இலங்கை அரசியல் யாப்பில் நீதித்துறைத்தின் சுயாதீனம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தாலும், இந்தியாவில் உள்ளது போன்று அரசு நீதியை வழங்கத் தவறும் போதும், உச்சநீதிமன்றம் சுயாதீனமாக நியாயம் வழங்கும் வழிமுறை இலங்கையில் உள்ளதா என்பது எனக்குத் தெரியாது. அப்படி ஒரு வழி இருந்தால், ஏன் நீதிமன்றங்கள் ஏன் அதைப் பயன்படுத்தி போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்க முன்வரவில்லை, அல்லது அப்படியானதொரு வழி அரசியல் யாப்பில் இல்லையென்றால், ஏன் அதற்கான குரல் கொடுக்கப்படவில்லை என்று என்னைப் போன்று ஏராளமானவர்களுக்கு கேள்வி எழுவது இயற்கையானதே.

ஒரு அற்புதம் அம்மாள் அயராது போராடிப் பெற்ற வெற்றியை ஏன் ஆயிரம் அற்புதம் அம்மாக்களால் இலங்கையில் செய்ய முடியவில்லை என்பது விவாதப் பொருளாக வேண்டும் என்று எண்ணுகிறேன். தமது உறவுகளைத் தேடி வயதுபோன காலத்திலும் தளராமல் போராடிய பல தாய்மார்கள் இன்று உயிருடன் இல்லை. தமது மகன்கள் அல்லது கணவர்களுக்கு என்ன நடைபெற்றது என்பதை அறியாமலேயே அவர்கள் உயிரிழந்துள்ளனர்.

அவ்வகையில் தொடர்ந்து போரடி வரும் தாய்மார்களுக்கான பதில் அளிக்கப்பட்டே ஆக வேண்டும். நீதி வழங்கப்படுவது மட்டுமின்றி அது விரைவா-கவும் உரிய நேரத்திலும் வழங்கப்பட வேண்டுமென்பது உலகளவில் நீதித்துறையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு வழக்கம். இனியும் அந்த தாய்மார்கள் மட்டுமல்ல உலகமும் இலங்கை அரசிடமிருந்து பதிலுக்காக காத்திருக்க முடியாது.



இந்த அம்மாக்களின் போராட்டம் ஏன் இதுவரை வெற்றியளிக்கவில்லை, அல்லது உரிய பதிலைப் பெற்றுத்தரவில்லை என்பதும் யோசிக்க வைக்கிறது. பேறறிவாளன் விடுதலை தொடர்பில், அற்புதம் அம்மாள் அனைவரும் உதவ வேண்டும் என்று கோரினாரே தவிர, ஐ நா இதில் தலையிட வேண்டும், மேற்குலக நாடுகள் தீர்ப்பைப் பெற்றுத்தர வேண்டும், சட்டத்தின் மீது நம்பிக்கையில்லை என்றெல்லாம் கூறவில்லை. அவர் போராடியது இந்தியச் சட்டம் மற்றும் நீதிமன்றங்களில் தான். அவரது போராட்டத்திற்கு உச்சநீதிமன்றம் செவிசாய்த்துள்ளது. அதுவே இலங்கையிலும் நடைபெறா வேண்டும்.

அவரை விடுவித்து தீர்ப்பளித்த இந்திய உச்சநீதிமன்ற மற்றொரு முக்கியமான விஷயத்தையும் தொட்டது. அது சமஷ்டி ஆட்சியில் மத்திய மாநில அரசுகளின் அதிகாரம். இலங்கையில் முழுமையான சமஷ்டி இல்லையென்றால் மாகாண சபைகளுக்கு ஒப்பீட்டளவில் சில குறைந்த அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளன. அந்த அதிகாரங்கள் முழுமையாக இருக்கவேண்டும், மேலதிகமாகவும் அளிக்கப்பட வேண்டும். அப்படியிருந்தால் மட்டுமே இலங்கை சர்வதேச அளவில் இழந்த தனது பெயரை ஓரளவேனும் மீட்டெடுக்க முடியும்.

# இந்தியாவை அச்சுறுத்தும் பணவீக்கம்.. வட இந்தியாவில் உச்ச நிலை அடைந்துள்ளது



ஒட்டுமொத்த இந்தியாவும் பணவீக்கம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு மற்றும் கேரளாவில் மட்டும் பிற மாநிலங்களைவிட குறைவான பாதிப்பு இதனால் ஏற்பட்டு இருக்கிறது.

இந்தியாவின் சில்லரை விற்பனை பண வீக்கம் கடந்த ஏப்ரல் மாதம் கடந்த 8 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு 7.79 சதவீதமாக அதிகரித்து உள்ளது. இந்த பணவீக்கத்துக்கு மிக முக்கிய காரணமாக எரிபொருள் மற்றும் உணவுப் பொருட்களின் விலையேற்றம் கூறப்படுகிறது. அதே நேரம் பணவீக்கம் என்பது அனைத்து மாநிலங்களையும் சமமான அளவில் பாதிக்கவில்லை. சில மாநிலங்களில் அதிக பாதிப்பையும், சில மாநிலங்களில் குறைவான பாதிப்பையும் ஏற்படுத்தியுள்ளது. அதாவது 4 மாநிலங்களில் மட்டும் 9 சதவீதம் பணிவீக்கம் அதிகரித்து உள்ளது. இதில் மத்திய பிரதேசம் மற்றும் மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்கள் முன்னிலை வகித்து வருகின்றன. இதற்கு முன் கடந்த 2014 ஆம் ஆண்டு 8.33 சதவீதம் என்ற அளவில் ஏற்பட்ட பணவீக்கமே 8 ஆண்டுகளில் அதிகமானதாக இருந்தது. தற்போது இதைவிட 4 மாநிலங்களில் ஏற்பட்டு இருக்கும் பணவீக்கம் அந்தந்த மாநிலங்களில் உள்ள வீடுகளில் மாதாந்திர மற்றும் தினசரி பட்ஜெட்டையே பதம் பார்த்து இருக்கிறது. இதுகுறித்து தேசிய புள்ளியியல் அலுவலகம், நுகர்வோர் விலை குறியீட்டின் அடிப்படையில் பணவீக்கத்தை அளவிட்டுள்ளது. நாடு முழுவதும் அதிகரித்து வரும் உணவு மற்றும் எரிபொருள் விலை உயர்வு காரணமாக 8 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு தேசியளவில் 7.8 சதவீதமாக பணிவீக்கம் அதிகரித்துள்ளது. இதில் சில மாநிலங்களில் உக்ரைனில் நடந்துவந்த போரால் விலையேற்றங்களை சந்தித்தன. மேற்கு வங்கம், மத்திய பிரதேசத்துக்கு அடுத்தபடியாக அரியானா மற்றும் தெலுங்கானா ஆகிய மாநிலங்களில் பணவீக்கத்தால் அதிகம் பாதிக்கப்படுபவை என பட்டியலிடப்பட்டு உள்ளது. 9 சதவீத பணவீக்கத்தை எதிர்கொண்டுள்ள இந்திய மாநிலங்களில் இவ்விரண்டும் வருகின்றன. 7 மாநிலங்களில் 8 சதவீதம் பண வீக்கம் ஏற்பட்டு இருக்கிறது.

இதுகுறித்து கருத்து தெரிவித்துள்ள பொருளாதார அறிஞர் டி.கே.ஜோஷி, "கிராமபுற பொருளாதாரத்தை அதிகம் சார்ந்து இருக்கக்கூடிய மாநிலங்களில் இதில் அதிகம் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. அதேபோல் மாநில வாரியாக பெட்ரோல், டீசல் மீதான வரிவிதிப்பு மாறுபடுவதால் இந்த வேறுபாடு காணப்படுகிறது." என்றார். உயர்ந்து வரும் பண வீக்கம் காரணமாக மளிகை, மீன், கறி, காய்கள், எரிபொருள், பள்ளி கட்டணம் போன்றவற்றுக்காக மாதந்தோறும் ஒதுக்கும் தொகை கடந்த ஓராண்டில் மட்டும் 20% அதிகரித்துள்ளது. அனைத்து தரப்பு மக்களும் தங்கள் மாதாந்திர கணக்கு வழக்கில் கூடுதல் சிக்கனத்தை கடைபிடிக்க வேண்டிய நிர்பந்தத்துக்கு ஆளாகி இருக்கின்றனர்.? ஏழைகள், நடுத்தர மக்கள் மட்டுமின்றி உயர் நடுத்தர மக்கள், பணக்காரர்களும் இதனால் கடுமையான பாதிப்பை சந்தித்து வருகின்றனர். இப்படி நாட்டையே அச்சுறுத்தும் இந்த பணவீக்கத்தில் 2 மாநிலங்கள் மிகக்குறைந்த அளவில் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. ஒன்று தமிழ்நாடு மற்றொன்று கேரளா. 2 மாநிலங்களிலும் தேசிய சராசரியை விட குறைவாக முறையே 5.4 மற்றும் 5.1 என்ற அளவில் பணவீக்கம் பாதித்து இருக்கிறது.

# ஊழலின் அடையாளம் 2ஜி என்று திமுக வை சாடிய இந்திய பிரதமர் மோடி

அடுத்த 10 ஆண்டுகளில் இந்தியாவால் 6ஜி சேவையை துவங்க முடியும் என நம்பிக்கை தெரிவித்துள்ள பிரதமர் மோடி, கொள்கை முடக்கம் மற்றும் ஊழலின் அடையாளமாக 2ஜி இருந்ததாக விமர்சித்துள்ளார். (தயாநிதி மாறன் இந்திய தொலை தொடர்பு அமைச்சராக இருந்த காலத்தில் 2ஜி அலைக்கற்றை ஒதுக்கியதில் ஊழல் நடந்ததாக குற்றம் சுமத்துப்பட்டிருந்தது).

இந்திய தொலை தொடர்பு ஒழுங்குமுறை ஆணையமான டிராய் 1997ல் துவக்கப்பட்டது. அதன் 25ம் ஆண்டு நிகழ்வு இன்று கொண்டாடப்படுகிறது. இந்த வெள்ளிவிழா நிகழ்ச்சியில் காணொலி வாயிலாக பங்கேற்ற பிரதமர் மோடி, 5ஜி அலைக்கற்றை சோதனையை துவக்கி வைத்தார். பின்னர் பிரதமர் மோடி பேசியதாவது: 8 ஆண்டுகளில் தொலைத்தொடர்பு துறையில் ஏராளமான புதிய ஆற்றலை உட்புகுத்தி உள்ளோம். 2ஜி சகாப்தம், கொள்கை முடக்கம், ஊழல் ஆகியவற்றின் அடையாளமாக இருந்தது.

3ஜியில் இருந்து 4ஜிக்கு வேகமாக முன்னேறியுள்ளது. தற்போது 5ஜிக்கு மாறியுள்ளது. இந்தியாவில் இணையத்தை பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருகிறது. நாட்டின் பொருளாதாரத்திற்கு சுமார் 450 பில்லியன் டாலர் அளவிற்கு 5ஜி தொழில்நுட்பம் பங்காற்றும்.



5ஜி தொழில்நுட்பம் ஒவ்வொரு இந்தியருக்கும் பெருமையான விஷயம். இது இணைய வேகத்தை அதிகரிப்பது மட்டுமல்ல, வளர்ச்சியின் வேகத்தையும், வேலைவாய்ப்புகளையும் உருவாக்குகிறது. நாட்டில் உள்ள கிராமங்கள் அனைத்திற்கும் 5ஜி தொழில்நுட்பத்தை கொண்டு சேர்க்க வேண்டும். அடுத்த 10 ஆண்டுகளில் நம்மால் 6ஜி சேவையை துவங்க முடியும். 6ஜி தொழில்நுட்ப சேவையை பயன்பாட்டுக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் பேசினார்.




# இலங்கைத் தீவு ஒரு தேசமாக இருப்பதில் தோல்வி அடையுமா?



**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

ரனில் விக்கிரமசிங்கபிரதமராக நியமிக்கப்பட்ட பொழுது அவர் ஆளுங்கட்சியின் பிரதமராகவும் இருக்கவில்லை, எதிர்க்கட்சிகளின் பிரதமராகவும் இருக்கவில்லை. ஜனநாயக நாடாளுமன்ற வழமைகளின்படி ஆளும் கட்சிக்குள் அதிகம் ஆதரவைப் பெற்றவர் பிரதமராக வரலாம். ஆனால் ரணில் விக்ரமசிங்க ஆளுங்கட்சி உறுப்பினர் அல்ல. அதே சமயம் அவர் எதிர்க்கட்சியும் அல்ல. எதிர்க் கட்சியாக இருப்பது அவருடைய கட்சிக்குள் முன்பு இருந்து அவரை எதிர்த்து வெளியேறிச் சென்ற அணியாகும். எனவே அவர் எதிர்க்கட்சியின் பிரதமரும் அல்ல. அவருடைய கட்சிக்கு நாடாளுமன்றத்தில் ஒரே ஒரு ஆசனம் தான் உண்டு. அதுவும் தேசியப்பட்டியல் ஆசனம். உலகிலேயே ஒரே ஒரு ஆசனத்தை கொண்ட கட்சியின் தலைவர் பிரதமராக நியமிக்கப்பட்டமை என்பது இலங்கைத் தீவில்தான் நடந்திருக்கிறது.கடந்த சில வாரங்களாக இலங்கைத்தீவில் நடந்து வரும் நூதனமான காட்சிகளில் அதுவும் ஒன்று.

அதனால்தான்,அவர் யாருடைய பிரதமர் என்ற கேள்வி எழுந்தது. அவர் கோத்தபாயவின் பிரதமரா? அல்லது ஆளுங்கட்சியின் பிரதமரா? அல்லது எதிர்க்கட்சிகளின் பிரதமரா? ஒரு சிலர் அவரை அமெரிக்காவின் பிரதமர் என்று சொன்னார்கள். மேற்கத்திய நிதி முகவர் அமைப்புக்களின் பிரதமர் என்று சொன்னார்கள். காலிமுகத்திடலில் போராடும் புதிய தலைமுறை அவரை டீல் களின் பிரதமர் என்று சொன்னது. முன்னிலை சோசலிசக் கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் அவரை கிழட்டுக் கோழி என்று சொன்னார்.

ஆனால் ஒரே ஒரு ஆளாக உள்ளே வந்தவர் இப்பொழுது பெரும்பாலானவர்களின் தவிர்க்கப்பட முடியாத தெரிவாக மாறியுள்ளார். நாட்டின் நிதி நெருக்கடியும் அதன் விளைவாக ஏற்பட்ட அரசியல் நெருக்கடியும் அவரை தவிர்க்க முடியாதவராக மாற்றி உள்ளனவா?

அவர் மந்திரவாதி அல்ல. மந்திர தந்திரங்களில் நாட்டமுடையவரும் அல்ல. ராஜபக்ச குடும்பத்தை போல ஞானாக்காக்களின் பின் செய்பவரோ, அல்லது மந்திரித்த தாயத்துக்களை கைகளில் அணிந்திருப்பவரோ வைத்திருப்பவரோ அல்ல. அவர் மந்திரத்தை விடவும் தந்திரத்தை நம்புபவர்.

அவர் பிரதமராக தெரிவு செய்யப்பட்டதும் பங்குச்சந்தை மாற்றத்தை காட்டத் தொடங்கியது. டொலரின் பெறுமதி குறைந்தது. மேற்கு நாடுகள் உதவிகளை அள்ளி வழங்கின. இதனால் ஒரு திடீர் எதிர்பார்ப்பு அவரை நோக்கி உருவாகியது. அதன் விளைவாக உள்ளூர் சந்தைகளில் பதுக்கப்பட்டிருந்த பொருட்கள் வெளிவந்தன. மூடப்பட்டிருந்த எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் வெளிப்படத் தொடங்கியது. முகநூலில் ஒரு நண்பர் எழுதியது போல "எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் ஊற்றெடுக்க தொடங்கியது". மூவாயிரம் ரூபாய் வரை விற்கப்பட்ட சீமெந்து திடீரென்று 1200ரூபாய்க்கு இறங்கியது. இவ்வாறு பதுக்கப்பட்ட பொருட்கள் வெளிப்படத் தொடங்கியதும் அவர் மீதான நம்பிக்கை மேலும் அதிகரித்தது.

நாடாளுமன்றத்தில் அவர் தெரிவு செய்யப்பட்ட விதத்தை, அவருடைய தெரிவை எதிர்த்த கட்சிகள் பெரும்பாலானவை படிப்படியாக அவரை எதிர்ப்பதில்லை என்ற முடிவை எடுக்கத் தொடங்கின. ஏனென்றால் ரணிலுக்கு எதிராக வாக்களித்தால் மக்களின் எதிர்ப்பை வாங்கிக்கட்ட வேண்டியிருக்கும் என்ற பயம் அவர்களுக்கு. கடந்த 9 ஆம் திகதியும் 10 ஆம் திகதியும் மக்களின் கோபம் எப்படியிருக்கும் என்பதை அனுபவித்தவர்கள் அவர்கள். இலங்கைத் தீவின் நவீன வரலாற்றில் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதேசசபைத் தலைவரும் மக்களால் அடித்துக் கொல்லப்படும் அளவுக்கு நிலைமைகள் பயங்கரமாக இருந்த நாட்கள் அவை. எனவே முதலில் பத்திரமாக சொந்த தேர்தல் தொகுதிக்குப் போகவேண்டுமென்றால் இப்போதைக்கு ரணிலை எதிர்ப்பதில்லை என்று பெரும்பாலான சிங்கள கட்சிகள் முடிவெடுத்தன. எனினும் பிரதி சபாநாயகர் தெரிவில் ரணிலுக்குள்ள வரையறைகளை ஆளுங்கட்சி உணர்த்தியிருக்கிறது.

ரணில் பிரதமராக நியமிக்கப்பட்டதை பேராயர் மல்கம் ரஞ்சித் ஏற்றுக்கொள்ளவில்லை. மகா நாயக்கர்களின் கருத்தும் அதுதான் என்று அவர் சொன்னார். சகல மக்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட சகல மக்களுக்கும் நம்பிக்கை ஊட்டக்கூடிய ஒருவரை பிரதமராக நியமிக்க வேண்டும் என்று பேராயர் போர்க்கொடி எழுப்பினார். அப்படி ஒருவரை நாடாளுமன்றத்தில் கண்டுபிடிப்பது கடினம் என்று பேராயருக்கும் தெரியும். தவிர நாடாளுமன்றத்துக்கு வெளியே அப்படிப்பட்ட ஒருவரை தேட பேராயராலும் முடியவில்லை. மகாநாயக்கர்களாலும் முடியவில்லை. இந்த வெற்றிடத்தை தந்திரமாகப் பயன்படுத்தி ரணிலை கோத்தபாய தெரிவு செய்தார்.

யாப்பின் பிரகாரம் தனக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி கோத்தாபய ரணிலைத் தெரிவு செய்தார். அதாவது யாப்பின்படி ரணில் தெரிவுசெய்யப்பட்டார். இந்த இடத்தில் ஒரு முக்கியமான விடயத்தை நாம் கவனிக்கவேண்டும். கோட்டாவை வீட்டுக்குப் போ என்று கேட்டு ஒரு புதிய தலைமுறை போராடுகிறது. ஆனால் யாப்பின்படி அவரை வெளியே அனுப்ப முடியாதுள்ளது. யாப்புக்கு வெளியே சென்றால் அது முடியும். அதாவது யாப்பை மீறும் துணிச்சல் தேவை. தெருக்களில் மற்றும் காலிமுகத்திடலில் போராடிக் கொண்டிருக்கும் மக்கள் அந்தத் துணிச்சலை வழங்கினார்கள். ஆனால் அவர்களுக்கு தலைமை தாங்க எந்த ஒரு சிங்களக் கட்சியாலும் முடியவில்லை. சஜித் பிரேமதாசவும் ஜேவிபியும் போராடும் தரப்புகளின் கோஷங்களை ஏற்றுக் கொள்வதன் மூலம் தாங்கள் அவர்களின் பக்கம் என்று காட்டினார்கள். ஆனால் போராடும் மக்களுக்கு தலைமை தாங்க அவர்களால் முடியவில்லை. இதுதான் அடிப்படைப் பிரச்சினை. யாப்பை மீறிச் செல்ல துணிச்சலற்ற எதிர் கட்சிகளின் மத்தியில் யாப்பின் பிரகாரம் ஜனாதிபதி ரணிலைத் தெரிவு செய்தார்.

இதை இன்னும் சரியான வார்த்தைகளில் சொன்னால் காலிமுகத்திடலில் போராடும் புதிய தலைமுறையும் தெருக்களில் இறங்கி அரசியல்வாதிகளுக்கு பாடம் படிப்பித்த மக்களும், எதிர்க்கட்சிகளும் போராடியதால் கிடைத்த கனிகளை ரணில் விக்கிரமசிங்க சுவீகரித்து விட்டார் என்றும் சொல்லலாம்.

மிகப் பலவீனமான, உலகின் மிக நூதனமான ஒரு பிரதமராக அவர் தொடக்கத்தில் தோன்றினார். ஆனால் படிப்படியாக தன்னை பலப்படுத்தி வருகிறார். அவர் கடைசியாக இரண்டு தடவைகள் பதவியில் இருந்த போதும் கூட நிலைமை அப்படித்தான் இருந்தது. அவர் உள்நாட்டில் மிகப் பலவீனமான தலைவராகவும் வெளியுலகில் மிகப் பலமான ஒரு தலைவராகவும் காணப்பட்டார்.

கடந்த செவ்வாய்க்கிழமை அவர் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரை ஒப்பீட்டளவில் வெளிப்படையானது. அவர் மக்களுக்கு பொய்யான வாக்குறுதிகளை வழங்க தயார் இல்லை என்று தெரிகிறது. "நான் மக்களுக்கு விடயங்களை மறைத்து பொய் சொல்வதற்கு எந்தவகையிலும் விரும்பவில்லை. பயங்கரமாக இருந்தாலும் அசிங்கமாக இருந்தாலும் இதுதான் உண்மையான நிலைமை. குறுகிய காலத்திற்கு நாம் கடந்த காலத்தைவிட மிகவும் கஸ்டமான காலத்திற்கு முகம் கொடுக்க போகின்றோம்.இந்த நேரத்தில் நமக்கு கவலைப்பட மட்டுமே முடியும்"....என்று அவர் கூறுகிறார்.

இந்தச் சோதனையில் அவர் வெற்றி பெற்றால் அவர் ஒரே கல்லில் மூன்று கனிகளை வீழ்த்துவார். முதலாவது தன் வாழ்வின் இறுதிக் கட்டத்தில் - அதாவது அவரைப் பொறுத்தவரை இது கடைசி ஓவர் - இந்த கடைசி ஓவரில் ஆவது அவர் வெற்றி பெற்ற ஒரு தலைவராக ஓய்வு பெறலாம். மிக நெருக்கடியான ஒரு காலகட்டத்தில் நாட்டை மீட்டெடுத்தவர் என்ற புகழுடன் அவர் ஓய்வு பெறலாம். இரண்டாவது தனது கட்சியை பலப்படுத்தலாம். மூன்றாவது தனது உட்கட்சி எதிரி-களை தோற்கடிக்க லாம். அதேசமயம் அவரைப் பிரதமராக நியமித்ததன்மூலம் கோத்தாபய தன்னைத் தற்காத்துக் கொண்டுவிட்டார் என்று கூறலாம் இந்த இடத்தில் ரணிலை நியமித்ததன் மூலம் முதலாவதாக கோத்தபாய தன்னைத் தற்காத்துக் கொண்டார். இரண்டாவதாக எனைய ராஜபக்சக்களையும் பாதுகாத்துக் கொண்டார். மூன்றாவதாக மக்கள் எதிர்ப்பை ஒப்பீட்டளவில் தணித்திருக்கிறார். காலிமுகத்திடலில் போராடும் புதிய தலைமுறை அவரை வீட்டுக்கு போ என்று கேட்கிறது. ஆனால் இன்றுவரை அவர் வீட்டுக்கு போகவில்லை. அதேசமயம் ரணிலை நியமித்தன்மூலம் அவர் நாட்டின் கவனத்தையும் வெளி உலகின் கவனத்தையும் ரணிலின் மீது குவியச் செய்து விட்டார். ரணிலின் மறைவில் அவர் தன்னையும் தன் குடும்பத்தையும் பாதுகாத்துக் கொண்டார்.

இப்படிப் பார்த்தால் ரணிலை நியமித்ததன்மூலம் கோத்தபாயவும் ஒரு கட்டம் வரை வெற்றி பெற்றிருக்கிறார். ரணிலும் வெற்றி பெற்றிருக்கிறார். அதாவது சிங்களத் தலைவர்கள் ஏதோ ஒரு விதத்தில் தங்களையும் யாப்பையும் சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பையும் பாதுகாத்திருக்கிறார்கள் என்று பொருள்.

ரணிலை விட்டால் வேறு யாரும் இல்லை என்ற ஒரு வெற்றிடம் ஏற்படுவதற்கு எதிர்க்கட்சிகளும் காரணம்.பேராயர் மல்கம் ரஞ்சித் மகாநாயக்கர் போன்ற அனைத்து மதத் தலைவர்களுமே காரணம். அனைத்துத் தரப்பாலும் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற, அனைத்து தரப்புக்கும் நம்பிக்கை ஊட்டக்கூடிய ஜனவசியம் மிக்க ஒரு தலைவரை உருவாக்க முடியாத மதத்தலைவர்கள் தமது தோல்வியை ஒப்புக் கொள்ள வேண்டும். குறிப்பாக பௌத்த மகா சங்கம் இலங்கைத்தீவின் அரச மதம். பேராயர் மல்கம் ரஞ்சித் ஈஸ்டர் குண்டுவெடிப்பு வரை தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட துன்பங்களை குறித்து அதிகம் வாய் திறக்காதவர். இதுதான் பிரச்சினை. மதத்தலைவர்கள் நீதியின் மீது பசி தாகம் உடையவர்களாக இல்லாத ஒரு சமூகத்தில் இப்படித்தான் தலைமைத்துவ வெற்றிடங்கள் ஏற்படும்.

ரணில்விக்கிரமசிங்க தோல்வியடைந்தால் இலங்கையும் தோல்வியடையும் - இந்த தோல்வி அடுத்த சில ஆண்டுகளிற்கான தோல்வியாகயிராது மாறாக ஒரு தேசமாக இலங்கையின் இருத்தலிற்கான தோல்வியாக இது காணப்படும்" என இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் பிரதிஆளுநர் கலாநிதி டபில்யூ ஏ விஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை இலங்கைத்தீவு எப்பொழுதோ ஒரு தேசமாக இருப்பதில் தோல்வியடைந்து விட்டது. அதை ஒரு தேசமாக கட்டி எழுப்புவது என்பது சிங்கள பௌத்த தேசமாக கட்டி எழுப்புவது அல்ல. தமிழ் மக்களை ஒரு தேசமாக ஏற்றுக்கொள்வதுதான். பல்லினத் தன்மை மிக்க் பல் சமயப் பண்பு மிக்க் பல்மொழி பண்புமிக்க் ஒரு தேசமாகக இச்சிறிய தீவைக் கட்டியெழுப்புவதுதான். தனது கடைசி ஓவரில் ஆவது ரணில் அதைச் செய்வாரா? அல்லது இலங்கைத்தீவு ஒரு தேசமாக இருப்பதில் தோல்வியடையுமா?

## வீணாவின் கவிக்கணை

அமைதியின் உருவம்,
அன்பின் சிகரம்,
அழகான புன்னகை,
அசத்திடும் பேச்சு,
அறுசுவை விருந்தும்
அமுதம்போல் சுவைக்கும், பெண்
அவள் கையில் வித்தைகள் ஏராளம்,
அனுதினம் அவளும் அடுத்தவர் துயரை
அலுப்பின்றி துடைத்தாள், ஆனால்
அவள் மனம் உணர்ந்து,
அவள் விழி துடைத்து, துணையென
அருகினில் இருக்க எவருண்டு இங்கு,
அழுது புலம்பி, புயலென வெடித்து,
அடுத்தவர் துணையின்றி, வாழ்ந்திடும் போது,
அவளை தடுத்திட வேண்டாம்,
அவள் தைரியத்தை உடைத்திட வேண்டாம்,
அவள் நிம்மதியை கலைத்திட வேண்டாம்,
அவள் வளர்ச்சி கண்டு
அதில் பெருமிதம் கொண்டு மகிழ்ந்திடு போதும்

# 1989 பயங்கரவாதத்தின் மறைக்கப்பட்ட குற்றவாளிகளின் பட்டியல் கோரப்பட்டுள்ளது

இலங்கை நாடாளுமன்றம் இன்று செவ்வாய்கிழமை கூடியுள்ள நிலையில், 1980களின் பிற்பகுதியில் பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவினால் குற்றஞ்சாட்டப்பட்ட அனைத்து குற்றவாளிகளின் பெயர்களையும் பகிரங்கப்படுத்துமாறு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

"சுமார் 700 பேர் காணாமல் ஆக்கப்பட்ட மாத்தளை மாவட்டத்திற்கு பொறுப்பாளராக இருந்த ஜனாதிபதி கோட்டாபயவின் பெயர் குறிப்பிடப்பட்ட பட்டியலையும் உள்ளடக்க வேண்டும்".

1988-89 சிங்கள இளைஞர்களின் இரண்டாவது எழுச்சியின் அரச அடக்குமுறையின் போது மாத்தளை மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்ட, கொலை செய்யப்பட்ட மற்றும் 2012ஆம் ஆண்டு மாத்தளை வைத்தியசாலை வளாகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பாரிய புதைகுழிகள் தொடர்பில் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் என சந்தேகிக்கப்படும் தலைவர்கள் பற்றிய அறிக்கையை, இலங்கையின் உண்மை மற்றும் நீதி செயற்றிட்டம் (ITJP) மற்றும் இலங்கை ஜனநாயகத்திற்கான ஊடகவியலாளர்கள் (JDS) அமைப்பு இணைந்து வெளியிடப்பட்டுள்ளன.

இதுவரை வெளியிடப்படாத அரச ஆவணங்கள் இதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளன.

மக்கள் விடுதலை முன்னணியின் கிளர்ச்சியின் போது காணாமல் ஆக்கப்படுவதற்கு எதிரான முன்னோடித் தலைவராக மஹிந்த ராஜபக்ச இருந்த காலத்தில் இடம்பெற்ற மனித குலத்திற்கு எதிரான பாரதூரமான குற்றச் செயல்கள் தொடர்பில் இவ்வாறானதொரு அறிக்கை 33 வருடங்களின் பின்னர் வெளியாகியிருப்பது இலங்கையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கப் போராடும் அனைவருக்கும் தைரியத்தை அளிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

"கோட்டாபய ராஜபக்ச: 1989 ஆம் ஆண்டு இடம்பெற்ற பெரும் அட்டூழியங்களில் இலங்கை ஜனாதிபதியின் வகிபாகம்" என்ற தலைப்பில், காணாமல் ஆக்கப்பட்டும், விசாரணையின்றி படுகொலை செய்யப்பட்டும், சமாதியின்றி புதைக்கப்பட்டும், டயர்கள் போட்டு எரிக்கப்பட்டும் கொல்லப்பட்ட தமது உறவினர்களுக்கு நீதி கோரி இரவு பகலாகப் போராடும் அனைவரும், எதிர்காலத்தில் தமது பிள்ளைகளுக்கு இதுபோன்ற அவலம் இடம்பெறாதிருக்க தடுக்க நடவடிக்கை எடுக்கும் பெற்றோரும் இதனைப் பயன்படுத்த வேண்டும்." என காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களின் ஒன்றியத் தலைவர் பிரிட்டோ பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.




"அரசாங்கத்தால் தொகுக்கப்பட்ட இந்த பட்டியல்கள் பல தசாப்தங்களாக மறைக்கப்பட்டுள்ளன. இவற்றில் பொலிஸ் அதிகாரிகள், இராணுவத்தினர் மற்றும் அரசியல்வாதிகளின் பெயர்கள் உள்ளடங்கும் என்பது எமது புரிதல். அவர்களில் சிலர் இன்று சக்தி வாய்ந்தவர்கள். இந்த ஆணைக்குழுக்களில் காணாமல் போன பிள்ளைகளின் உறவினர்கள் பல்லாயிரக்கணக்கானோர் சாட்சியமளித்துள்ளனர். சந்தேகநபர்களாகப் பெயரிடப்பட்டவர்கள், யார் மீது வழக்குத் தொடரப்பட்டது, எந்தெந்த வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டன என்பதை அறிய அவர்களுக்கு உரிமை உண்டு. இந்த நாட்டில் மூன்று காலகட்டங்களில் பாரிய குற்றச்செயல்கள் இடம்பெற்றுள்ள போதிலும் அதற்கு எவரும் பொறுப்புக்கூறவில்லை. இது மீண்டும் நிகழ்வதை தடுக்க உதவாது. வரலாற்றில் எப்போதும் இல்லாத நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் நம் நாட்டு மக்கள் தங்கள் ஆட்சியாளர்கள் யார் என்பதை அடையாளம் காண வேண்டிய நேரம் வந்துவிட்டது".

தற்போதைய ஜனாதிபதி நந்தசேன கோட்டாபய ராஜபக்ச மாத்தளை குற்றச் செயல்களுக்கு முதன்மைப் பொறுப்பான "இராணுவ அதிகாரிகளின் பிரதானி" என பெயரிடப்பட்டுள்ளார். தற்போதும் ஜனாதிபதி கோட்டாபய ராஜக்சவின் நம்பிக்கைக்குரியவராக இருக்கும் தற்போதைய இராணுவத் தளபதி ஷவேந்திர சில்வா மற்றும் உயர் இராணுவ அதிகாரிகளான ஜகத் டயஸ் மற்றும் சுமேத பெரேரா ஆகியோர் அறிக்கையின் விசாரணை தொடர்பான காலப்பகுதியில் ஜனாதிபதியின் கீழ் மாத்தளை மாவட்டத்தில் கஜபா படைப்பிரிவு சேவையாற்றியதாக அறிக்கை வெளிப்படுத்துகிறது.


காணாமல் போனோர் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையின் பிரகாரம் மாத்தளை மாவட்டத்தில் மாத்திரம் பயங்கரவாத காலத்தில் 1,042 பேர் காணாமல் போயுள்ளனர்.

"நான் சிறந்ததைச் செய்தேன்" என எப்போதும் தம்பட்டம் அடித்துக் கொள்ளும், அப்போதைய, மாத்தளை மாவட்டத்திற்குப் பொறுப்பான இராணுவ அதிகாரி கேணல் கோட்டாபய ராஜபக்சவின் கீழ், 1980களின் பிற்பகுதி வரையிலான ஒன்பது மாதங்களில் 700க்கும் மேற்பட்டோர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் அறிக்கைக்கு அமைய ITJP மற்றும் JDS ஆகியன தெரிவிக்கின்றன.




1989 ஒக்டோபர் 7ஆம் திகதி மாத்திரம், சுமார் 60 பேர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

ஆணைக்குழுவின் அறிக்கையை மேற்கோள் காட்டி ITJP / JDS வெளியிட்டுள்ள அறிக்கையில், ஒரே நாளில் பெல்வெஹெர கிராமத்தில் 22 பேர் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டு எரிக்கப்பட்டனர். அவர்களில் 13, 15 மற்றும் 17 வயதுடைய மூன்று சிறுவர்களும் அடங்குவர்.



2012ஆம் ஆண்டு மாத்தளை வைத்தியசாலை வளாகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பாரிய புதைகுழியின் எச்சங்கள் தொடர்பில் மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்தபோது அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட கார்பன் பரிசோதனையின் பலனாக அரசாங்கம் சமர்ப்பித்த அறிக்கையில் அவை 1950ஆம் ஆண்டுக்கு முற்பட்டவை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கில் பல்லாயிரக்கணக்கான மக்களைக் காணாமல் ஆக்கி போரை நடத்திய இராணுவத்தை வழிநடத்திய அரசாங்கத்தில் கோட்டாபய ராஜபக்ச பலம் வாய்ந்த பாதுகாப்புச் செயலாளராக பதவி வகிக்கும் போது வித்தியாசமான முடிவை எதிர்பார்ப்பது கடினம். எனினும் இந்த கருத்தை மறுக்கும் இலங்கை தொல்லியல் மற்றும் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் இருவர், மாத்தளை வெகுஜன புதைகுழியில் 1986 மற்றும் 1990ற்கு இடையில் புதைக்கப்பட்டவர்களின் எச்சங்கள் இருந்ததாக தெரிவித்துள்ளனர்.

"மஹிந்த ராஜபக்சவின் வார்த்தைகளில் சொல்வதானால், 60,000 பேர் காணாமற்போன காலத்தில் இருந்த அரசாங்கத்தின் அமைச்சரான ரணில் விக்ரமசிங்க இன்று மீண்டும் பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். மாத்தளையில் சிங்கள இளைஞர், யுவதிகள் மற்றும் சிறுவர்களுக்கு எதிராக அட்டூழியங்கள் இடம்பெற்றுக்கொண்டிருந்த வேளையில் மாத்தளையின் சர்வ வல்லமை படைத்த இராணுவ ஆட்சியாளராக நியமிக்கப்பட்டா நந்தசேன கோட்டாபய ராஜபக்சவினால் அவர் நியமிக்கப்பட்டுள்ளார். நிதி ரீதியாகவும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பில், இவர்கள் இருவரையும் நீதிக்கு முன் நிறுத்த போராடும் அனைவருக்கும் ITJP/JDS அறிக்கை போதுமான ஆதாரங்களை வழங்குகிறது." என பிரிட்டோ பெர்னாண்டோ தெரிவித்தார்.

முழு அறிக்கை:
https://itjpsl.com/reports/gotabaya-rajapaksa-the-sri-lankan-presidents-role-in-1989-mass-atrocities


MANIPAY HINDU COLLEGE - MANIPAY LADIES COLLEGE
OLD STUDENTS ASSOCIATION - CANADA (ESTD 1991)
மானிப்பாய் இந்துக் கல்லூரி - மானிப்பாய் மகளிர் கல்லூரி
பழைய மாணவர் சங்கம் - கனடா (ஸ்தாபிதம் 1991)

**மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா**

**29ம் பொங்கும் பொழுது விழா - June 04, 2022**

மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா நடாத்தும் பொங்கும் பொழுது விழா ஜுன் 04ம் திகதி சனிக்கிழமை, மாலை பிற்பகல் 5:30 மணி தொடக்கம் இரவு 10:30 மணி வரை 1120 Tapscott Road Unit 3, Scarborough, வில் அமைந்துள்ள தமிழிசைக்கலா மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினர் உரை, விழா சஞ்சிகை வெளியீடு, திரையிசைப் பாடல்கள், மிருதங்கம், இணைவுநடனம் (Fusion Dance), ஆகிய நிகழ்சிகளோடு பழைய மாணவர் கலந்துரையாடுவதற்குரிய சந்தர்பங்களுக்கும் இடம் அளிக்கப்படும்

இவ்விழாவிற்கு பழைய மாணவர்கள், மாணவிகள் அவர்தம் வாழ்கை துணைவர்கள், பிள்ளைகள், நண்பர்கள், நலன்விரும்பிகள் யாவரும் சமூகமளித்து சிறப்பிக்குமாறு பழைய மாணவர் சங்க செயற்குழு அங்கத்தினர் அன்புடன் அழைக்கிறார்கள்.

தொடர்புகட்கு:

ச. வசந்தராஜன்
தலைவர்
(416-289-9008)

சி. கணேசலிங்கம்
உப தலைவர்
(416-499-6248)

மானிப்பாய் இந்துக்கல்லூரி - மானிப்பாய் மகளிர் கல்லூரி பழையமாணவர் சங்கம் - கனடா

*அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல், ஆலயம் பதினாயிரம் நாட்டல், பின்னருள்ள தருமங்கள் யாவும், பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல், அன்னயாவினும் புண்ணியம் கோடி* ***ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்*** *- Bharathi*

# இன்று இலங்கைக்குத் தேவை ஆட்சி மாற்றம் அல்ல, தேவை ஆட்சிமுறைமையில் மாற்றம்!

- கனடா நக்கீரன்

*காலம் என்பது கறங்கு போல் சுழன்று*
*மேலது கீழாய் கீழது மேலாய்,*
*மாற்றிடும் தோற்றம் மறந்தனை போலும்*
*(மனோன்மணியம்)*

அதாவது காலம் என்பது காற்றாடி போன்றது. இன்று மேல் நிலையில் இருப்பவர்கள் நாளை கீழ் நிலைக்கு வரலாம். அதேபோல் இன்று கீழே இருப்பவர்கள் நாளை மேல்நிலைக்கு வரலாம். எதுவுமே நிரந்தரம் இல்லை. இன்று இருப்பார் நாளை இல்லை. இப்போது நடப்பது உண்மை. அடுத்த வி-னாடி நமக்கு என்ன நடக்கும் என்று நமக்கே தெரி-யாது. எதிர்காலம் ஒரு புதிர். அதனால் தான் இந்த உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. மாற்றங்கள் நம் வாழ்வில், நம்மை சுற்றியுள்ளபூமியில், பருவ நிலைகளில் எப்போதும் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

இலங்கை அரசியலிலும் எதிர்பாராத மாற்றங்கள் மின்னல் வேகத்தில் மாறிக்கொண்டிருக்கின்றன. ஒப்பாரும் மிக்காரும் இல்லாத ஒரு சிங்கள - பவுத்த தலைவராய் வலம் வந்து கொண்டிருந்த பிரதமர் மகிந்த இராசபக்ச தனது பதவியைத் துறந்து திரு-கோணமலைக் கடற்படைத் தளத்துக்கு ஓடியொ-ளிய வேண்டி நேரிட்டது. அவர் மட்டுமல்ல அவரது குடும்பமும் சேர்ந்து ஓடியொளிந்து கொண்டது.

போர்க்காலத்தில் வெள்ளைவானில் கடத்தப்பட்டவர்களது சித்திரவதை முகாமாக இந்தத் திருகோணமலைக் கடற்படைத்தளம் விளங்கியது. இந்தக் கடற்படைத்தளத்தில்தான் கொழும்பிலும் அதன் சுற்றுப்புறத்திலும் வாழ்ந்த தமிழ் இளைஞர்கள் பதினொ-ருவர் கப்பம் கேட்டு வெள்ளைவானில் கடத்தப்பட்டு கடுமையான சித்திரவதைக்கு உள்ளாக்கப் பட்டனர். பின்னர் அவர்கள் கொல்லப்பட்டார்கள்.




அது மட்டுமல்ல. போர் முடிந்த மே 18 மாலை விடுதலைப் புலிக-ளது முன்னணித் தளபதிகள், பொறுப்பாளர்கள் என ஐம்பதுக்கும் மேற்பட்ட போராளிகள் வட்டுவாகலில் இராணுவத்திடம் சரணடைந்தார்கள். அவர்களில் எழிலன், திலகர், கவிஞர் இரத்தினதுரை, பேபி சுப்பிரமணியன், பாலகுமார் என ஐம்பதுக்கும் அதிகமானவர்கள் இராணுவத்தினரால் 'ஒலு குருகி-ய விசாரணைக்கு' என இராணுவத்தினரால் இபோச பேருந்துகளில் அழைத்துச் செல்லப்பட்டனர். அதன் பின் அவர்கள் திரும்பவில்லை. அவர்கள் எல்லோரும் இதே திருகோணமலைக் கடற்படைத் தளத்துக்கு கொண்டு செல்லப்பட்டு கொல்லப்பட்டடார்கள் என நம்பப்படுகிறது. கொல்லப்பட்ட வி.புலிகளின் ஆவி-கள் மகிந்த இராசபக்சவை நிம்மதியாகத் தூங்க விட்டிருக்காது என்பது நிச்சயம்! ஆனால் இராணுவம் தங்களிடம் விடுதலைப் புலிகள் சரண் அடையவில்லை என மறுத்து வருகிறது.

விடுதலைப் புலிகளைத் தோற்கடித்த சிங்களப் படையினரை நினைவு கூரும் மே 18 நாளை 'போர் வீரர்கள் தேசிய நாளாக' சனா-திபதியாக இருந்த மகிந்த இராசபக்ச மிகவும் தட-புடலாகக் காலிமுகத் திடலில் கொண்டாடி வந்தார். முப்படைகளின் அணிவகுப்பை மேடையில் நின்று கொண்டு சையசைத்தார். அருகில் அவரது சகோதரர் கோட்டபய இராசபக்ச நின்று கொண்டிருந்தார். சிங்கள - பவுத்த மக்கள் வி.புலிகளைத் தோற்கடித்த மகிந்த இராசபக்சவை அனுராதபுரத்தை ஆண்ட தமிழ்மன்னன் எல்லாளனைத் (கிமு 205 - 161) தோற்கடித்த துட்டகைமுனுவுக்கு நிகராகப் போற்றினார்கள்.



ஆனால் இந்த ஆண்டு படை-யினரின் போர் வெற்றிக் கொண்டாட்டம் காலிமுகத் திடலில் நடைபெறவேயில்லை. நாடெங்கும் நிலவும் மக்களின் கொந்தளிப்பு அதற்கு இடம் கொடுக்கவில்லை.

நாடு பாரிய பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிக்கும் முகம் கொடுத்துக் கொண்டிருக்கிறது. எரிபொருள், சமையல் எரிபொருள், பால் மா போன்றவற்றுக்கு நாடெங்கும் மக்கள் நீண்ட வரி-சையில் நாட்கணக்கில் காத்து நிற்கின்றனர். எரி-பொருள் ஏற்றிவந்த 3 வெளிநாட்டுக் கப்பல்கள் சர்வதேச கடற்பரப்பில் நங்கூரமிட்டு தரித்து நிற்கின்றன. அந்தக் கப்பல்களுக்கு செலுத்த வேண்டிய பல மில்லியன் அமெரிக்க டொலர்கள் மத்திய வங்கியிடம் இல்லாததே காரணமாகும்.

இந்த நெருக்கடிக்குள்ளும் மகிந்த இராசபக்ச போரில் மடிந்த சிங்கள இராணுவத்தினருக்கு போர் வீரர்கள் தேசிய நாளான மே 19 அன்று பத்தரைமுல்லவில் உள்ள நினைவிடத்தில் மலர் அஞ்சலி செலுத்தினார்.

சனாதிபதி கோட்டபய இராசபக்ச இராணுவத்தில் உள்ள 396 அதிகாரிகள், 8,110 சிப்பாய்கள், கடற்படையில் 74 அதிகாரிகள் மற்றும் 2,010 சிப்பாய்கள், விமானப்படையில் 450 அதிகாரிகள் 3,361 சிப்பாய்கள் என மொத்தம் 920 அதிகாரிகள் மற்றும் 13 ஆயிரத்து 481 சிப்பாய்கள் என்று 17 ஆயிரத்து 407 படையினருக்குச் சம்பள உயர்வுடன் கூடிய தர உயர்வு தாராளமாக வழங்கப்பட்டுள்ளது. இதனால் மாதாந்தம் பல நூறு கோடி ரூபா செலவா-கப் போகிறது. இந்த மாதம் அரச ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்கப் பணம் இல்லை என்றும் நோட்டுகளை அச்சிட்டுக் கொடுப்பதுதான் ஒரே வழி என்று நாட்டின் பிரதமர் இரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார். ஏற்கனவே திரில்லியன் கணக்கான ரூபாய் நோட்டுகளை அச்சிட்டு வெளியிட்டதால் நாட்டின் பணவீக்கம் அதிகரித்து வருகிறது.

அதேசமயம் காலிமுகத் திடலில் முள்ளிவாய்க்கால் 13 ஆவது நினைவேந்தல் நாள் பெரும்பான்மை சிங்கள மக்களால் உணர்வு பூர்வமாக அனுட்டிக்கப்பட்டிருக்கிறது. முள்ளிவாய்க்கால் கஞ்சியும் வழங்கப்பட்டது. போர் முடிந்து 13 ஆண்டுகள் ஆகின்ற நிலையில், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தவிர வேறு எந்தவொரு பகுதியிலும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் நடத்தப்படவில்லை. காலிமுகத்திடலில் நடந்தேறிய நினைவேந்தல் நிகழ்வு பெரும்பான்மை மக்களது மனதில் ஏற்பட்டுள்ள பாரிய மாற்றமாகும். இது தொடர்ந்தால் இலங்கை அரசியலை ஆட்டிப்படைத்து வரும் இனவாதமும் மத அடிப்படை வாதமும் முடிவுக்கு வர வாய்ப்பு இருக்கிறது. **(https://www.bbc.com/tamil/sri-lanka-61491928)**

இலங்கையில் அதிகரித்து வரும் பணவீக்கத்தினால் ஏழைகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக ஜோன்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரப் பேராசிரியரான ஸ்டீவ் ஹான்கே கொழும்பு ஊடகம் ஒன்றிடம் பேசிய அவர் "நாட்டின் ஆண்டு பணவீக்கம் 21.5 விழுக்காடாக இருந்தாலும், உண்மையான பணவீக்கம் 132 விழுக்காடு என்று குறிப்பிட்டுள்ளார். அதாவது அதிகாரப்பூர்வ பணவீக்க விழுக்காட்டைக் காட்டிலும் விட உண்மையான பணவீக்க விழுக்காடு 6 மடங்கு அதிகமாக உள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறு அதிகரித்த பணவீக்கம் ஒரு பொருளாதாரப் பேரழிவு என்று கூறிய பேராசிரி-யர், பணக்காரர்களை விட ஏழைகளே அதிகம் பாதிக்கப்படுவதுதான் இங்குள்ள உண்மையான சிக்கல் என்று எச்சரித்துள்ளார். மேலும் இவ்வாறானதொரு சூழ்நிலை இறுதியில் அரசியல் சிக்கலாக உருவா-கும் எனவும் அவர் எச்சரித்துள்ளார். எவ்வாறாயினும் "இறுதியில் இலங்கையில் எல்லாம் நின்றுவிடும்" எனத் தனக்குத் தோன்றுவதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

ஒரு மனிதனுக்குத் துன்பங்கள் தனித்தனியாக வருவதில்லை. வரிசையாக வருகின்றன. இது நாட்டுக்கும் பொருந்தும். முதல் முறையாக இலங்கை அரசு ஏப்ரில் 18 ஆம் தேதி கடனாளிகளுக்குச் செலுத்த வேண்டிய 78 மில்லியன் டொ-லர் மதிப்புடைய கூப்பன்களை அளிக்க 30 நாட்கள் கெடு முடிந்த நிலை-யில் இலங்கை அதிகாரப்பூர்வமாக ஒட்டாண்டி ஆகியுள்ளது. மேலும் இலங்கை அரசு தோராயமாக 12.6 பில்லியன் டொலர் கொடுப்பனவை நிறுத்தி வைத்துள்ளது. 1948 இல் பிரிட்டனிடம் இருந்து சுதந்திரம் பெற்ற பிறகு இலங்கை முதல் முறையாக வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் ஒட்டாண்டியாகியுள்ளது.

பிந்திக் கிடைத்த செய்தியின்படி இலங்கை அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்வதற்கு உலக வங்கி இலங்கைக்குச் 160 மில்லியன் டொலர்களை இடைக்கால நிதியு-தவியாக கொடுத்துள்ளது.

இலங்கை அரசுக்குச் சொந்தமான இரண்டு வங்கிகள் எந்த நேரமும் ஒட்டாண்டியாகப் போகலாம் என்ற செய்தி அரசல் புரசலாக நிதி வட்டாரங்களில் அடிபடுகிறது. இதில் ஒரு வங்கியிடம் மட்டும் அரசு ரூபா 600 பில்லியன் கடன் வாங்கியுள்ளது.

பிரதமர் விக்கிரமசிங்க அலரிமாளிகையின் ஒரு மாதச் செலவை ரூபா 120 மில்லியனில் இருந்து பாதியாக 60 மில்லியனாக குறைத்துள்ளார். இது நல்ல முடிவு. ஆனால் இதற்கும் மேலாக அமைச்சர்கள், துணை அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் போன்றோரது சம்பளமும் சலுகைகளும் குறைக்கப்பட வேண்டும்.

ஒரு அமைச்சரவை அமைச்சரின் மாதச் சம்பளமாக ரூபா 140,000 கொடுப்படுகிறது. மேலதி-கமாக உத்தியோகபூர்வ குடியிருப்பு மற்றும் அலு-வலகம் தனிப்பட்ட ஊழியர்களும் ஒதுக்கப்படுகிறது. ஒவ்வொரு அமைச்சரவை அமைச்சருக்கும் நான்கு வாகனங்கள் ஒதுக்கப்படுகிறது. உள்நாட்டு விமானப் பயணத்திற்காக, இலங்கை விமானப்படையின் எண். 4 **(VVIP/VIP)** உலங்குவானூர்தி ஒதுக்கப்படுகிறது.

அடுத்த இரண்டுமாதமும் இலங்கைக்கு நெருக்கடியான காலம் என பிரதமர் விக்கிரமசிங்க சொல்கிறார். இலங்கைக்கு இன்று தேவைப்படுவது ஆட்சி மாற்றமல்ல, புரட்சியைத் தவிர்ப்பதற்கான பரந்த பொருளாதார சீர்திருத்தங்கள் உள்ளிட்ட அமைப்புகளின் மாற்றமே என்றும் தெரிவிக்கிறார்.

யதார்த்தம் என்னவென்றால் வெறும் ஆட்களை மாற்றுவதோ அல்லது இன்னும் சில புத்திசாலிகள் அல்லது திறமையானவர்களை நியமிப்பதோ நாட்டின் பொருளாதார நிலையில் காத்திரமான மாற்றம் எதனையும் கொண்டு வரப்போவதில்லை. தன்னம்பிக்கையுடன் செயல்படும் நல்லவர்களுக்குக் கூட, சட்டத்தின் ஆட்சி மதிக்கப்படும் ஒட்டுமொத்தச் சூழல் இருக்க வேண்டும்.

பொருளாதரத்தில் மாற்றம் கொண்டு வர வேண்டும் என்றால் சமூக மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும். அதற்கும் மேலாக அரசியல் அமைப்பில் மாற்றம் கொண்டுவரப் படவேண்டும். இப்போதுள்ள நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறை-மை மாற்றப்பட வேண்டும். சட்ட திருத்தம் 20 யை ஒழித்து விட்டு மீண்டும் சட்ட திருத்தம் 19யை சட்ட திருத்தம் 21 நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டு மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்ற வேண்டும்.

தூர நோக்கில் ஒற்றையாட்சி அரசியல் முறைமை மாற்றப்பட்டு இணைப்பாட்சி முறைமையை நடைமுறைப்படுத்த வேண்டும். பவுத்த மதத்துக்கு அரசியல் அமைப்பில் முன்னுரிமை கொடுப்பதை மாற்றி நாடு மதசார்பற்ற நாடென்று அறிவிக்க வேண்டும். நாட்டில் உள்ள மூன்று மதங்களுக்கும் ஒத்த உரிமை அளிக்க வேண்டும். சிங்களத்திற்கும் தமிழுக்கும் உண்மையான சமத்துவம் உறுதிப்படுத்த வேண்டும்.

வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட்டு அதிகா-ரம் மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் பகிரப்பட வேண்டும். ஒன்றுபட்ட இலங்கையில் தமிழ்மக்கள் தங்களைத் தாங்களே ஆட்சி செய்யும் சுயாட்சி உரிமை வழங்கப்பட வேண்டும். இப்போதுள்ள தேசியக் கொடி மாற்றப்பட வேண்டும். மூவின மக்களையும் குறிக்கும் மூவர்ண கொடி ஒன்றை உருவாக்க வேண்டும். கருத்துச் சுதந்திரம் உட்பட அடிப்படை மனித உரிமைகள் அரசியல் அமைப்பில் உள்ளடக்கப்பட வேண்டும்.



நாடு சுதந்திரம் பெற்ற காலம் தொடக்கம் பதவி வெறி பிடித்த சிங்கள - பவுத்த அரசியல்வாதிகள் இனவாதத்தையும் மதவாதத்தையும் முதலீடா-க வைத்தே மாறி மாறி ஆட்சியைப் பிடித்து வந்துள்ளார்கள்.

மேலே கூறியவாறு நாட்டின் அரசியலமைப்பு முற்றாக மாற்றி அமைக்கப்பட வேண்டும். தேருக்கு அச்சாணி போல நாட்டுக்கு அரசியல் அமைப்புத்தான் அச்சாணி. சகல மக்களதும் சமத்துவம் உறுதிசெய்யப்பட வேண்டும்.

காலிமுகத் திடலிலும், வீதிகளிலும் இரவு பகல் பாராது படித்த பல்கலைக் கழக மாணவர்கள் மற்றும் பொது மக்கள் முன்னெடுக்கும் போராட்டங்கள் அந்த இலக்கை நோக்கியதாக இருக்க வேண்டும். காலிமு-கத் திடலில் நடந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் அதன் தொடக்கமாக இருக்க வேண்டும்.

இன்று இலங்கைக்குத் தேவை ஆட்சி மாற்றம் அல்ல, தேவை ஆட்சிமுறைமையில் மாற்றம்!

இந்தியா செய்திகள்
India News

# பேரறிவாளனை உச்சநீதிமன்றம் விடுதலை செய்தது

## *சட்டப்பிரிவு 142 ஐப் பயன்படுத்தி நீதிபதிகள் தீர்ப்பு



பேரறிவாளன் விடுதலை தொடர்பான வழக்கு உச்சநீதிமன்ற நீதிபதி நாகேஸ்வராவ் தலைமையிலான அமர்வு முன் விசாரணை நடைபெற்று வருகிறது.

கடந்த 11ம் தேதி நடைபெற்ற விசாரணையின் போது, நீதிபதிகள் "கடந்த முறை இந்த வழக்கு விசாரனைக்கு வந்தபோது, பேரறிவாளன் விடுதலை விவகாரத்தில் மத்திய அரசுக்கு இரண்டு வாய்ப்புகள் வழங்கினோம். அதில் ஏதேனும் முடிவு செய்து உள்ளீர்களா?" என கேள்வி எழுப்பினர். அப்போது மத்திய அரசு தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் நடராஜ், இந்த வழக்கில் சில வாதங்களை முன்வைக்க உள்ளதாக கூறினார். அப்போது நீதிபதிகள், கவர்னர் அமைச்சரவை முடிவை ஜனாதிபதிக்கு அனுப்ப அதிகாரம் உள்ளதா? என்று கேள்வி எழுப்பினர்.

இதனையடுத்து மத்திய அரசு வழக்கறிஞர், "இந்த வழக்கில் விடுதலை தொடர்பான அதிகாரம் 72-வது அரசியல் சாசனத்தின்படி மத்திய அரசுக்கு மட்டுமே உள்ளது. ஒரு வழக்கின் விசாரணையை எந்த விசாரணை அமைப்பு மேற்கொள்கிறதோ, அதைப் பொறுத்தே அதில் முடிவெடுக்கும் அதிகாரம் யாருக்கு என்பது முடிவு செய்யப்படும். எனவே இவ்வழக்கில் மத்திய அரசின் விசாரணை அமைப்புகள் விசாரணை நடத்தியதால் இந்த வழக்கில் நிவாரணம் வழங்கும் அதிகாரம் மத்திய அரசுக்கே உண்டு. அதன்படி மாநில அரசின் வரம்புக்குள் வரும் அமைப்புகள் விசாரித்து அதில் தண்டனைப்பெற்றவர்களை, தண்டனை காலத்துக்கு முன்னரே விடுவிப்பது தொடர்பான முடிவை மாநில அரசு எடுக்கலாம். ஆனால் பேரறிவாளன் விவகாரத்தில் அவ்வாறு இல்லை" என்று வாதிட்டார்.

தொடர்ந்து நீதிபதிகள், தமிழக அமைச்சரவையின் முடிவை ஜனாதிபதிக்கு கவர்னர் அனுப்பி வைத்த போது என்னென்ன சட்டப்பிரிவுகளின் கீழ் அதிகாரம் இருக்கிறது என்ற விவரங்களை ஏன் குறிப்பிடாமல் அனுப்பி வைத்துள்ளார்? என்று கேள்வி எழுப்பினர். அதற்கு தமிழக அரசு தரப்பில், கவர்னரே இந்த விவகரத்தில் கையெழுத்திட்டு முடித்திருக்க வேண்டும், ஆனால் அதைவிடுத்து.

ஜனாதிபதிக்கு அனுப்பி, அவரையும் இந்த வழக்கினுள் இழுத்து விட்டுள்ளதாக தெரிவித்தார். மேலும், அமைச்சரவையின் முடிவிற்கு கையொப்பம் இட வேண்டியது கவர்னரின் வேலை. ஆனால் அதனை செய்யாமல் ஆவணங்களை கிடப்பில் போட்டு வைத்திருந்தார் எனவும் பேரறிவாளன் விடுதலை விவகாரத்தில் தமிழக அமைச்சரவையின் முடிவை ஏற்றுக் கொள்ளாததன் மூலம் மிகப்பெரிய அரசியல் சாசன பிழையை தமிழக கவர்னர் செய்துவிட்டதாக தெரிவித்தார்.

இதையடுத்து, இந்த வழக்கின் மற்ற வாதங்களை அனைத்து தரப்பும் எழுத்துப்பூர்வமாக தாக்கல் செய்ய உத்தரவிட்ட நீதிபதிகள் இந்த வழக்கை தேதி குறிப்பிடாமல் தீர்ப்புக்காக ஒத்திவைத்து உத்தரவிட்டிருந்தனர். இந்நிலையில் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் இருந்து பேரறிவாளனை விடுவிக்க கோரிய வழக்கில் சுப்ரீம்கோர்ட்டு இன்று தீர்ப்பு வழங்கியது. ராஜுவ்காந்தி கொலை வழக்கில் சிறையில் இருந்த பேரறிவாளன் விடுதலை என்று உச்சநீதிமன்றம் அதிரடியாக தீர்ப்பு வழங்கியுள்ளது. பேரறிவாளனின் மனுவை விசாரித்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள் நாகேஸ்வரராவ் தலைமையிலான அமர்வு தீர்ப்பு வழங்கியது. சட்டப்பிரிவு 142 பயன்படுத்தி பேரறிவாளனை உச்சநீதிமன்றம் விடுதலை செய்தது.



# சிதம்பரம் கோயிலில் கனகசபை மீதேறி பக்தர்கள் வழிபட அனுமதி – தமிழக அரசு அறிவிப்பு

கடலூர் மாவட்டத்தில் உள்ள சிதம்பரம் நடராஜர் கோயிலில் கனகசபை மீது ஏறி வழிபட அனுமதி வழங்கப்படுவதாக தமிழக அரசு அறிவித்துள்ளது. முன்னதாக கொரோனா பெருந்தொற்று காரணமாக திருக்கோயில்களில் பக்தர்களை அனுமதிப்பதற்கு அரசால் வழங்கப்பட்ட அரசு வழிகாட்டு நெறிமுறைகளின்படி பக்தர்களிடமிருந்து பூஜை பொருட்களை பெறுதல், அமர்ந்து தரிசனம் செய்தல்,சாமிகளை தொட்டு தரிசனம் செய்தல் மற்றும் அங்கபிரதட்சனம் செய்தல் ஆகியவை தவிர்க்கப்பட்டு, கோயில் வளாகத்தில் சமூக இடைவெளியுடன் பக்தர்கள் தரிசனம் செய்ய அனுமதிக்கப்பட்டு வந்தனர்.ஆனால், தற்போது கொரோனா தொற்று பெருமளவு குறைந்துள்ளதால் வழிப்பாட்டு தலங்களில் பக்தர்களுக்கு விதிக்கப்பட்ட தடைகள் விலக்கப்பட்டு அனைத்து திருக்கோயில்களிலும் ஏற்கனவே இருந்த வழிபாட்டு நடைமுறைகள் மீண்டும் தொடரும் நிலையில், சிதம்பரம் அருள்மிகு சபாநாயகர் திருக்கோயிலை நிர்வகித்து வரும் பொது தீட்சிதர்கள் கனகசபை மண்டபத்தின் மீதேறி பக்தர்கள் தரிசனம் செய்ய தடை விதித்திருந்தனர்.

இந்நிலையில்,கனகசபை மீது ஏறி வழிபடும் நடைமுறை தொன்று தொட்டு வழக்கத்தில் இருந்து வருகிறது எனக் கூறிய இந்து சமய அறநிலையத்துறை, பக்தர்களின் கோரிக்கையை ஏற்று நடராஜரான சபாநாயகரை தரிசிக்க அனுமதி அளித்துள்ளது. இந்த அறிவிப்பு பக்தர்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப்பணத்தில் எல்லாக் கடன்களையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வு ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions without Bankruptcy

crc
CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

இந்தியா செய்திகள்
India News

# நடிகர் திலகம் சிவாஜி கணேசன் மணிமண்டபத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆய்வு



சென்னையில் நடிகர் திலகம் சிவாஜிகணேசன் மணிமண்டபத்திற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதுபற்றி தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறி இருப்பதாவது:

நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்கு சென்னை காமராஜர் சாலை-டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை சந்திப்பில் 8 அடி உயரமுள்ள முழு உருவச் சிலையை நிறுவி 21.07.2006 அன்று கலைஞர் திறந்து வைத்தார். வழக்கின் காரணமாக அச்சிலை அகற்றப்பட்டு அரசின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள நடிகர் திலகம் சிவாஜி கணேசன் மணிமண்டபத்தில் தற்போது நிறுவப்பட்டுள்ளது.

நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் திருவுருவச் சிலையை, சிவாஜி கணேசனின் குடும்பத்தினரின் கோரிக்கையை ஏற்று, மணிமண்டபத்தின் வெளிப்புறத்தில் நிறுவுவதற்கான இடத்தினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மேலும், சென்னை, ராஜா அண்ணாமலைபுரத்தில் அமைந்துள்ள அம்பேத்கர் மணிமண்டபத்திற்கும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அப்போது விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவனால் 14.4.2022 அன்று அம்பேத்கரின் 132வது பிறந்த நாளன்று வழங்கப்பட்ட அம்பேத்கரின் முழு திருவுருவச் சிலையினை மணிமண்டபத்தில் நிறுவுவதற்கான இடத்தினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ஆய்வின் போது தயாநிதிமாறன் எம்.பி. செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் ஜெயசீலன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் மருமகனுக்கு சொந்தமான திருமண மண்டபத்தில் "லிப்ட்" அறுந்து விழுந்து பள்ளி மாணவன் பலி

முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் மருமகனுக்கு சொந்தமான திருமண மண்டபத்தில் லிப்ட் அறுந்து விழுந்து பள்ளி மாணவன் உயிரிழந்த விவகாரம் தொடர்பாக 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டியை அடுத்த பெத்திக்குப்பம் பகுதியில் அதிமுக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமாரின் மருமகனுக்கு சொந்தமான திருமண மண்டபம் ஒன்று உள்ளது.

அந்த திருமண மண்டபத்தில் நடைபெற்ற திருமணவிழா வரவேற்பு நிகழ்ச்சியின் போது கேட்டரிங் பணியில் ஈடுபட்டிருந்த இளைஞர்கள் கீழ் தளத்தில் இருந்து மேல்தளத்திற்கு உணவு எடுத்துக்கொண்டு வந்தனர். அப்போது லிப்ட் அறுந்து விழுந்து விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில் லிப்டுக்குள் இருந்த 11ம் வகுப்பு படிக்கும் பள்ளி மாணவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மேலும் 2 இளைஞர்கள் காயமடைந்தனர்.



இந்த நிலையில் இந்த விபத்து தொடர்பாக திருமண மண்டப மேலாளர் திருநாவுக்கரசு, மேற்பார்வையாளர் வெங்கடேசன், லிப்ட் ஆபரேட்டர் கக்கன் ஆகிய மூன்று பேரை போலீசார் கைது செய்துள்ளனர்.

# கைத் தொலைபேசியை பயன்படுத்துவதில் இந்திய குழந்தைகள் இளவயதில் முதிர்ச்சி அடைவதாக ஆய்வில் தகவல்



மொபைலை பயன்படுத்துவதில் இந்திய குழந்தைகள் இளவயதில் முதிர்ச்சி அடைந்துள்ளனர் என்பது ஆய்வில் தெரிய வந்துள்ளது.

உலகின் 10 பகுதிகளில் உள்ள பெற்றோர் மற்றும் குழந்தைகளிடையே நடத்தப்பட்ட "மெக்கா.ஃபி." ஆய்வில், இந்தியக் குழந்தைகள் இளைவயதிலேயே மொபைல் பயனபடுத்தும் அறிவை அடைகிறார்கள் என தெரியவந்துள்ளது.

ஆய்வின்படி, இந்தியாவில் 10-14 வயதுக்குட்பட்ட குழந்தைகளிடையே ஸ்மார்ட்போன் பயன்பாடு 83 சதவீதமாக உள்ளது. இது சர்வதேச சராசரியான 76 சதவீதத்தை விட 7 சதவீதம் ஆகும் அதிகம்.

இது இந்தியாவில் குழந்தைகளை ஆன்லைன் ஆபாயங்களுக்கு அதிகமாக உட்படுத்த வழிவகுத்தது. மேலும், சில 22 சதவீத இந்திய குழந்தைகள் இணைய அபாயத்தை அனுபவித்துள்ளனர், இது உலகளாவிய சராசரியான 17 சதவீதத்தை விட 5 சதவீதம் அதிகம் என்று ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

இந்தியப் பெற்றோர்களிடையே இணைய அச்சுறுத்தல் மற்றும் சமூக ஊடகங்களில் துஷ்பிரயோகம் பற்றிய கவலை 47 சதவீதமாக உள்ளது, இது உலகளாவிய சராசரியான 57 சதவீதத்தை விட 10 சத்வீதம் குறைவாகும்.

மேலும், ஒரு நபரின் உண்மையான அடையாளம் தெரியாமல் தனிப்பட்ட உரையாடல்களில் ஈடுபடும் இந்தியக் குழந்தைகளின் எண்ணிக்கை, உலகெங்கிலும் உள்ள மற்ற குழந்தைகளைக் காட்டிலும் 11 சதவீதம் அதிகம் என ஆய்வில் தெரியவந்து உள்ளது.

இதுகுறித்து மெக்கா.ஃபி மார்க்கெட்டிங் துணைத் தலைவர் சச்சின் பூரி கூறியதாவது:

இந்தியாவில் உள்ள குழந்தைகள் மொபைல் முதிர்ச்சியை அடையும் இளையவர்களில் ஒன்றாகவும், ஆன்லைன் அபாயங்களை அதிகம் வெளிப்படுத்துவதாகவும் தெரிவிக்கின்றனர். இந்த ஆராய்ச்சியின் மூலம், அவர்களின் இணைக்கப்பட்ட குடும்பங்களுக்கு பயனுள்ள ஆன்லைன் பாதுகாவலர்களாக வெற்றி பெறுவதற்குத் தேவையான அறிவை பெற்றோருக்கு வழங்க முயற்சி செய்கிறோம்.


இவ்வாறு அவர் கூறினார்.

# திருமணம் முடிந்த கையோடு தேர்வெழுதிய புதுமணப்பெண்



கர்நாடக மாநிலத்தில் திருமணம் முடிந்த கையோடு புதுமணப்பெண் பி.காம் தேர்வு எழுதினார்.

கர்நாடக மாநிலம் மாண்டியா மாவட்டம் பாண்டவபுரா தாலுகா லிங்கபுரா கிராமத்தைச் சேர்ந்தவர் ஐஸ்வர்யா (19). இவர் பாண்டவபுராவில் உள்ள எஸ்.டி.ஜி. கல்லூரியில் பி.காம் முதலாம் ஆண்டு படித்து வந்தார். இந்த நிலையில் ஐஸ்வர்யாவுக்கு அவரது பெற்றோர் திருமணம் செய்து வைக்க முடிவு செய்தனர். இந்நிலையில், ஐஸ்வர்யாவுக்கு நேற்று திருமணம் நடந்தது. அதே வேளையில் பி.காம் முதலாம் ஆண்டு செமஸ்டர் தேர்வும் நேற்று தொடங்கியது. படிப்புக்கு திருமணம் தடையாக இருக்கக் கூடாது என கருதிய ஐஸ்வர்யா, திருமணம் முடிந்த கையோடு தேர்வு எழுதச் செல்வதாக தனது கணவர் மற்றும் பெற்றோரிடம் கூறியிருந்தார். அதன்படி தாலிகட்டி முடிந்ததும் திருமண கோலத்தில் ஐஸ்வர்யா கல்லூரிக்குச் சென்று தேர்வு எழுதினார்.



# தனுஷ்கோடியில் புதிய கலங்கரை விளக்கம்; இலங்கையின் தலைமன்னார் வரை ஒளி தெரியும்

ராமேசுவரம் அருகே தனுஷ்கோடியில் புதியதாக கட்டப்பட்ட கலங்கரை விளக்கத்தை மத்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் துறை அமைச்சர் சர்பானந்தா சோனோவால் காணொலி மூலம் திறந்து வைத்தார்.

புயலால் அழிந்துபோன தனுஷ்கோடியை மீட்டெடுக்கும் வகையிலும் சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையிலும் இந்திய எல்லைப் பகுதியான மன்னார் வளைகுடா மற்றும் பாக் ஜலசந்தி கடற்கரை பகுதிகளை கண்காணிப்பதற்காகவும் ராமேசுவரம் அருகே தனுஷ்கோடியில் புதிய கலங்கரை விளக்கம் கட்ட திட்டமிடப்பட்டு 2020-ல் அடிக்கல் நாட்டப்பட்டது.

ரூ.7 கோடி மதிப்பில் 50 மீட்டர் உயரத்தில் மின்தூக்கி வசதிகளுடன் கூடிய கலங்கரை விளக்கமாக இது அமைக்கப்பட்டுள்ளது. இந்த கலங்கரை விளக்கத்திலிருந்து ராமேசுவரம் மற்றும் தனுஷ்கோடியின் அழகை சுற்றுலாப் பயணிகள் பார்வையிடுவதற்கு வசதியும், கலங்கரை விளக்க வளாகத்தில் குழந்தைகளுக்கான பூங்காவும் அமைக்கப்பட்டுள்ளது.

இதன் உச்சியில் பொருத்தப்பட்டுள்ள நவீன ரேடார் கருவிகள் மூலம் மன்னார் வளைகுடா மற்றும் பாக் ஜலசந்தி கடற்பகுதியில் செல்லும் கப்பல்கள், மீன்பிடி படகுகள் உள்ளிட்டவற்றை கண்காணிக்க முடியும். கலங்கரை விளக்கத்தின் மேல்பகுதியில் அமைக்கப்படும் மின் விளக்கின் ஒளியை 30 கி.மீ தூரத்திலிருந்து, அதாவது இலங்கையின் தலைமன்னாரிலிருந்தும் பார்க்கலாம்.

புதியதாக கட்டப்பட்டுள்ள இந்த கலங்கரை விளக்கத்தை மத்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் துறை அமைச்சர் சர்பானந்தா சோனோவால் காணொலி மூலம் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் ராமநாதபுரம் எம்.பி. நவாஸ்கனி, எம்.எல்.ஏ காதர்பாட்ஷா முத்துராமலிங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

# 26th YEAR IN PUBLISHING, NEWS, VIEWS AND TAMIL LITERATURE

# கனடா உதயன் 'இலங்கைச் சிறப்பிதழ் வெளியீடும் பிரதம ஆசிரியரின் 50 ஆண்டு கால கலை, இலக்கிய, ஊடகப் பயண விழாவும்

காலம்: **Sunday. May 29th, 2022**
**மாலை 5:30**

இடம்: **Metropolitan Centre**
**3840 Finch Avenue East**
**Scarborough, ON MIT 3TA**

வரவேற்புபசாரம்... உரைகள்... இசை மற்றும் நடனம்...







விழா பற்றிய விபரங்களுக்கு:

கதிர்: (416) 893-0399
சோதி: (647) 409-8966
வீணைமைந்தன்: (514) 684-3604
சங்கர்: (416) 270-4343
ஸ்ரீ: (416) 720-6811
மரியராசா: (416) 669-6437
சங்கர் சிவா: (647) 891-7725

(குறித்த நேரத்திற்கு விழா ஆரம்பமாகும்)

மீண்டும் தேர்வு செய்யுங்கள்

# VIJAY THANIGASALAM

ஸ்காபரோ றூஜ் பார்க் MPP வேட்பாளர்

## முன்கூட்டியே வாக்களியுங்கள்!

**MALVERN COMMUNITY RECREATION CENTRE**

30 Sewells Road, Scarborough, M1B 3G5

**May 19 - May 25**

10 AM - 8 PM (ET)

**HERON PARK COMMUNITY CENTRE**

292 Manse Road, Scarborough, M1E 3V4

**May 21 - May 28**

10 AM - 8 PM (ET)

**PORT UNION COMMUNITY CENTRE**

5450 Lawrence Avenue E, Scarborough, M1C 3B2

**May 24 - May 28**

10 AM - 8 PM (ET)



ONTARIO PC

முன்கூட்டியே வாக்களியுங்கள்!

**MAY 19TH - MAY 28TH**

vijaythani.ca info@vijaythani.ca 647-946-7761 362 Old Kingston Road

Authorized by the CFO for the Scarborough-Rouge Park PC Riding Association

# லண்டனில் ஜீன் மாதம் 11 ஆம் திகதி மலையக இலக்கிய மாநாடு

## லண்டனில் மலையக இலக்கிய மாநாடு


கோகிலம் சுப்பையா — இர.சிவலிங்கம் — தமிழோவியன்

வரும் ஜூன் மாதம் 11 ஆம் திகதி சனிக்கிழமை அன்று லண்டனில் மலையக இலக்கிய மாநாடு நடத்துவதற்கான ஏற்பாடுகள் முழுவீச்சில் நடந்து வருகின்றன. மலையகத் தமிழர்களின் வாழ்வு, கலாசாரம், கலைகள் சார்ந்து பல நிகழ்ச்சிகள் இதில் அரங்கேறவிருக்கின்றன.

இம்மாநாட்டின் ஒரு பகுதியாக கோகிலம் சுப்பையா அரங்கு, இர.சிவலிங்கம் அரங்கு, சோ.சந்திரசேகரம் அரங்கு, சி.வி.வேலுப்பிள்ளை அரங்கு, தமிழோவியன் அரங்கு, சாரல்நாடன் அரங்கு, காத்தாயி அரங்கு என ஏழு அரங்குகளில் 23 மலையக நூல்கள் அறிமுகமாக இருக்கின்றன.

புனைவு இலக்கியத்தைப் பொறுத்தமட்டில் அல்-அஸுமத், மாத்தளை சோமு, ஆகியோரின் நாவல்களும் மு.சிவலிங்கம், பிரமீளா பிரதீபன், பதுளை சேனாதிராஜா, தங்கவேல் ஆகியோரின் சிறுகதைகளும் தேர்வு செய்யப்பட்டுள்ளன. அமரர் உபாலி லீலாரட்னா எழுதிய சிங்கள நாவலின் தமிழாக்கமான இரா. சடகோபனின் "தேத்தண்ணி" முக்கிய மொழிபெயர்ப்பு நாவலாக ஆய்விற்குத் தேர்வு பெற்றிருக்கிறது. எஸ்தர், வண்ணச்சிறகு (அரு.சிவானந்தன்) ஆகியோரின் கவிதைத் தொகுப்புகளும் இதில் இடம்பெற்றிருக்கின்றன.

பி.ஆர்.பெரியசாமி, ச.கீதப்பொன்கலம், ந.சரவணன், மல்லியப்புசந்தி திலகர், வரதன் கிருஷ்ணா, எம்.வாமதேவன், கந்தப்பளை தாமரை யு.யோகா ஆகியோரின் சமூக, அரசியல் நூல்களும் இம்மாநாட்டில் முக்கிய கவனம் பெறவிருக்கின்றன. சோ. சந்திரசேகரம், மு. நித்தியானந்தன், பொன். பிரபாகரன் ஆகியோரின் ஆய்வுநூல்கள் மீதான விமர்சனங்களும் உள்ளன.

மைத்ரி ஜெகதீசனின் தேநீரும் புரிந்துணர்வும் (Tea and Solidarity), யோகேஸ்வரி விஜயபாலனின் முடிவில்லா சமத்துவமின்மை (Endless Inequality) ஆகிய இரு ஆங்கில ஆய்வு நூல்கள் மீதான விமர்சனங்களும் இந்நிகழ்வில் இடம்பெறவுள்ளன. மெய்வெளி நாடக அரங்கிற்காக சாம் பிரதீபன் தயாரித்தளிக்கும் "காத்தாயி காதை" என்ற நாடகம் இம்மாநாட்டில் அரங்கேறுகிறது.

முக்கிய நிகழ்வாக மு.நித்தியானந்தன், ஹெச்.ஹெச்.விக்ரமசிங்க தொகுத்து வழங்கும் சி.வி. வேலுப்பிள்ளையின் "மலையக அரசியல்: தலைவர்களும் தளபதிகளும்" என்ற நூல் இம்மாநாட்டில் வெளியிடப்படவிருக்கிறது. பிரிட்டன், ஜெர்மனி, நோர்வே, டென்மார்க்,பிரான்சு ஆகிய நாடுகளிலிருந்து 25 உரைஞர்கள் இம்மாநாட்டில் கலந்து கொள்கின்றனர்.

விம்பம் அமைப்பின் சார்பில், ஓவியர் கே.கிருஷ்ணராஜா மலையக இலக்கிய மாநாட்டு நிகழ்ச்சிகளுக்கான ஒருங்கிணைப்பை மேற்கொள்கிறார்.


சாரல்நாடன் — சோ.சந்திரசேகரம் — சி.வி.வேலுப்பிள்ளை

## தமிழ்ப்பூங்காவின்
## பாடுங்குயில் – 2022

தமிழ்பூங்காவின் பாடுங்குயில் 2022 இற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வயது 4 முதல் 12 வரை உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: May (வைகாசி) 31, 2022
விபரங்களுக்கு: (647) 706-6123
3001 Markham Road #21 Scarborough, ONM1X 1L6

## கனடா Jay's Professional Truck Training Centre நிறுவனம் தமிழ் இளைஞர்களுக்கு அழைப்பு விடுக்கின்றது




கனடாவில் அதிக தட்டுப்பாடுகள் நிறைந்த கனரக வாகன சாரதிகளை **(Truck Drivers)** உருவாக்குவதில் பல வருட அனுபவம் கொண்ட **Canada's Jay's Professional Truck Training Centre** நிறுவனம் இங்குள்ள தமிழ் இளைஞர்களுக்கு அழைப்பு விடுக்கின்றது.

ஒன்றாரியோ மாகாணத்தில் மாத்திரம் சுமார் இரண்டு இலட்சம் கனரக வாகன சாரதிகளுக்கு **Truck Drivers** - வெற்றிடம் உள்ளதாக மாகாண அரசு அறிவித்துள்ளது.

இவ்வாறான நிலையில் இங்குள்ள தமிழ் இளைஞர்களுக்கு தகுந்த பயிற்சி அளித்து அவர்களுக்கு உடனடியாகவே புகழ்பெற்ற நிறுவனங்களில் வேலை வாய்ப்பையும் பெற்று தர முடியும் என்று **Jay's Professional Truck Training Centre** நிறுவனத்தின் அதிபர் திரு ஜே ஜெயானந்தன் தெரிவித்துள்ளார். தொலைபேசியில் தொடர்பு கொள்ள 416-771-8041 என்னும் இலக்கத்தை அழைக்கவும்.









- First Tamil elected to political office with 16 years of experience
  வட அமெரிக்காவில் பொதுச்சேவைக்கு முதன்முதலில் தேர்ந்தெடுக்கப்பட்ட 16 வருடம் அரசியல் அனுபவம் கொண்ட தமிழர்.
- Championed the new Aaniin Community Centre and Library
  சன சமூகநிலையம், நூலகம் உருவாக்கத்தில் முக்கிய பங்காற்றியவர்.
- The First Politician to name 3 city streets in Markham in honor of the Tamil Community.
  கனடாவில் முக்கிய இடங்களுக்கு தமிழ் பெயர்களை சூட்டி தமிழ் அடையாளங்களை பேணியவர்.
- First municipality to recognize Thai Pongal & Tamil Heritage Month
  மார்க்கத்தில் இவரின் பதவிக்காலத்தில் கனடாவில் முதன்முதலில் தைப்பொங்கலும், தமிழர்மரபுரிமை மாதமும் உத்தியோகபூர்வமாக பிரகடனப்படுத்தப்பட்டது.
- Passed a resolution to investigate genocide in Srilanka
  தமிழர்கள் மீதான இனப்டுகொலையை விசாரிக்க வேண்டும் என்ற தீர்மானத்தை கனடாவில் முதன்முதலில் கொண்டுவந்தது மார்க்கம் மாநகரசபையாகும்.
- Friendship agreement between the City of Markham and Mullaitivu
  இவரது பதவிக்காலத்தில் மார்க்கம் மாநகர சபைக்கும் வடமாகாணத்துக்கும் (முல்லைத்தீவு) இடையே நட்பு ரீதியான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.
- Helped to introduce Bill 104, Tamil Genocide Education Week
  ஒன்ட்டாரியோ பாராளமன்றத்தில் தமிழ் இன அழிப்புக்கல்விவாரம் அறிமுகப்படுத்தப்பட்டு (**bill104**) மாணவர்கள் தமிழர் இனஅழிப்பு பற்றிய கல்வி கற்கும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது.
- Committed to postsecondary education by helping secure the York University campus in Markham
  யோர்க் பல்கலைகழக உயர் கல்வி வளாகத்தை மார்கத்துக்கு கொண்டுவருவதற்கு பங்காற்றியவர்.

***IF YOU HAVE ANY QUESTIONS ABOUT VOTING OR NEED A RIDE, PLEASE DO NOT HESITATE TO CONTACT OUR TEAM!***

www.votelogan.ca | 905-209-6825 | logankanapathi

Authorized by the CFO of the Logan Kanapathi Campaign

# MORTGAGES & REFINANCES

WE WILL GET THE MORTGAGE FOR

- LOW INCOME
- BAD CREDIT
- CONSUMER PROPOSAL



அனைத்துவிதமான மோட்கேஜ் தேவைகளுக்கும், ஆலோசனைகளுக்கும் அழையுங்கள்!

PRIVATE FIRST AND 2ND MORTGAGES WITHIN 24 HOURS



WE ARE CONFIDENT THAT WE CAN HELP YOU

Shan Thayaparan

Mortgage Architect M08009140

MORTGAGE ARCHITECTS

416-826-7426

shan@shan123.com

# தமிழகத்தின் முதல்வர் ஸ்டாலினின் வாழ்க்கை சினிமாவாகிறது

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்க்கையை விரைவில் சினிமாவாக எடுப்பதற்றள் நடந்து வருவதாகவும், அதில் யார் நடிக்க போகிறார் என்ற விபரத்தையும் முக்கிய பிரபலம் வெளியிட்டுள்ளார். தமிழ் சினிமாவில் பயோபிக் வருகை அதிகரித்து வருகிறது. முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் வாழ்க்கை தலைவி என்ற பெயரில் சமீபத்தில் படமாக்கப்பட்டது. ஜெயலலிதாவின் வாழ்க்கையை பலரும் ஒரே சமயத்தில் சினிமாவாக எடுத்தனர். எம்ஜிஆர், பெரியார், காமராஜர், பாரதியார் என பலரின் வாழ்க்கையும் சினிமாவாக எடுக்கப்பட்டு விட்டது.

அந்த வரிசையில் தற்போதைய தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினின் வாழ்க்கையை சினிமாவாக எடுக்க போகிறார்களாம். இந்த தகவலை வெளியிட்டிருப்பதும், இதை படமாக எடுக்க போவதும் வேறு யாரும் இல்லை நடிகரும், தயாரிப்பாளரும், எம்எல்ஏ.,வுமான உதயநிதி ஸ்டாலின் தான். ஸ்டாலின் பயோபிக் எடுக்கும் வேலைகள் விரைவில் துவங்கப்பட உள்ளதாக கூறப்படுகிறது.

நடிகர் சிவகார்த்திகேயன் நடித்த டான் படம் நேற்று ரிலீசானது. அறிமுக இயக்குனர் சிபி சக்கரவர்த்தி இயக்கி உள்ள இந்த படம் கலவையான விமர்சனங்களை பெற்றுள்ளது. லைகா ப்ரொடக்ஷன்ஸ் மற்றும் சிவகார்த்திகேயனின் எஸ்கே ப்ரொடக்ஷன்ஸ் தயாரித்துள்ள இந்த படத்தை உதயநிதியின் ரெட் ஜெயண்ட் மூவிஸ் தான் தமிழகத்தில் வெளியிட்டுள்ளது. டான் படத்தை பார்த்து விட்டு, உதயநிதி தனது கருத்தை தெரிவித்துள்ளார். அப்போது அவர் கூறுகையில், என் அப்பாவின் கதாபாத்திரமும், டான் படத்தில் சமுத்திரக்கனியின் கதாபாத்திரமும் ஒன்று தான். ஆனால் என்ன ஒரு வித்தியாசம் என்றால் என் அப்பா மிகப் பெரிய சினிமா விரும்பி. எல்லா படங்களையும் உடனடியாக பார்த்து விடுவார். ஆனால் நான் படம் எடுப்பதை அவர் விரும்பவில்லை. எதற்கு இயக்குனர் ஆக வேண்டாம் என தடுத்தார் அவர். உண்மையை சொல்ல வேண்டுமென்றால் ஆரம்பத்தில் எனது இன்ஜினியரிங் படிப்பை பாதியிலேயே நிறுத்தி விட்டு, இந்திய சினிமா பயிற்சி பள்ளியில் சேர விரும்பினேன் என்றார்.



விரைவில் ஸ்டாலின் வாழ்க்கையை சினிமாவாக எடுக்க உதயநிதி திட்டமிட்டிருப்பதாக கூறப்படுகிறது. அதற்கான வேலைகள் மிக விரைவில் துவங்கும் என்றும் கூறப்படுகிறது. இந்த படத்தில் சமுத்திரக்கனி நடிக்க உள்ளதாக கூறப்படுகிறது. சமுத்திரக்கனி தற்போது அஜித்தின் ஏகே 61 படத்தில் இணைந்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இதனை சமுத்திரக்கனியும் உறுதி செய்துள்ளார்.

டான், ஏகே 61 என அடுத்தடுத்து பெரிய படங்களில் சமுத்திரக்கனி ஒப்பந்தமாகியிருக்கும் நிலையில் ஸ்டாலின் பயோபிக்கிலும் சமுத்திரக்கனி நடிக்க உள்ளதாக கூறப்படுவது பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது. இதில் யாருடைய கதாபாத்திரத்தில் யார் நடிக்க போகிறார் என்பதை தெரிந்து கொள்ள ரசிகர்களும், திமுக தொண்டர்களும் ஆர்வம் காட்ட துவங்கி விட்டனர். அரசியல் வட்டாரத்திலும் இந்த படத்தின் மீதான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.



# தனது மகன் உதயநிதி ஸ்டாலின் நடிப்பை பார்த்து வியந்த முதல்வர் ஸ்டாலின்

நடிகர் உதயநிதி ஸ்டாலின் நடிப்பில் இயக்குனர் அருண் ராஜா காமராஜ் இயக்கத்தில் உருவாகியுள்ள திரைப்படம் "நெஞ்சுக்கு நீதி". போனிகபூர் தயாரிக்கும் இந்தப் படத்தில் கதாநாயகனாக உதயநிதி ஸ்டாலினும், கதாநாயகியாக தன்யா ரவி சந்திரன் நடித்துள்ளார். இந்த படத்தில் ஆரி, சுரேஷ் சக்ரவர்த்தி, இளவரசன், மயில்சாமி உள்ளிட்ட பலர் முக்கியமான கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இந்த படம் ஆர்டிகிள் 15 எனும் பாலிவுட் படத்தின் தமிழ் ரீமேக். சமூக அக்கறையுடன் உருவாகியுள்ள இந்த படம் வரும் மே 20-ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது.

படத்தை பார்க்க ஒட்டுமொத்த காத்திருக்கும் நிலையில், தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் படத்தை பார்த்துவிட்டு நேரில் படக்குழுவினரை பாராட்டியுள்ளார். அதற்கான புகைப்படங்கள் வைரலாகி வருகிறது. அதற்கு நன்றி தெரிவிக்கும் வகையில் உதயநிதி ஸ்டாலின் "சமூக அக்கறையுடன் உருவாகியுள்ள எங்கள் திரைப்படத்தை நேற்று பார்த்து, படக்குழுவினரை பாராட்டிய மாண்புமிகு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு எங்கள் நன்றி" என பதிவிட்டுள்ளார்.

# பிரபல இசையமைப்பாளர் இமான் மறுமணம் செய்து கொண்டார்



தமிழ் திரைப்பட முன்னணி இசையமைப்பாளர் டி இமான். இவருக்கும் மோனிகா ரிச்சர்ட்ஸ் என்பவருக்கும் கடந்த 2008ம் ஆண்டு திருமணம் நடந்தது. இந்த தம்பதிக்கு இரண்டு புதல்விகள் உள்ளனர். இந்த நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இருவரும் பரஸ்பரம் விவாகரத்து பெற்று பிரிந்து விட்டதாக இமான் அறிவித்தார். இது திரையுலகில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்த நிலையில் நேற்று இமான் மறுமணம் செய்துகொண்டார். பழம்பெரும் திரைப்பட விளம்பர வடிவமைப்பாளர் உபால்டுவின் புதல்வி அமலியை அவர் திருமணம் செய்திருக்கிறார். இந்த திருமண நிகழ்ச்சி சென்னை லயோலா கல்லூரி அருகில் உள்ள தேவாலயம் ஒன்றில் கிறிஸ்தவ முறைப்படி நடந்தது. நெருங்கிய உறவினர்கள், நண்பர்கள் மட்டும் கலந்து கொண்டனர். அமலி ஏற்கெனவே திருமணமாகி விவாகரத்து பெற்றவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# கேன்ஸ் படவிழாவில் வெளியாகும் பா.இரஞ்சித்தின் "வேட்டுவம்"



கோல்டன் ரேஷியோ பிலிம்ஸ், நீலம் ஸ்டுடியோ இணைந்து தயாரிக்கும், பா.இரஞ்சித் எழுதி இயக்கும் வேட்டுவம் படம் மற்றும் இணையத்தொடரின் பதாகை கேன்ஸ் படவிழாவில் வெளியிடப்படுகிறது. "அட்டக்கத்தி" படம் மூலம் தமிழில் அறிமுகமானவர் பா.ரஞ்சித். இந்த படத்தைத் தொடர்ந்து மெட்ராஸ், கபாலி, காலா உள்ளிட்ட படங்களை இயக்கினார். தமிழ் சினிமாவின் முன்னணி இயக்குநராக இருக்கும் பா ரஞ்சித்தின் இயக்கத்தில் கடைசியாக வெளியான படம் "சார்பட்டா பரம்பரை" இந்த படத்தின் வெற்றியைத் தொடர்ந்து, அடுத்ததா "நட்சத்திரம் நகர்கிறது" படத்தை இயக்கி முடித்திருக்கிறார். தொடர்ந்து இந்தியில் பிர்சா முண்டா வாழ்க்கையை மையமாக வைத்து படம் ஒன்றை இயக்குகிறார். படத்தை இயக்குவது மட்டுமல்லாமல், தன்னுடைய "நீலம் புரொடக்ஷன்ஸ்" நிறுவனம் மூலம் படங்களை தயாரித்தும் வருகிறார். அதன்படி, "பரியேறும்பெருமாள்" "இரண்டாம் உலகப்போரின் கடைசிகுண்டு", "ரைட்டர்", "குதிரைவால்", "சேத்துமான்" உள்ளிட்ட படங்களை தயாரித்துள்ளார்.

இதனைத்தொடர்ந்து நீலம் ஸ்டுடியோ தயாரிப்பு நிறுவனத்துடன் கோல்டன் ரேஷியோ பிலிம்ஸ் (Golden Ratio Films) இணைந்து தயாரிக்கும் "வேட்டுவம்" படம் மற்றும் இணையதொடரை இயக்குனர் பா.இரஞ்சித் இயக்குகிறார். இந்த படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் கேன்ஸ் படவிழாவில் வெளியிடப்படுகிறது. இதில் பா.இரஞ்சித் கலந்துகொள்கிறார். படத்தில் பணிபுரியும் நடிகர், நடிகையர் மற்றும் தொழிற்நுட்பக் கலைஞர்கள் குறித்த அறிவிப்பு விரைவில் வெளியாக உள்ளது.

# பார்த்திபனின் "இரவின் நிழல்" படம் ஜீன் 24ல் வெளிவருகிறது

பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் உருவாகி வரும் பார்த்திபனின் இரவின் நிழல் படத்தின் ரிலீஸ் தேதி அறிவிக்கப்பட்டுள்ளது. நடிகரும் இயக்குனருமான பார்த்திபன் நடித்து இயக்கியிருந்த "ஒத்த செருப்பு" திரைப்படம் ரசிகர்களிடம் நல்ல வரவேற்பை பெற்றது. இந்த திரைப்படம் அவருக்கு தேசிய விருதையும் பெற்றுத் தந்தது. இதனை தொடர்ந்து பார்த்திபன், "இரவின் நிழல்" என்ற படத்தை இயக்கி வருகிறார். இப்படத்தில் வரலட்சுமி சரத்குமார், ரோபோ ஷங்கர், சகாய பிரிகிடா ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். இந்த படத்திற்கு ஏ.ஆர். ரஹ்மான் இசையமைத்து "அகிரா புரொடக்ஷன்ஸ்" தயாரித்துள்ளது. சமீபத்தில் இந்த திரைப்படத்தின் முன்னோட்டக் காட்சி வெளியாகி நல்ல வரவேற்பும் பெற்றது. இரவின் நிழல் திரைப்படம் ஒரே ஷாட்டில் எடுக்கப்பட்ட உலகின் முதல் நேர்க்கோட்டில் அமையாத (Non-Linear) கதையம்சம் கொண்ட திரைப்படம் என்ற பெருமையைக் கொண்டுள்ளது. இந்நிலையில் "இரவின் நிழல்" படத்தின் அனைத்து பணிகளும் முடிந்து வெளியீட்டிற்கு தயாராகவுள்ளது.

தற்போது இப்படத்தின் வெளியீடு தேதியை படக்குழு அறிவித்துள்ளது. இப்படம் ஜூன் 24 ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகும் என்று அறிவிப்பு வெளியாகி உள்ளது.




பைரவி நுண்கலைக்கூடமும் ஈழத்தாய் தொலைக்காட்சியும்
இணைந்து நடாத்தும்
இசைச்சாரல்-3
Senior
GREENFLAME ONTARIO ன்
இசைச்சாரல்-3
குரலிசை போட்டி
Bhairavi Music Academy
eet TV
Grand Finale
June 11, 2022 @6:30pm
Thamil Isai Kalaamanram 1120 Tapscott Rd #3, Toronto, ON M1X 1E8



ARABI PRODUCTION
RAGEEF SUBRAMANIAM
416-509-4450


KT Media Solutions
•Stage Program Events
•Commericals
•Live Streaming on Social Media
Brampton & Toronto
416.617.3924
sathiy@yahoo.com
www.kannatech.com


SAI ACCESSORIES
SAI ACCESSORIES
HAND BAGS
WALLETS
SANDALS
BACK PACKS
KIDS HAIR BANDS
BATAS AND MORE


HARAN THANGAVADIVEL
416.880.4829
HOMELIFE
HomeLife/Future Realty Inc.


BRIGHTON
CAR RENTAL
Kingston & Morningside
4600 Kingston Road
Scarborough, ON M1E 2P4
416-284-4600 - 647-852-9110


PRIMERICA
Esha Candappu
Representative
Earn What You're Worth ! Keep your full-time job and start part-time with Primerica. We'll show you how to build you business
For more information, Call
416.502.1600 Business
647.300.9364 Mobile
416.502.8478 Fax
esha.candappu@primerica.com
Primerica
150 Consumers Rd
Ste 506
Toronto On M2J 1P9


CALL MANO SAVE THE TIME AND MONEY
416.843.0646
manogaran85@hotmail.com
www.manohomes.com
FREE LEGAL FEES &
FREE HOME STAGING
Certified Negotiation Expert
Over Decade Of Experience
3rd Top Producer-2020
Super Elite Club Member 2018-2021
Rank # 10
MANOGARAN
SUBRAMANIAM


GME FACILITY
CLEANING SERVICE
GME
Our Service:


24/7 Service Available
GREENFLAME
HEATING
& COOLING
Call us for a
FREE CONSULTATION
416 827 4111


VIBRANT
HOSPITALITY
GROUP


WINSMART
PROFESSIONAL CLEANING COMPANY
Ragu
President
10 Milner Business Court
#300, Scarborough ON
M1B 3C6
416.821.7870
info@winsmart.ca
www.winsmart.ca


RAMANAN
SANTHIRASEGARAMOORTHY, MBA
416.290.6000
www.getnewhomes.com


TAMIL HERITAGE MONTH COUNCIL


SIGARAM
learning
Phone: (416) 577-4233
(647) 774-6972
Email: sigaramlearning@gmail.com
Website: www.sigaramlearning.com


PixelImage


SL
SKY LIMIT
MACHINING INC

உ



கனடா மிஸிஸாகா பிரம்ரன்

# அருள்மிகு கற்பக விநாயகர் தேவஸ்தானம் பிறம்ரன் வருடாந்த கொடியேற்ற-மஹோற்சவப் பெருவிழா விஞ்ஞாபனம்-2022

குலம்தரும் செல்வம் தந்திடும் அடியார் படுதுயர் ஆயின எல்லாம்
நிலதரஞ்செய்யும் நீள் விசும்பருளும் அருளொடு பெரு நிலமளிக்கும்
வலம் தரும் மற்றும் தந்திடும் பெற்றதாயினும் ஆயின செய்யும்
நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்.

சீர்மேவு மதி நதியுமரவும் சிறப்பும் சூழ்ந்த
பார்போற்றும் சிவனுமையின் மைந்தராகி
கார்மேவும் கனடாவின் களிறு நாயகனாகி
நேர்மேவு கற்பகத்து கணபதியே காப்பு.

அருவமும் உருவுமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய்
பிரம்மமாய் நின்றசோதி பிளம்பதோர் மேனியாக
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரெண்டும் கொண்டே
ஒரு திரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகமுய்ய

## ஸ்ரீ கற்பகவிநாயகப் பெருமானின் அடியார்களே!

சகல செல்வங்களும் நிறைந்து விளங்கும் கனடா மிஸிஸாகா பகுதியில் பிரம்ரன் மாநகரில் எழுந்தருளியிருந்து தம்மை பக்தியுடன் வந்து வழிபடும் மெய்யடியார்களின் இன்னல்களைப் போக்கி நல்லருள் பாலித்து ரட்சிப்பவராகிய ஸ்ரீ கற்பகவிநாயகப் பெருமானின் பெருங்கருணையினால் அழகிய திருமணமண்டபம் மணிமண்டபம் கொடிஸ்தம்பத்துடன் கூடிய புதிய திருக்கோவில் நிர்மாணிக்கப்பட்டு மஹா கும்பாபிஷேகம் நிகழ்ந்தேறிய பின்னர் பதினான்காவது முறையாக நிகழும் மங்களகரமான சுபகிருது வருஷம் வைகாசி மாதம் ஏழாம் நாள் (ஆங்கிலம்20-05-2022)வெள்ளிக்கிழமை பகல் 11:30 மணிக்கு கொடியேற்று விழாவுடன் மஹோற்சவம் ஆரம்பமாகி வைகாசி மாதம் 30ம் நாள் (ஆங்கிலம் 12-06-2022)ஞாயிற்றுக்கிழமை வைகாசி விசாகத் தினத்தில் தேர்த்திருவிழாவும் 13-06-2022 திங்கட்கிழமை தீர்த்தோற்சவம் கொடியிறக்கல் திருவிழா வரையில் வழமைபோல இருபத்தைந்து தினங்களுக்கு பகலும் இரவும் கொடிஸ்தம்ப பூஜை மஹோயாக பூஜை ஆகியவற்றுடன் வருடாந்தப் பெருவிழா மிகவும் சிறப்பாக நடைபெற ஸ்ரீ கற்பகவிநாயகர் நல்லருள் பாலித்துள்ளார். விரதகாரர்கள் உபயகாரர்கள் அனைவரும் கீழ்காணும் காலநேர அட்டவணைப்பிரகாரம் நிகழவிருக்கும் திருவிழாக்களை ஆசார நியமங்களுடன் தினமும் வந்து தரிசித்து கண்கண்ட தெய்வமாம் கற்பகவிநாயகரின் அருளால் வேண்டியவரங்களைக் குறையாது பெற்றுச் சகல செல்வயோகமிக்க பெருவாழ்வு வாழும் வண்ணம் அன்புடன் வேண்டுகிறோம். சுபம்

**மஹோற்சவ சிவாச்சாரியார்:**
சிவாகமநிதி, அஹோரசிவம் சாண்டில்ய
சிவஸ்ரீ சோம பிரணவ சிவாச்சாரியர்
London U.K
**ஆலய குருமார்:**
சிவஸ்ரீ சண்முகம் ஜனார்த்தனன் (பாண்டிச்சேரி, இந்தியா)
"சிவாகமரத்தினம்" சிவஸ்ரீ S. மதன் குமார் சிவம்
(தமிழ்நாடு, இந்தியா)

கனடாவாழ் குருமார்கள் அனைவரையும் மஹோற்சவ விழாக்காலங்களில் வருகைதந்து சிறப்பிக்கும் வண்ணம் பணிவன்புடன் அழைக்கிறோம்.
**முக்கிய குறிப்பு:**
தேர்த்திருவிழாவன்று காவடி கற்பூரச்சட்டி, எடுக்க விரும்புவோர் தயவுசெய்து உங்கள் பெயர்களை முன்னரே பதிவு செய்து கொள்ளும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

19-05-2022 வியாழன் மாலை 5மணிக்கு கணபதி ஹோமம் தொடர்ந்து அனுக்ஞை கிராமசாந்தி வாஸ்துசாந்தி மிருத்சங்கிரஹணம் நடைபெறும்.

**கொடியேற்றத் திருவிழா காலை 11:30மணி தேர்த்திருவிழா காலை 11:30மணி தீர்த்தத் திருவிழா காலை 11:30 மணி**

**விழாக் கால நிகழ்வுகளின் நேர கால விபரங்கள்**

| | | | காலை உபயம் | மாலை உபயம் | திருவிழா அலங்காரங்கள் |
|---|---|---|---|---|---|
| 01 | 20-05-2022 | வெள்ளி | கொடியேற்ற விழா<br>திரு. கு.முத்துக்கிருஸ்ணன் குடும்பம் - சுழிபுரம் | திரு. பிரதீபன் சிவராஜா குடும்பம் | ஓங்கார வடிவம் |
| 02 | 21-05-2022 | சனி | திரு. பரஞ்சோதி-ரஜனி குடும்பம் (கனடா) | தம்பிஐயா-மனோன்மணி குடும்பம்<br>சிவனேசன் சுசீலா குடும்பம்<br>சந்திரகுமார் உதயலட்சுமி குடும்பம் | சூரியப்பிரபை |
| 03 | 22-05-2022 | ஞாயிறு | திரு. கனகசபை பாலகாந்தன் குடும்பம் கரவெட்டி | திரு.அருட்பிரகாசம் ரெங்கநாதன் குடும்பம் சுளிபுரம் | சந்திரப்பிரபை |
| 04 | 23-05-2022 | திங்கள் | திரு. தியாகராஜா அன்பழகன் குடும்பம் கிளிநொச்சி | திரு. சிவஞானம், திரு. பரமேஸ்வரன், திரு.பூலோகசிங்கம்<br>திரு. செல்வரத்தினம் குடும்பம் -நயினாதீவு மக்கள் | நட்சத்திர வடிவம் |
| 05 | 24-05-2022 | செவ்வாய் | திரு. மேனுஷன் தவச்செல்வன்<br>திருஞானம் குடும்பம் (புங்குடுதீவு) | திரு. நாதன் குடும்பம்<br>திரு. கதிர்காமநாதன் குடும்பம் - சுழிபுரம் | திருத்தொங்கல் வடிவம் |
| 06 | 25-05-2022 | புதன் | திரு. இராசையா நகுலேஸ்வரி குடும்பம் | திரு. சந்திரமோகன்<br>சுகிர்தா குடும்பம்-துன்னாலை | கப்பல் திருவிழா |
| 07 | 26-05-2022 | வியாழன் | திரு. கருணாகரன் சறோஜினி-கலா குடும்பம்-நல்லூர் | திரு. ஆறுமுகம் ஞானச்சந்திரன் குடும்பம் கொடிகாமம் | சிவலிங்க வழிபாடு |
| 08 | 27-05-2022 | வெள்ளி | திரு. நடராசா பிரதீபன் நிஷா குடும்பம் தச்சன்தோப்பு | திரு. இரத்தினவடிவேல் குடும்பம் சுழிபுரம்- தும்பளை | நாக வாகனம் |
| 09 | 28-05-2022 | சனி | செந்தூரன் லாவன்யா குடும்பம் மட்டக்களப்பு | திரு. ஜெகதேவா குடும்பம் சோமாஸ்கந்தன் கொக்குவில் | மூஷிக வாகனம் |
| 10 | 29-05-2022 | ஞாயிறு | திரு. வாமதேவன் முகுந்தன் கணனி குடும்பம் ஏழாலை | திரு. சந்திரபோஸ் குடும்பம்<br>Plastform Countertops Ltd. | மஞ்சம் |
| 11 | 30-05-2022 | திங்கள் | திரு. சின்னத்தம்பி குடும்பம் கோப்பாய் | திரு. தியாகராஜா குடும்பம் -தாவடி | மயில் வாகனம் |
| 12 | 31-05-2022 | செவ்வாய் | திரு சிவகுரு பத்மநாதன் குடும்பம் நுணாவில், சாவகச்சேரி | ஓர் அன்பர் | கற்பகதரு வடிவம் |
| 13 | 01-06-2022 | புதன் | Steve பாலசிங்கம் குடும்பம், மட்டுவில்<br>ONGO I LOGISTIC | திரு. ஜெய்கீதா குடும்பம் கேரளா-இந்தியா | குதிரை வாகனம் |
| 14 | 02-06-2022 | வியாழன் | ஓர் அன்பர் | திரு பசுபதிப்பிள்ளை குமரசற்குணன் குடும்பம் - குறிகட்டுவான் | மஞ்சள் அலங்காரம் |
| 15 | 03-06-2022 | வெள்ளி | திரு. பொன்னம்பலம் சுகுனேந்திரன் குடும்பம் -புங்குடுதீவு | திரு. நிரஞ்சன் நிரு குடும்பம் பிரம்ரன் | கஜ அலங்காரம் |
| 16 | 04-06-2022 | சனி | திரு. ஸ்ரீதரன் குடும்பம்<br>தவராசா குடும்பம் -கிளிநொச்சி | திரு. இ. வேணுகோபாலன் குடும்பம் புன்னாலைக்கட்டுவன் | கருட வாகனம் |
| 17 | 05-06-2022 | ஞாயிறு | திரு. பிரபாகரன் குமாரசாமி குடும்பம் சங்கரத்தை, வட்டுக்கோட்டை | திரு. ரத்னபாலன் சோபா ராஜ் குடும்பம் -மானிப்பாய் | பக்தி முக்தி பாபநாசம் |
| 18 | 06-06-2022 | திங்கள் | திரு. பொன்னையா கனகலிங்கம் குடும்பம் - அல்வாய் | திரு. ராமு சாந்தரூபன் குடும்பம் உரும்பிராய் | நர்த்தன வடிவம் |
| 19 | 07-06-2022 | செவ்வாய் | ஓர் அன்பர் | திரு. நிரஞ்சன் அருணாசலம் குடும்பம்<br>Top Quality Plastic Ltd. | கைலாச வாகனம் |
| 20 | 08-06-2022 | புதன் | திரு. சிபின் சுந்தர் குடும்பம் கனடா | திரு. யோகி முருகேசு மஞ்சு குடும்பம் அனலைதீவு | காமதேனு வாகனம் |
| 21 | 09-06-2022 | வியாழன் | திரு. கஜதீபன் சுஜா குடும்பம்<br>விமலநாதன் சத்தியவதி குடும்பம் கிளிநொச்சி | திரு. பொன்னம்பலம் சர்வேஸ்வரன் குடும்பம், சுழிபுரம் | மாம்பழத் திருவிழா |
| 22 | 10-06-2022 | வெள்ளி | காரைநகர் மக்கள் - வேட்டைத் திருவிழா | ஓர் அன்பர் | வேட்டைத் திருவிழா |
| 23 | 11-06-2022 | சனி | திரு. சு. கிருஷ்ணபகவான் குடும்பம்-கைதடி | திரு. வரன் நாதன் குடும்பம்<br>VIA REALTY INC | சப்பறத் திருவிழா |
| 24 | 12-06-2022 | ஞாயிறு | தேர்த் திருவிழா DYNEVOR EXPRESS<br>Kumar - Canada | ஓர் அன்பர் | வைகாசி விசாக முருகன் விழா<br>தேரடி உற்சவம் |
| 25 | 13-06-2022 | திங்கள் | தீர்த்தத் திருவிழா -<br>பத்மராஜா சிவசக்தி குடும்பம்-அனலைதீவு | திரு. கிருபானந்தராஜா றமணி குடும்பம் தொல்புரம் | கொடியிறக்கல் விழா<br>சண்டேஸ்வரர் விழா<br>ஆச்சார்ய உற்சவம் |
| 26 | 14-06-2022 | செவ்வாய் | கற்பக விநாயகர் ஆலய அந்தணர்கள் | | காலை: பிராயச்சித்தம் |
| 27 | 17-06-2022 | வெள்ளி | ஸ்ரீநிவாஸ் கிருஷ்ணா கஸ்தூரி குடும்பம் விஜயவாடா, இந்தியா | | மாலை: வைரவர் மடை |
| 28 | 18-06-2022 | சனி | திரு. நடராஜா ஸ்ரீரங்கன் குடும்பம் - (V S N Sons Express Ltd.) | | பூங்காவனம் |


**முக்கிய குறிப்பு: ஆடிவேல் திருவிழா இருபத்தி ஒன்றாவது தடவையாக ஜூலை மாதம் 21, 22, 23ம் திகதிகளில் வெகு சிறப்பாக நடைபெற்று 24ந் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆடிவேல் இசைமாலையும் சிறப்பாக நடைபெறும்**

**திருவிழாக்கால நிகழ்ச்சிகள் நேரகால அட்டவணை**

**காலை திருவிழா**
6:30 மணி காலை பூஜை
7:30 மணி காலை சாந்தி பூஜை
09:00 மணி ஸ்நபனகும்ப அபிஷேகம்
10:30 மணி உச்சிகால பூஜை- யாகபூஜை கொடிஸ்தம்ப பூஜை
11:30 மணி வசந்தமண்டப பூஜை சுவாமி வீதியுலா மஹாயாக தரிசனம்
01:00 விபூதி, பிரசாதம் வழங்கப்படும்

**மாலை திருவிழா**
05:00 மணி ஸ்நபன கும்ப அபிஷேகம்
06:30 மணி மூலஸ்தான பூஜை பஞ்சமுகார்சனை யாக பூஜை கொடிஸ்தம்ப பூஜை
07:30 சமய கலை நிகழ்ச்சிகள்
07:45 மணி வசந்தமண்டப பூஜை சுவாமி வீதியுலா மஹாயாக தரிசனம் பிரசாதம் வழங்கல்.
10:00 மணி அர்த்தஜாமப் பூஜை

**தேவஸ்தான மங்கள இசை: கற்பக விநாயகர் தேவஸ்தான இசைக் கலைஞர்கள்**
சிவப்பிரகாசம் வாஞ்சிநாதன் - செல்லத்துரை வீரமணி
சக்திவேல் கார்த்திகேயன் - வெங்கடேசன் மதன்ரஜ்
அபிராமசுந்தரம் ராஜேஷ் - முனிரத்தினம் முனிராஜ்
**விசேடமங்கள இசை: கனடா, இலங்கை, இந்தியா கலைஞர்கள்**
புஷ்பமாலைகள், புஷ்ப அலங்காரங்கள்: M, குமார் Mark Florist
(விசேஷ திருவிழாத் தினங்களில் நிகழ்ச்சிகளின் காலநேர மாற்றம் அறிவிக்கப்படும்.)




**ARULMIGU KATPAGAVINAYAGAR HINDU TEMPLE BRAMPTON**
200 Advance Blvd, Unit 1, Brampton, (Dixie & Advance Blvd) L6T 4V4
Tel: 905-458-9701 / 905-458-0623 / 416-471-0255 Fax: 905-458-0326
www.srikatpagavinayagar.ca

இங்ஙனம்
என்றும் இறைபணியில் நிற்கும்
கணுக சிவத்தொண்டர்,
திரு. இரா. விஜயநாதன்
(தேவஸ்தான தர்மகர்த்தா)

இந்தியா செய்திகள்
India News

# சாலையில் எச்சில் துப்பிய பேருந்து ஓட்டுநரை சரமாரியாக தாக்கிய காவலர்



பழச்சாறு கடையில் பழரசம் குடித்துக்கொண்டிருந்த நபர் ஒருவர் சாலையில் எச்சில் துப்பிய போது அந்த வழியாக இருசக்கர வாகனத்தில் வந்த காவலர் மீது எச்சில் பட்டுவிட்டதாக கூறி அந்த நபரை காவலர் சரமாரியாக அடித்த காணொளி சமூக வலைத்தளத்தில் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. சென்னை சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகேயுள்ள பழச்சாறு கடையில் இன்று காலை ஒரு நபர் பழச்சாறு குடித்துக்கொண்டிருக்கும் போது கீழே எச்சில் துப்பியுள்ளார்.

அப்போது அந்த வழியாக இருசக்கர வாகனத்தில் வந்த காவலர் மீது எச்சில் பட்டுவிட்டதாகக் கூறப்படுகிறது. இதனால் ஆத்திரமடைந்த காவலர் அந்த நபரை கடுமையாக தாக்கியுள்ளார். இதில் அந்த நபரின் முகம் கிழிந்து ரத்தம் வழிந்துள்ளது. இதனைபார்த்த பொதுமக்கள் காவலரை பிடித்து சைதாபேட்டை காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர். மேலும், பொதுமக்கள் காயம் பட்ட நபரை மீட்டு சைதாப்பேட்டை மருத்துவமனையில் அனுமதித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பாக தாக்குதலுக்குள்ளான நபர் சைதாப்பேட்டை காவல் நிலையத்தில் புகார் அளித்தார். சைதாப்பேட்டை போலீசாரின் விசாரணையில் தாக்குதலுக்குள்ளான நபர் பாலச்சந்திரன் என்பதும் இவர் அயனாவரம் பேருந்து பணிமனையில் நடத்துநராக பணியாற்றி வருகிறார் என்பதும் தெரிய வந்தது. மேலும் பாலச்சந்திரனை கடுமையாக தாக்கிய காவலர் லூயிஸ் என்பதும் இவர் சைதாபேட்டை காவல் நிலையத்தில் பணிபுரிந்து வருவதும் தெரியவந்தது.

இந்த சம்பவம் குறித்து சைதாப்பேட்டை போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இதனிடையே, பேருந்து ஓட்டுநரை தாக்கிய சைதாப்பேட்டை காவலர் லூயிஸ் காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றப்பட்டுள்ளார். தொடர்ந்து, இந்த விவகாரம் தொடர்பாக உதவி ஆணையர் விசாரணை மேற்கொண்டு வருகிறார். காவலர் லூயிஸ் தவறு செய்தது உறுதியானால், பணியிடை நீக்கம் செய்யப்படுவார் என சென்னை காவல் துறை உயர் அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர்.



# "அதிமுக கட்சியை மீட்கும் வரை ஓயமாட்டேன்" — குரங்கு கதை சொன்ன சசிகலா

தஞ்சாவூர், ஓரத்தநாட்டில் நடைபெற்ற திருமண நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்ட சசிகலா, "எதிர்க்கட்சியினர் எத்தனை கணக்குகள் போட்டாலும், நான் இருக்கும் வரை இந்த இயக்கத்தை யாராலும் அழித்து விடமுடியாது. எம்.ஜி.ஆர்., மறைவுக்குப் பிறகு ஏற்பட்ட அதே சோதனையான காலம்தான் ஜெயலிலதா மறைவுக்குப் பிறகும் ஏற்பட்டுள்ளது. அப்போது எப்படி கழகம் மீண்டதோ அதே போல் தற்போதும் மீண்டு எழும்... அதற்கு நானே காரணமாவேன், கட்சியை மீட்கும் வரை நான் ஓயாமட்டேன்" எனப் பேசினார்.

சசிகலா நிகழ்ச்சிகளை தகவல் தொழில் நுட்ப பிரிவின் கீழ் வெளிக்கொண்டு வரும் அவருடைய ஆதரவாளரான ஆதவன் என்பவரின் திருமணம் தஞ்சாவூர் ஓரத்தநாட்டில் சசிகலா தலைமையில் நடைபெற்றது. இதற்காக மணமகன் ஆதவன் குடும்பத்தினர் விமர்சையான ஏற்பாடுகளை செய்திருந்தனர். பத்து கிலோ மீட்டர் தூரம் வரை சாலையின் இருபுறமும் அ.தி.மு.க கொடியை பறக்க விட்டிருந்தனர். "பொன்மனச் செம்மலின் வாரிசே", "தாயின் தாயே", "வேலு நாச்சியாரே..." என சசிகலாவை வரவேற்று பிளக்ஸ் வைத்திருந்தனர். மண்டபத்தின் நுழைவாயிலில் முன் பகுதியில் துளசி, தாமரை மலர்களை கொண்டு அலங்கார பந்தல் அமைத்திருந்தனர். சரியாக 11.40 மணிக்கு இதில் கலந்து கொண்டார் சசிகலா. சிறுவன் ஒருவன் வரவேற்புரை நிகழ்த்தினான். அப்போது நடராசன் குறித்து அவன் பேசியபோதும், புரட்சித் தலைவிக்கு தாயாக இருந்தவர் எனக் குறிப்பிடும்போதும் சசிகலாவின் கண்கள் கலங்கின. பின்னர் தாலி எடுத்து கொடுத்து திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார் சசிகலா. மணமக்களையும், அவர்களது குடும்பத்தையும் வாழ்த்திய பின்னர் பேசிய சசிகலா, "கழகம் ஒன்றுபட வேண்டும், வென்று காட்ட வேண்டும். அ.தி.மு.க., உண்மையான தொண்டர்களின் தியாகத்தால் உருவானது. எதிர்க்கட்சியினர் எத்தனை கணக்குகள் போட்டாலும், நான் இருக்கும் வரை இந்த இயக்கத்தை யாராலும் அழித்து விடமுடியாது. இந்த இயக்கம் எத்தனையோ சோதனையான காலகட்டங்களை எல்லாம் கடந்து வந்துள்ளது. எம்.ஜி.ஆர்., மறைவுக்குப் பிறகு ஏற்பட்ட அதே சோதனையான காலம்தான், ஜெயலிலதா மறைவுக்குப் பிறகும் தற்போது மீண்டும் ஏற்பட்டுள்ளது. அன்றைக்கு எப்படி கழகம் மீண்டெழுந்தோ, அதே போல் தற்போதும் புதுப்பொலிவு பெறும். இதற்கு நானே காரணமாவேன். கட்சியை மீட்கும் வரை நான் ஓயாமட்டேன். தமிழக மக்கள் நம் புரட்சித் தலைவர் மற்றும் புரட்சித் தலைவி ஆகியோரின் பொற்கால ஆட்சி மீண்டும் வராதா? என எதிர்பார்க்கும் சூழலில், விரைவில் அதை நிறைவேற்றி காட்டுவேன். நம் கழகத்தை காப்பாற்றிடவும், மீண்டும் வலிமை கொண்ட இயக்கமாக உருவாக்கிடவும் தகுந்த நேரம் வந்துவிட்டது. அனைவரையும் ஒருங்கிணைத்து, ஒரே இயக்கமாக உருவாக்க பயணித்து வரும் சூழலில், தொண்டர்கள் அனைவரும் பொறுமை காக்க வேண்டும். பிரச்னைகளை தீர்க்க பொறுமையோடு எதிர்கொண்டால் வெற்றியை காணமுடியும்" என்றவர் குட்டி கதை ஒன்று கூறுகிறேன் எனத் தொடர்ந்தார்.

""குரங்கு ஒன்று மாம்பழம் ஒன்றை சாப்பிட்ட பிறகு அதன் கொட்டையை ஊன்றி மரமாக வளர செய்தால் நமக்கு நிறைய பழங்கள் கிடைக்கும் நம் இஷ்டத்துக்கு மாம்பழங்களை சாப்பிடலாம் என, மாங்கொட்டையை மண்ணுக்குள் புதைத்து நீர் ஊற்றியது. சிறிது காலம் ஆகியும் அந்த இடத்தில் செடி வளரவில்லை. குரங்கிற்கோ அவரசம், அந்த அவசர புத்திக்கொண்ட குரங்கு ம்ண்ணில் புதைத்து வைத்திருந்த மாங்கொட்யை எடுத்து பார்ப்பதும், மீண்டும் மண்ணில் புதைப்பதுமாக இருந்தது. மாங்கொட்டை பத்திரமாக இருப்பதை பார்த்து நிம்மதி பெருமூச்சும் விட்டது. ஆனால் மாங்கொட்டை செடியாக முளைக்கவில்லை. இதனால் ஆத்திரமடைந்த குரங்கு மாங்கொட்டையை எடுத்து தூர எரிந்து விட்டு வருத்தப்பட்டது. அந்த குரங்கின் ஆசை நியாயமானது என்றாலும், அதன் அவசரபுத்தி நியாயமானதல்ல. காலம் என்ற நியதி இல்லாமல், எந்தச் செயலும் நிறைவேறுவதில்லை. எதிர்பார்த்த விளைச்சல் கிடைக்க வேண்டும் என்றால், விதையை விதைத்து நீருற்றி சில காலம் பொறுமை காக்க வேண்டும். அதுபோல நம் செயல்கள் இருக்க வேண்டும். சோதனைகளில் நமக்கு கிடைத்த அனுபவத்தை நாம் நிச்சயம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். அதே நேரத்தில் சில விஷயங்களை நாம் மறந்து விட வேண்டும். அப்படி செயல்பட்டால் நம் இயக்கம் வலிமை பெறும்" என்றார்.

## 30 ஆண்டுகளில் பாதிக்கப்பட்ட 60 மாணவிகள்

# பணி ஓய்வு பெற்ற பள்ளி ஆசிரியர் கைது



கேரள மாநிலம் மலப்புரம் நகராட்சியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியில் சசிகுமார் கவுன்சிலராக இருந்தார். அதன் பிறகு அவர் அங்குள்ள பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து சமீபத்தில் பணி ஓய்வு பெற்றார். இதனை சமூக வலைத்தளத்தில் அவர் பதிவிட்டுள்ளார். இதற்கு அவருடைய நண்பர்கள் மற்றும் பல கட்சியினர் வாழ்த்துக்களை தெரிவித்தனர். இந்நிலையில் அவரிடம் பயின்ற மாணவர் ஒருவர் சசிகுமார் ஆசிரியராக பணியாற்றியபோது பல மாணவியரை பாலியல் பலாத்காரம் செய்துள்ளார் என்று சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

இந்தப்பதிவு சோஷியல் மீடியாவில் காட்டுத்தீ போல் பரவியது. இதுகுறித்து விசாரணை நடத்த வேண்டும் என்று மாநில கல்வி துறை அமைச்சர் சிவன் குட்டி உத்தரவிட்டார். அந்த விசாரணையில் சசிகுமார் ஆசிரியராக பணிபுரிந்த 30 ஆண்டு காலத்தில் 60க்கும் மேற்பட்ட மாணவிகளை பலாத்காரம் செய்துள்ளார் என்று தகவல்கள் தெரிய வந்துள்ளது. இதனையடுத்து மலப்புரம் போலீசார் சசிகுமார் மீது வழக்கு பதிவு செய்து கைது செய்தனர். தற்போது பாதிக்கப்பட்ட மாணவிகள் புகார் அளிக்கத் தொடங்கியுள்ளனர்.

மேலும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து சசிகுமார் இடைநீக்கம் செய்யப்படுவதாக கட்சி நிர்வாகம் அறிவித்துள்ளது.



# காமராஜர் பிறந்த நாளில் கல்லூரி மாணவிகளுக்கு ரூ.1000 வழங்கும் திட்டம் தொடக்கம்

காமராஜர் பிறந்தநாளான ஜூலை 15 முதல் கல்லூரி மாணவிகளுக்கான ரூ.1,000 வழங்கும் திட்டம் அமலுக்கு வரும் என உயர் கல்வித்துறை தகவல் தெரிவித்துள்ளது. உதவிதொகை பெறும் மாணவிகள் அரசுப்பள்ளியில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை படித்திருக்க வேண்டியது கட்டாயம் எனவும் உயர் கல்வித்துறை தெரிவித்துள்ளது. கடந்த மார்ச் மாதம் சட்டசபையில் பட்ஜெட் தாக்கல் செய்த நிதியமைச்சர் பிடிஆர் பழனிவேல் தியாகராஜன், பல முக்கிய திட்டங்கள் குறித்த அறிவிப்புகளை வெளியிட்டார். அப்போது அவர் பெண் கல்வியை உறுதி செய்யும் விதமாக முக்கிய அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார். அதாவது அரசுப் பள்ளிகளில் படித்த மாணவிகள் உயர் கல்வியில் இடைநிற்றலைத் தடுக்கும் வகையில் மாதம் 1000 ரூபாய் அளிக்கப்படும் என அறிவித்தார். தமிழ்நாட்டில் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவிகளின் உயர்கல்விச் சேர்க்கை மிகக் குறைவாக இருப்பதைக் கருத்தில் கொண்டு மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர் கல்வி உறுதித் திட்டம் என மாற்றியமைக்கப்படுகிறது.

இதன் மூலம், அரசுப் பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை பயின்று மேற்படிப்பில் சேரும் அனைத்து மாணவிகளுக்கும் பட்டப்படிப்பு / பட்டயப்படிப்பு, தொழிற்படிப்பு ஆகியவற்றில் இடைநிற்றல் இன்றி முடிக்கும் வரை, மாதம் 1,000 ரூபாய் அவர்கள் வங்கிக் கணக்கிற்கு நேரடியாகச் செலுத்தப்படும் என அறிவிக்கப்பட்டு உள்ளது. இந்த திட்டம் வரும் கல்வி ஆண்டு முதல் அமலுக்கு வர உள்ளது. மாணவிகள் ஏற்கனவே பிற கல்வி உதவித்தொகை பெற்று வந்தாலும், இத்திட்டத்தில் கூடுதலாக உதவி பெறலாம் என குறிப்பிடப்பட்டு உள்ளது. இதற்கான மாணவியர் பட்டியல் சேகரிப்பு பணிகள் தொடங்கி உள்ளன. அனைத்து அரசு, அரசு உதவி மற்றும் சுயநிதி கல்லூரிகளில் படிக்கும் மாணவியரில், அரசு பள்ளிகளில் 6ம் வகுப்பு முதல் பிளஸ் 2 வரை படித்தோரின் விபரங்களை அனுப்புமாறு, இன்ஜினியரிங், பாலிடெக்னிக் மற்றும் கலை, அறிவியல் கல்லூரிகளுக்கு, உயர்கல்வித் துறை சுற்றறிக்கை அனுப்பியுள்ளது.

மேலும் புதிய கல்வியாண்டில் கல்லூரிகள் திறந்ததும், உதவித் தொகை வழங்கும் பணி தொடங்க உள்ளதாக, அதிகாரிகள் தெரிவித்தனர். இதனிடைய காமராஜர் பிறந்தநாளான ஜூலை 15 முதல் கல்லூரி மாணவிகளுக்கான ரூ.1,000 வழங்கும் திட்டம் அமலுக்கு வரும் என உயர் கல்வித்துறை தகவல் தெரிவித்துள்ளது. உதவிதொகை பெறும் மாணவிகள் அரசுப்பள்ளியில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை படித்திருக்க வேண்டியது கட்டாயம் எனவும் மாதம் ரூ.1,000 வழங்கும் திட்டம் மூலம் 3 லட்சம் மாணவிகள் பயனடைவர் எனவும் உயர் கல்வித்துறை தெரிவித்துள்ளது.


Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற
கனகாம்பிகை
தங்கநகை அடகுமாடம்
KANAGAAMBIKAI
PAWN BROKERS
25
வருடங்கள்
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
கனகாம்பிகை
பவுண் வங்கி
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...
2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2
416 269 7198

# மகாஜனா தந்த மயிலங்கூடல் நடராஜன் மறைந்தார்

- குரு அரவிந்தன்



பிள்ளையினார் நடராஜன் அவர்களின் மறைவு தமிழ் இலக்கிய உலகிற்குப் பேரிழப்பாகும். 1939 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 14 ஆம் திகதி பிறந்த இவர், 2022 மே மாதம் 12 ஆம் திகதி எம்மைவிட்டுப் பிரிந்தார். இவர் யாழ்ப்பாணத்தில் கீரிமலைக்கு அருகே உள்ள மயிலங்கூடல் என்ற இடத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் பிள்ளையினார் தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனாவார். திருமணமானபின் நாயன்மார்காட்டில் வசித்து வந்தார். ஆரம்ப கல்வியை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் பெற்றார். மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவனாகவும், அதன்பின் விஞ்ஞான ஆசிரியராகப் பணிபுரிந்தாலும், இவர் எல்லோராலும் அறியப்பட்ட சிறந்த இலக்கிய ஆளுமை கொண்டவராக இருந்தார். காங்கேசன் என்ற புனைப் பெயரில் பல ஆக்கங்களை வெளியிட்டிருக்கின்றார். நான் தமிழ் மன்றச் செயலாளராக இருந்த போது மகாஜனன் இதழின் தொகுப்பாசிரியராக இவர் இருந்தார். கல்லூரியில் சின்னப்பா இல்லத்தின் பொறுப்பாசிரியராகவும் கடமையாற்றினார். அதன்பின் யாழ். இந்துக் கல்லூரிக்கு மாற்றலாகிச் சென்றிருந்தார்.

இலக்கியத் தொடர்பு காரணமாக இவர் நன்கு அறிமுகமானவராக இருந்தார். "ஈழத்தமிழர்" என்ற தலைப்பில் நூல் ஒன்றை 2012 ஆம் ஆண்டு யூன் மாதம் மைலங்கூடல் பி. நடராஜன் என்ற பெயரில் இவர் வெளியிட்ட போது எனக்கும் அழைப்பிதழ் அனுப்பி இருந்தார். இந்த நூலுக்காகப் பழைய ஆவணங்கள் எல்லாவற்றையும் ஆராய்ந்து மிகவும் பெறுமதி மிக்க நூலாக உருவாக்கி இருந்தார். யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் சிவலிங்கராஜா இந்த நூலை வெளியிட்டு வைத்தார். அடுத்த தலைமுறையினருக்கான பல அரிய விடயங்கள் இந்த நூலில் அடங்கி இருக்கின்றன. பரணி பதிப்பகம் இந்த நூலைப் பதிப்பித்திருந்தது. பல்லாயிரம் மைல்கள் கடந்து போகமுடியாவிட்டாலும் வாழ்த்துச் செய்தி அனுப்பி இருந்தேன்.

அதன் பின் மகாஜனக் கல்லூரி பழைய மாணவர்களின் சிறுவர் கவிதைகள் அடங்கிய "குழந்தைக் கவிதைகள்" என்ற கவிதைத் தொகுப்பு ஒன்றையும் மகாஜனக் கல்லூரியின் சார்பில் தொகுத்து வெளியிட்டிருந்தார். அப்பொழுதும் என்னோடு தொடர்பு கொண்டு எனது சிறுவர் கவிதைகளைக் கேட்டு வாங்கி, அந்த நூலில் தொகுத்துப் பிரசுரித்திருந்தார். எனது 4 பாடல்களை அத்தொகுப்பில் இடம்பெறச் செய்தார். இவர் சிறுவர் பாடல்கள் அடங்கிய தனது இரண்டு நூல்களையும் வெளியிட்டிருக்கின்றார். பாவலர் துரையப்பாபிள்ளையின் சிந்தனைச் சோலையை மீள்பதிவு செய்தது மட்டுமல்ல, "பாவலர் துரையப்பாபிள்ளை நூற்றாண்டு மலர்" சிறப்பாக வெளிவருவதற்கும் இவர் முக்கிய காரணமாக இருந்து செயற்பட்டார்.

சமீபத்தில் திருமதி கோகிலா மகேந்திரனைப் பற்றிக் கனடா உதயன் வெள்ளிவிழா மலரில் எழுதிய கட்டுரையில் இவரது இலக்கிய ஆளுமை பற்றியும் குறிப்பிட்டிருந்தேன். மகாஜனக்கல்லூரி முன்னாள் அதிபர் பொ. கனகசபாபதி அவர்கள் குறிப்பிட்ட "மகாஜனாவின் நவரத்தினங்களில்" இவரும் ஒருவராக மகாஜனாவின் நூற்றாண்டு மலரில் இடம் பெற்றிருந்தார். மகாஜனாவின் இலக்கிய ஆளுமை கொண்ட அந்த ஒன்பது பேரில் இவரும் ஒருவராக இடம் பெற்றிருக்கும் பதாதையைக் கல்லூரியிலும் காட்சிப்படுத்தி இருந்தார்கள். அதில் எனது படமும் இடம் பெற்றிருந்தது எனக்குப் பெருமையாக இருந்தது.

யாழ்ப்பாணம் வரும்போது, மகாஜனக்கல்லூரி உயர்வகுப்பு மாணவர்களுக்கு "சிறுகதை நாவல் பற்றி பயிற்சிப்பட்டறை" ஒன்றை எடுக்க வேண்டும் என்று அவர் என்னிடம் ஆர்வத்தோடு கேட்டிருந்தார். 2019 ஆண்டு நிறுவுனர் பேருரை ஆற்ற அங்கு சென்ற போது அதற்கான ஏற்பாடுகளைக் கல்லூரி அதிபர் திரு. மணிசேகரன் அவர்கள் செய்திருந்தாலும், பயிற்சிப் பட்டறையை நடத்த எனக்கு நேரம் கிடைக்கவில்லை, மாணவர்கள் மத்தியில் உரையாற்ற மட்டுமே முடிந்தது. கல்லூரி மாணவர்களை இலக்கியம் சார்ந்த முயற்சிகளில் ஈடுபாடு கொள்ள வைப்பதில் ஆசிரியர் நடராஜன் பல வழிகளிலும் முன்னின்று செயற்பட்டார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அவருடைய குடும்பத்தினருடன் சேர்ந்து, மகாஜகக்கல்லூரி கனடா பழைய மாணவர்கள் சார்பாகவும், கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் சார்பாகவும் வேண்டிப் பிரார்த்திக்கின்றேன். ஓம் சாந்தி!

குரு அரவிந்தன்,
தலைவர், கனடா தமிழ் எழுத்தாளர் இணையம்.




09

## தாக்குதல் – 2

1998 சித்திரை 18
Forest Manor Public School

அன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு தொடங்கி பகல் 12 மணிக்கு வழமை போல் தமிழ் வகுப்பு முடிந்தது. அதன்பின் மகன் கீர்த்தனனுடன் பஸ் தரிப்பிடத்தில் பேருந்துக்காகக் காத்து நின்றோம்.

நெஞ்சில் லேசாக வலி தொடங்கியது. அப்போது கையில் தொலை பேசியும் இல்லை. திரும்ப பாடசாலைக்கு போக வேண்டும் என்றால் சற்று ஏற்றமான வீதியின் ஊடாக நடக்க வேண்டும். அதுவும் இந்த நிலையில் சரியல்ல என்று நினைக்கவும் பேருந்து வந்து நிற்கவும் சரியாக இருந்தது. அதனால் பேருந்துக்குள் ஏறுவதே சரியென்று ஏறினோம்.

நெஞ்சுவலி குறைவதும் கூடுவதுமாக இருந்தது. அது அஞ்சையனா வலிதான் (Angina Pain) என்பதில் சந்தேகமில்லை. கூடிக் குறைந்தமையால் வீட்டுக்கு போய் விடலாம் என்று மனம் சொல்கிறது. வலி மிகக் கடுமையாக ஒருமுறை வந்து போகிறது. உடல் கொஞ்சம் வேர்க்கிறது. மூச்சு விடச் சிரமமாக இருக்கிறது. அருகில் இருந்த மகன் கீர்த்தனன் 'அப்பா என்ன செய்கிறது' என்று கேட்கிறான். கஷ்டமாக இருக்கிறது. ஆழமாக மூச்சை உள்ளிழுத்து கொஞ்ச நேரம் வைத்து விட்டு விடுகிறேன்.

கூடியும் குறைந்தும் வந்து கொண்டிருக்கும் இந்த நெஞ்சு வலிக்கு தாக்குப் பிடித்து வீட்டுக்கு போய்ச் சேர்ந்து விடலாம் என்றும் அதன் பின்னர் வீட்டில் உள்ளவர்களையும் கூட்டிக் கொண்டு மருத்துவ நிலையத்துக்கு போய்க் காட்டி விடலாம் என்றும் மனம் சொல்லிக் கொண்டிருக்கிறது.

என் இதயமே நீ அடிக்கடி உன் வலியை வெளிப்படுத்தி எச்சரித்துக் கொண்டிருந்தாய். ஆனால் புத்தி வேறு விதமாகவே சிந்தித்து அதை உதாசீனப்படுத்திக் கொண்டு இருக்கிறது. பேருந்து பாதிவழிக்கும் மேல் வந்து விட்டது. 'இனி என்ன கிட்டத்தானே போய் விடலாம்' என்றே புத்தி மீண்டும் சொல்லுகிறது.

அடுத்தடுத்து நெஞ்சுவலி வந்தபோது அதனை பஸ் சாரதிக்கு சொல்லியிருந்தால் அவர் பஸ்சை நிறுத்தி உடனும் அம்புலன்சை அழைத்திருந்திருப்பார். ஆனால் என் புத்தி அப்படிச் செய்யவில்லை. அதைச் செய்யாமல் மாறாக ஏதும் நடந்தாலும் ஒரு குறிப்பை எழுதி வைப்போம் என்று கையிலிருந்த கொப்பியில் அவசரமாய் அப்போது மனதில் தோன்றியதை எழுதவைத்தது. என்ன மடத்தனம்?



மீண்டும் வலி கூடுகிறது. இப்போது என் புத்தி விழித்துக் கொள்ளுகிறது. வீட்டுக்கு போகாமல் நேரே எற்றோபிக்கோக் (Etobicoke General Hospital) பொது மருத்துவ மனையில் மகனையும் கூட்டிக் கொண்டு இறங்கி நேரே அவசர சிகிச்சைப் பிரிவுக்கு (Emergency) சென்று நடந்ததைச் சொல்லுகிறேன்.

உடனேயே உள்ளே எடுத்து அவசர அவசரமாக ஈ சீ ஜீ (ECG) இரத்தப் பரிசோதனை (Blood Work) என்று பரிசோதனைகளை செய்து முடிக்கிறார்கள். மகன் கீர்த்தனன் பயந்து கொண்டு நிற்கிறான். வீட்டுக்கு அறிவித்தல் போகிறது. கொஞ்ச நேரத்தில் குடும்பமாக வந்துவிட்டார்கள். மருத்துவர்கள் எனக்கு மீண்டும் ஒரு மாரடைப்பு வந்திருக்கிறதாகவும் அது சிறிய அளவில் இருக்கலாம் என்றும் சொன்னார்கள். Coronary Care Unit பிரிவிலேயே ஒரு கிழமை என்னை வைத்திருந்தார்கள்.

இந்த நாட்களில் என் உறவினர்கள் பலரும் வந்து பார்த்துப் போனார்கள். துணைவியாரின் கலக்கமும் மகள் கீதத்தின் கலக்கமும் பெரிதாக இருந்தது.




படியேறுதல், வேலை செய்தல் போன்ற நிலைகளில் விட்டு விட்டு வரும் நெஞ்சுவலி (Stable Angina Pectories) என்று அழைக்கப்படுகிறது.

ஆனால் பேருந்தில் இருக்கையில் ஓய்வாக நான் பயணம் செய்த போதும் மாறாமல் தொடர்ந்து எனக்கு வந்த நெஞ்சுவலி (Unstable Angina Pectpories) மிகவும் ஆபத்தானது என்ற அறிவோ அது Myocardial Infarction என்ற மாரடைப்பைக் கொண்டு வரும் என்ற அறிவோ அதுவே சில வேளை இயல்பற்ற இதயத் துடிப்பை (Abnormal Heart Rhythm) உண்டாக்கலாம் அல்லது இதயத்தை முற்று முழுதாகச் செயலிழக்கவும் (Cardiac Arrest) செய்யலாம் என்ற அறிவோ எனக்கு கொஞ்சமும் இருக்கவில்லை.




அனைத்துக்கும் மேலாக சொல்லுக் கேளாத புத்தியை - இதயம் பல முறை எச்சரித்தும் - உதாசீனப்படுத்திய புத்தியையே நோக வேண்டும். அதிகப் படித்த மேதாவிகளுக்கும் கொஞ்சமும் படிக்காத சாதாரணருக்கும் கூட இந்தச் 'சொல்லுக் கேளாப் புத்தி' இருக்கிறது. நான் மட்டும் விதி விலக்கல்ல. என்ன செய்ய...?

.................... ஏதும் நடந்தாலும் ஒரு குறிப்பை எழுதி வைப்போம்
என்று கையிலிருந்த கொப்பியில் அவசரமாய்
அப்போது மனதில் தோன்றியதை எழுத வைத்தது ............



# முள்ளி வாய்க்கால் நினைவுநாளும் ராஜீவ் காந்தி கொலையின் பன்னாட்டுச் சதியும்!



நக்கீரன்

**கோ**லாலம்பூர், மே 17:

தமிழீழத்தின் 4-ஆவது கட்டப் போர் முடிவுக்கு வந்த நாள் மே 17 இலட்சக் கணக்கான ஈழத் தமிழ் மக்கள், உலக போர் நடைமுறைக்கு மாறாக இரசாயன குண்டுகளுக்கும் கொத்து கொண்டுகளுக்கும் ஆளாகி தம் இன்னுயிரை இழந்த ஈழப் போர், முள்ளி வாய்க்காலில் நிலைகுத்திய நாள், 2009-ஆம் ஆண்டு இதே நாள்!

உலக நாடுகளும் உலக அரசியலும் இன்னும் கண் திறந்து பார்க்காத இந்த இனப் படுகொலைக்கு கணக்கு தீர்க்கும் காலம் எப்போது என்று தெரி-யாமல், காலம் கரைகிறது.

இந்தியா, பாகிஸ்தான், சீனா ஆகிய நாடுகள் எதிரி நாடுகளாக இருந்தாலும் தமிழரை அழிப்பதில் ஒருமுகப்பட்டு இலங்கைக்கு உதவி-ன் ரஷ்யா, கியூபா, இரான் உள்ளிட்ட வளைகுடா நாடுகளும் இலங்கை பக்கம் அணிவகுத்தன. இதைவிட, சோ-னியா காந்தி, ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி இவர்களின் அரசியல் ஆலோச-கர் கேரளத்து நாராயணன் ஆகியோரெல்லாம் இன்ப வெள்ளத்தில் திளைத்த நாள் இன்று.



இவற்றுக்கெல்லாம் பதில் தெரிய வேண்டிய வரலாற்றுத் திருப்புமுனையும் இராஜீவ் காந்தி கொலையில் தொடர்புடைய பன்னாட்டு சதியும் எதிர்காலத்தில் உலக அம்பலத்தில் அரங்கேறியேத் தீரும் ஒரு நாளில்..

இராஜீவ் காந்தி படுகொலைக்குப் பின்னர்தான், விடுதலைப் புலிகளின் நிலை இறுகியது என்று, இன்றளவும் சொல்லப்படுகிறது.

1991 மே 21-இல் நடைபெற்ற அந்தச் சம்பவத்தில் படம்பிடிக்கச் சென்ற பாப்பா சுந்தரம் என்பவரின் புகைப்படக் கருவிக்கு மின்கலம் வாங்கிக் கொடுத்தார் என்ற சில்லறைக் காரணத்திற்காக பேறறிவாளன் 30 ஆண்டுகளுக்கும் மேலாக சிறைவாசம் அனுபவிக்கிரார். இப்பொழுது பரோல் விடுமுறையில் தாய் அர்ப்புதம் அம்மாளின் அரவணைப்பில் இருக்கிறார் அந்த சர்க்கரை நோயாளி!

பேறறிவாளனிடம் வாக்குமூலத்தை பதிவு செய்த அதிகாரி, கள்ளத்தன-மாகவும் திட்டமிட்டும் அதை மாற்றிப் பதிவுசெய்து, வேண்டுமென்றே அவரை சிறையில் தள்ளி, பேறறிவாளனின் இளமை வாழ்வை கொள்ளை அடித்த கொடுமை நடந்துள்ளது.

ராஜிவ் காந்தியைக் கொலை செய்ய பயன்படுத்தப்பட்ட இடைவார் வெடி-குண்டில் 2மி.மீ. விட்டம் கொண்ட 2,000 Steel ரவைகள் பயன்படுத்தப்-பட்டன. அந்த வெடிகுண்டை இடுப்பில் அணிந்தபடி ராஜீவ் காந்திக்கு மாலையிடச் சென்றப் பெண் தாணு, ஒரு தமிழீழப் பெண்.

பல்லாயிரக் கணக்கில் பொதுமக்களும் அரசியல் கட்சியினரும் திரளும் அந்தத் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் மாலையிட வேண்டிய அவசியம் தானுவுக்கு இருந்திருக்கலாம் ஆனால், தாணுவை ராஜீவ் காந்தியிடம் அழைத்துச் சென்று, ராஜீவ் காந்திக்கு அறிமுகமும் செய்துவைத்து மாலையிடவும் அனுமதி வாங்கித் தந்த காங்கிரஸ் புள்ளி யார்?

கடைசிவரை அந்த நபர் விசாரணை வளையத்தில் சிக்காமல் தப்பித்தது எப்படி?

அந்தத் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது திருப்பெரும்புதூரில் திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதி இன்னமும் தனித் தொகுதி. அங்கு, தாழ்த்தப்பட்டப் பிரிவினர்தான் போட்டியிட முடியும்.

1967 முதல் திமுக 8 முறை அந்தத் தொகுதியைக் கைப்பற்றி உள்ளது. இப்பொழுதும் திமுக வசம்தான் அந்தத் தொகுதி உள்ளது. இடையில், அதிமுக-வும் 3 தடவை அங்கு வென்றுள்ளது. இந்த இரு கட்சிகளும் மாறிமாறி வென்ற இந்தத் தொகுதி, ஒரு கட்டத்தில் காங்கிரஸ் கட்சியின் பாரம்பரிய தொ-குயாகவும் விளங்கியது.

1984, 1989, 1991 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற மூன்ற பொதுத்தேர்தல்களிலும் காங்கிரஸ் கட்சியின் மரகதம் சந்திரசேகர் என்பவர்தான் தொடர்ந்து வென்றார்.

இந்த மரகதம் சந்திரசேகரின் மகளான லதா பிரியகுமாரின் வீட்டில்தான் தாணு தங்கி இருந்தார். லதாவின் கணவர் ஒரு சிங்களர். புகைப்படக் கலைஞருக்கு மின் கலம் வாங்கிக் கொடுத்த பேறறிவாளனைத் திட்டமிட்டு சிக்கவைத்த இந்திய புலனாய்வுப் பிரிவு, லதா பிரியகுமாரையும் அவரின் கணவரையும் ஏன் விசாரிக்கவில்லை?.

இந்த இருவரும்தான் தானுவுக்கு அடைக்கலம் கொடுத்ததுடன் அல்லாமல், உள்ளூர் காங்கிரஸ் தலைவருக்கு தாணுவை அறிமுகப்படுத்தி, அவர் மூலமாக, ராஜீவ் காந்தி அருகில் தாணு மாலையுடன் செல்வதற்கான ஏற்பாட்டையும் செய்தனர்.

அந்தத் தேர்தலில், தமிழ் நாட்டில் ஜெயலலிதா தலைமையில-ான அதிமுகவும் ராஜீவ் காந்தி தலை-லமையிலான காங்கிரஸ் கட்சியும் கூட்டணி அமைத்திருந்தன. ராஜீவ் காந்தியும் ஜெயலலிதாவும் எவ்வளவு நெருக்கம் என்பது அந்நாளைய அரசியல் வட்டத்தினருக்குத் தெரியும்.

எம்ஜிஆர் மிகவும் உடல் நலம் பாதிக்கப்பட்டு, செயல்படாத நிலைக்கு ஆளான நேரத்தில், ஜெயலலிதா ராஜிவ் காந்திக்கு கடிதம் எழுதி, அதில், எம்ஜிஆரால் செயல்பட முடியவில்லை செயல்படுவது இருக்கட்டும் ஒருபுறம் அவரால் பேசவே முடியவில்லை. அதன-ால், நிருவாகமும் தேக்கம் கண்டுள்ளது. இதை யெல்லாம் கருத்தில் கொண்டு நான் முதல்வராக உதவி செய்யுங்கள். நீங்கள் சொன்னால் எம்ஜிஆர் கேட்பார் என்று இரகசியமாக கடிதம் எழுதினார் ஜெயலலிதா.

இதை எப்படியோ தெரிந்துகொண்ட எம்ஜிஆர், அதன் பி-றகுதான் ஜெயலலிதாவுடன் ஒருவரும் தொடர்பு வைத்துக் கொள்ளக்கூடாதென்று உத்தரவு இட்டார்.

அந்த அளவுக்கு நெருக்கம் உடைய ராஜிவ் காந்தி, புது டில்லியில் இருந்து தனி விமானம் மூலம் தேர்தல் பரப்புரை மேற்கொள்வதற்காக தமிழகத்திற்கு வருகிறார். தமிழ் நாட்டைப் பொறுத்தவரை கூட்டணித் தலை-வர் ஜெயலலிதாதான். அப்படிப்பட்ட ஜெயலலிதா, ராஜீவ் காந்தி கலந்து கொண்ட தேர்தல் பிரச்சாரக் கூட்டத்திற்கு வராமல் ஒதுங்கிக் கொண்டது ஏன்?

அந்த நேரத்தில், தம-ிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி. அவரும் கூட்டத்திற்கு வரவில்லை.

மாநிலத் தலைவர்களும் கூட்டணித் தலைவர்களுமான ஜெயலலிதாவும் இராமமூர்த்தியும் அந்தத் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்திற்கு வராததன் காரணத்தைப் பற்றி, ராஜீவ் காந்தி கொலை-யை விசாரித்த கார்த்திகேயன் தலைமையிலான குழுவினார் கடை-சிவரை கண்டுகொள்ளவே இல்லை.

ஆனாலும், இவை யாவும் உலகின் கண்களையும் கருத்தையும் இன்னமும் உறுத்திக் கொண்டுதான் இருக்கின்றன.

சம்பவத்தன்று, ஆந்திரப் பிரதேத்தின் ஹைதராபாத் நகரில் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தை முடித்துக் கொண்டு, தமிழ் நாட்டுக்கு புறப்பட்ட நேரத்தில், தேர்தல் பிரச்சாரத்திற்காக அமர்த்தப்பட்டிருந்த தனியார் விமானம் பழுதடைந்து விட்டது.

அரை மணி நேரம் வரை காத்திருந்த ராஜிவ் காந்தி, "பரவாயில்லை இன்றைய தேர்தல் பிரச்சார நிகழ்ச்சிகளை இத்துடன் முடித்துக் கொண்டு, நாளை மீண்டும் தொடங்கலாம் இதற்கிடையில் விமானத்தை முறையாக பழுதுபார்த்து வையுங்கள்" என்று சொன்னதுடன், அவர் விமானி எனபதால் என்னென்ன சிக்கல் என்பதை சரியாக அடை-டயாளம் கண்டு பழுதான விமானத்தை அனுப்பிய தனியார் நிறுவனத்திற்கு அங்கிருந்தே ஒரு மின்னஞ்சலையும் அனுப்பிவிட்டு ஓய்வெடுப்பதற்காக பெங்களூருவிற்கு சென்றுவிட்டார்.

இதற்கிடையில், பழுதப்பட்ட விமானம் அவசரம் அவசரமாக சீர்செய்யப்பட்டு மீண்டும் ராஜீவ் காந்தி பயணத்திற்காக தயார்ப்படுத்தப்பட்டது. எல்லாம் மின்னல் வேகத்தில் வழக்கத்திற்கு மாறாக சட்டுசட்டென நடைபெற்று முடிந்தன.

விமானம் தயாரானதும், கர்நாடக மாநில காங்கிரஸ் தலை-வர் ஆஸ்கார் ஃபெர்னாண்டஸ்-க்கு தகவல் பரந்தது. தவிர, ஆஸ்கார் ஃபெனாண்டஸ் ஒரு மாநிலத் தலைவராக இருந்தாலும் அவர் சொல்வதை ராஜிவ் காந்தி கேட்பார், என்பதால், தேர்தல் பிரச்சாரத் திட்டக் குழுவினர் அவரை ஏவிவிட்டனர்.

இதற்கிடையில், சம்பந்தப்பட்டவர்கள் நேரடியாக பலமுறை தொலைபேசி வழியாக ராஜீவ் காந்தியை அழைத்துள்ளனர். அவரோ, களைப்பினாலும் அயர்வினாலும் தொலைபேசி இணைப்பை யெல்லாம் நிறுத்திவிட்டு, தன்னை எழுப்ப வேண்டாம் உதவியாளர்களிடமும் சொல்லிவிட்டு உறங்கச் சென்றுவிட்டார்.

அவர் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த இடத்திற்கு விரைந்த ஆஸ்கார் ஃ பெர்னாண்டஸ், இராஜீ காந்தியை எழுப்பும் விதமாக அறைக் கதவை தட்ட முனைந்தபோது தடுத்த உதவியாளர்களையும் மீறி, இராஜீவ் காந்தியை எழுப்பியிருக்கிறார் ஆஸ்கார் ஃபெர்னாண்டஸ்.

தூக்கக் கலக்கத்தோடு வந்து கதவைத் திறந்த ராஜீவ் காந்தியிடம், தமிழ் நாட்டுக்குப் புறப்படுங்கள். திருப்பெரும்புதூர் கூட்டத்திற்கான எல்லா ஏற்பாடும் முழு வீச்சில் நடைபெற்றுள்ளன என்று தெரிவித்திருக்கிறார்.

சீற்றமடைந்த இராஜிவ் காந்தி, நான்தான் ஹைதராபாத்திலேயே அனைத்தையும் தெளிவாக சொல்லிவிட்டேனே் தமிழ் நாட்டு நிகழ்ச்சிகளை நாளை பார்த்துக் கொள்ளலாம் என்றதும், தன்னை மாற்றிக் கொண்ட ஆஸ்கார் ஃபெர்னாண்டஸ், சற்று தணிந்து "தமிழ் நாட்டில் வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களை யெல்லாம் திருப்பெரும்புதூருக்கு அழைத்து வந்துவிட்டார்களாம் இன்று அந்தக் கூட்டத்திற்குப் போகாவிட்டால், நாளை இதேப் போன்ற எழுச்சியைக் காண முடியாமல் போகல-ாம்" என்றெல்லாம் பௌவியமாக சொல்லி ராஜீவ் காந்தியை சமாதானப்படுத்தி திருப்பெரும்புதூருக்கு, அதாவது கொலைக் களத்திற்கு தந்திரமாக அனுப்பி வைத்திருக்கிறார்.

அந்த ஆஸ்கார் ஃபெர்னாண்டசிடமோ, ஹைதராபாத்தில் இருந்து அவரைத் தூண்டிவிட்டவர்களிடமோ கடைசிவரை விசாரணை நடைபெற வில்லை.

இதுமட்டுமல்ல; ராஜீவ் காந்தி கொலைத் தொடர்பான சதிவலை எங்கெங்கோ விரிகிறது. ஹவாலா நிதிமோசடிக்காரர் சந்திரசாமி, அமெரிக்காவின் சிஐஏ முகவர் சுப்பிரமணியன் சாமி உட்பட ஏராளமானோர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் திட்டமிட்டே ஒதுக்கப்பட்டு, இதை விடுதலைப் புலிகளின் பக்கம் மட்டுமே மிகத்த்ந்திரமாக திருப்பிவிட்டனர்.

இதற்கெல்லாம் ஒரு நாள் தீர்வு கிட்டாமலா போகும்?

தமிழர்களுக்கும் ஈழத் தமிழ் மண்ணுக்கும் சாதகமான சூழலை தமிழன்னை ஏற்படுத்துவாள் என்பது திண்ணத்திலும் திண்ணம்.

**நக்கீரன்** - Nakkeeran 013-244 36 24



# ஈழத்துத் திருக்கோவில்கள் 998



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## சித்தாண்டி சித்திரவேலாயுத சுவாமி கோயில் மட்டக்களப்பு

பதினைந்து நாள் திருவிழாவும் மிகச் சிறப்பாக நடைபெறும் ஒன்பதாந் திருவிழா மயில்கட்டுத் திருவிழா என அழைக்கப்படும். இந்நாளில் முருகன் வள்ளிநாயகியாரைக் கடிமணம் புரிந்தநாள் என்று கருதிக் கொண்டாடுவர். இத்திருவிழாவன்று திருமணங்களைச் செய்துவைப்பது சித்தாண்டிக் கிராமத்து வழக்கமாகும். கோயிலிலே கொடியேறியதும் மேற்கு வானில் ஒளிப்பிளம்பொன்று தோன்றி, ஆலயத்திலே வந்து படிகின்ற அற்புத நிகழ்ச்சி வழமையாக நடைபெறுவதான ஐதீகம் இங்கு நிலவுகின்றது. திருவிழாக்காலங்களிலே பக்தர்கள் வாயலகு போட்டவாறு காவடி எடுத்து வருவர். ஆவணிப் பௌர்ணமியன்று அருகிலுள்ள குமாரர் கோயிலின் முன்றலிலே தீமிதிப்பு நடைபெறும். அன்றைய அன்னதானத்தோடு ஆண்டுத் திருவிழாக்கள் நிறைவுபெறும். கொடி இறக்கத்தன்று இரவு இடும்பன் பூசைக்கான பூசணிக்காய் பலியிடுதல் வழக்கம். உயிர்ப்பலி நீக்கி அதற்குப் பதிலாக பூசணிக்காயை அறுப்பதனை இது குறிக்கின்றது.

வள்ளி அம்மானை என்னும் ஏடு, திருவிழாக்காலம் முழுவதும் வள்ளி நாச்சியார் கோயிலின் முன் படிப்பது வழக்கமாகக் காணப்படுகின்றது. இக் கோயிலிலுள்ள தெய்வானை அம்மன் கோயிலில் மாத்திரம் திரை திறவாது பூசைகள் நடைபெறும். மூலஸ்தானம், மற்றும் இக்கோயிலிலுள்ள அனைத்து கோயில்களும், வள்ளி அம்மன் கோயிலும் பூசையின்போது திரை நீக்கிக் காணப்படும். மயில் கட்டுத் திருவிழா முதல் தீர்த்தம் முடியும்வரை வள்ளியம்மன் கோவில் சிறப்பான அலங்காரத்துடன் காணப்படும்.

தீர்த்தத்தன்று மாலை, தலைப்பற்றோலை, குடை, கொடி, ஆலவட்டம், தீவட்டி முதலிய ஆசாரங்களுடன் தலைமை வண்ணக்கரான வன்னியனார் வீட்டிற்கு, ஆலயம் சம்பந்தப்பட்டோர் செல்வது வழக்கமாகும். அங்கு அனைவருக்கும் வன்னியனார் சாப்பாடு கொடுத்து உபசரிப்பார். பின்னர் பலகாரப் பெட்டிகளுடன்
மீண்டு, யாவரும் வள்ளியம்மன் கோவிலுக்கு வந்து சேர்வர். இந்நிகழ்வானது வள்ளியம்மன் திருமணம் தொடர்பான ஒரு சடங்காக நிகழ்ந்து வருகின்றது. தற்காலத்தில் கோவிலுக்கு வடபுறத்தில் உள்ள வாவித்துறையில் தீர்த்தமாடப்படும் இடத்தில், மண்டபம் ஒன்று உள்ளது. சுவாமி தீர்த்தமாடச் செல்வதாகக் கூறிக்கொண்டபோதிலும், முருகப்பெருமானின் அடையாளமான வேல் மாத்திரமே இங்கு தீர்த்தமாடுவது குறிப்பிடத்தக்கதாகும்.

தற்காலத்தில், சித்தாண்டியில் வசித்த மக்கள் மட்டக்களப்பின் பல பிரதேசங்களிலும் செறிந்து வாழ்கின்றார்கள். வழமையாகத் திருவிழாக்களை நடத்தியவர்களின் வாரிசுகள் தொடர்ந்தும் இங்கு வந்து திருவிழாக்களை நடத்துவர். அவ்வாறான நிலை இல்லாதவிடத்து அத்திருவிழாக்களை ஆலயமே பொறுப்பேற்றுச் செய்கின்றது.

மார்கழி மாதத்திலே நடைபெறும் திருவெம்பாவை பூசையும், அதன்போது 3 ஆம் நாள் முதல் தொடர்ந்து நடைபெறும் 6 நாள் திருவிழாக்களும் மிகச் சிறப்பாக நடைபெறுவதோடு, இவற்றை அம்மை திருவிழா என அழைத்துக் கொண்டாடுவது சிறப்பான அம்சமாகும். இறுதி நாளன்று வாழைக்குலை, ரொட்டி என்பனவற்றைக் கட்டித் தூக்கி அலங்காரம் செய்வர். பூசையின் பின்னர் பக்தர்கள் பாய்ந்து இவற்றைப் பிடுங்கி மகிழ்வர். தைப்பொங்கல், சித்திர வருஷப்பிறப்பு, ஆடி அமாவாசை, தீபாவளி, திருக்கார்த்திகை, திருவெம்பாவை, முதலிய தினங்களிலே விசேஷ பூசைகள் நடைபெறும். கந்தசஷ்டி விரதமும் சிறப்பாக அனுட்டிக்கப்படுகின்றது.

கோயில் பூசைக்குத் தேவையான பூக்கள், அதற்கு வடக்கேயுள்ள பூங்காவனத்திலிருந்து கிடைக்கின்றது. இரண்டு ஏக்கர் சுற்றளவினைக் கொண்ட இந்த நந்தவனத்திலே பலவிதமான பூவகைகளும், நிறைந்து காணப்படுகின்றன. கோயிலுக்குரிய பூந்தோட்டம் அத்தியா குடியினரின் பரிபாலனத்திலே காணப்படுகின்றது.

சுவாமி வீதி உலா வருவதற்கு நான்கு வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்றன.. இரு குதிரைகள் பூட்டிய வாகனத்தை கங்காணிப்போடி குடியினர் உபயமாக அளித்துள்ளனர். சிங்க வாகனம் வன்னிமையினால் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இடப வாகனத்தை அத்தியா குடியினர் செய்து கொடுத்துள்ளனர். மூஷிக வாகனத்தை பட்டியன் குடியினர் உபயமாக அளித்துள்ளனர்.

இக்கோயிலைப் பற்றிய தனிப் பிரார்த்தனைப்பாடல்கள் பல காணப்படுகின்றன. திருவாளர் பிள்ளையான் சிவலிங்கம், திருவாளர் பணிக்கன் மயில்வாகனம் ஆகியோர் இவ்வாறான தனிப்பிரார்த்தனைப் பாடல்களைப் பாடியோருள் குறிப்பிடத் தக்கவராவர். கோயிலைப்பற்றிய தலபுராண நூலொன்றினையும் ஆரப்பற்று அழகேச முதலி என்பவர், சித்தாண்டித் தலபுராணம் எனப் பெயரிட்டு இயற்றியுள்ளார். பட்டயம் என வழங்கப்படும் தலைப்பற்று ஓலையிலான ஏடு ஒன்று, இக்கோயிலின் பண்டைய வரலாற்றுக் குறிப்புக்கள், மானியங்கள், நடைமுறைகள்பற்றிக் குறிப்பிடுகின்றது. கோயில் வருமானத்தைக் கொண்டு பொதுப்பணி வேலைகள் பல நடைபெற்று வருகின்றன. பாலர் பாடசாலை, வாசிகசாலை, மடம் மற்றும், பல பாடசாலைகளுக்கு நிதியுதவி, சமூகத் தேவைகளுக்குரிய நிதியுதவியெனக் காலத்தின் தேவையை அனுசரித்துப் பல பணிகளைச் சித்தாண்டி சித்திர வேலாயுத சுவாமி கோயில் நிறைவேற்றி வருகின்றது. இவ்வாலயம் சிறப்புற நடைபெற மக்களின் ஒத்துழைப்பும், ஒற்றுமையும், ஒழுங்குமுறைகளும் முக்கிய காரணமாகக் காணப்படுகின்றன. இவ்வாறாக, வேண்டும் வரங்களை வழங்கும் சித்தாண்டி சித்திரவேலாயுத சுவாமி கோயிலில் காணப்படும் வரலாறும் மரபுகளும் ஏனைய ஆலயங்களினின்றும் வேறுபட்டுத் தனித்துவம் கொண்டவையாகக் காணப்படுகின்றன.

வளரும்...



# ஜீவன் முக்தி 583

# ஆனந்த அஷ்டாங்கம்

**ஆனந்தமயமான வாழ்விற்கான எட்டு வழிகள் :**

**ஹாஸ்யத் தியானம் – (சிரிக்கும் தியானம்)**
Hasya Meditation (laughing meditation)

**ஆனந்த சங்கல்பம்**
Ananda Sankalpa

**நித்ய சூர்ய நமஸ்காரம்**
Nithya Surya Namaskar

**சக்தி தாரணை (பிரபஞ்ச சக்தியை உள்வாங்கு**
Shakti Dharana

**சாஸ்திர சஸ்திரங்கள் (ஞானக் கேடயங்கள்)**
Shaastra shastraas

**நித்ய தியானம்**
Nithya Dhyaan

**புரஸ்சரணம்**

## ஆனந்தமயமான வாழ்விற்கான எட்ட வழிகள்

ஆனந்த அஷ்டாங்கம் என்பது உடல் மனம் மற்றும் ஆன்மா சம்பந்தப்பட்ட ஆனந்தமயமான வாழ்விற்கான எட்டு வழிகளைச் சொல்வது.

ஆராய்ச்சியின் முடிவுகள் - 1

ஹாஸ்யத் தியானம் - (சிரிக்கும் தியானம்)

காலையில் கண் விழித்தவுடன் படுக்கையிலிருந்து எழும் முன்னர் ஐந்து நிமிடங்களுக்குச் சிரிக்க வேண்டும்! உங்களைப் பார்த்தே சிரியுங்கள். ஒரு காரணமுமில்லாமல் சிரிக்கலாம்!

சிரிப்பு என்பது ஒரு அற்புதமான தியான நுட்பம் ஆகும். ஜென் குரு-சிஷ்ய பரம்பரையில் மனம் கடந்த நிலையை அடைய ஹாஸ்யத்தை உபாயமாகக் கொண்டு இருந்தனர். இந்தத் தியானத்திற்கு உடனடி பலன் உண்டு.

சிரிப்பு ஒரு நிரம்பி வழியும் சக்தி. மன அழுத்தத்திலிருந்து நம்மை விடுவிக்கிறது.

சிரிக்கும்போது, உங்கள் மனம் மறைந்து நீங்கள் பிரபஞ்ச சக்தியுடன் ஒன்றிவிடுகிறீர்கள்.

ஹாஸ்யம் பலவகைப்பட்ட நோய்களைக் குணப்படுத்துகிறது. முக்கியமாக நரம்பு சம்பந்தப்பட்டதும் தொண்டை சம்பந்தப்பட்டதுமான நோய்கள் இதனால் குணமடைகின்றன. திசுக்களின் செயல்பாடுகளில் உள்ள குறைகளைக்கூட சிரிப்பு அகற்றி விடுவதாகச் சொல்லப்படுகிறது. சிரிப்பு முழுமையாய் நிகழும்போது அதுவே ஒரு ஆழமான தியானமாகி விடுகிறது.

## ஆனந்தம் மலர்வதற்கான யுக்தி-2

ஆனந்த சங்கல்பம்

ஆனந்த சங்கல்பம் என்பது மகிழ்ச்சிக்கான உறுதி.

சூஃபி ஞானி அப்துல்லாவிடமிருந்து இந்தத் தியானத்தின் ஒரு பகுதி பெறப்பட்டது.

தினமும் அதிகாலையில் எழுந்தவுடன் கண்களைத் திறக்கும் முன்பு படுக்கையில் உட்கார்ந்து கொள்ளுங்கள்.

உங்கள் அருகாமையில் மற்றவர்கள் இருப்பின் உங்களுக்கு உரக்க அழைக்கத் தயக்கமாக இருப்பின் உட்கார்ந்தபடி உங்களை உரக்க அழைப்பதாக உங்கள் மனத்தில் பாவனை செய்து கொள்ளுங்கள்.

உங்கள் பெயரைச் சொல்லி உங்களை அழையுங்கள். உங்களை நீங்களே அழைத்து "இன்று நீ எதைத் தேர்ந்தெடுக்கப் போகிறாய்? மகிழ்ச்சியையா அல்லது துயரத்தையா?" என்று கேளுங்கள்.

சுபாவமாகவே நீங்கள் காலையில் முதல் வேலையாகத் துயரத்தைத் தேர்ந்தெடுக்கப் போவதில்லை. எனவே உங்கள் மனம் "நான் மகிழ்ச்சியைத் தேர்ந்தெடுக்கப் போகிறேன் என்று சொல்லும்.' உடனே நீங்கள் உங்களைக் கூப்பிட்டு சரி மகிழ்ச்சியாய் இரு" என்று சொல்லிவிடுங்கள். அவ்வளவுதான்!

நாம் எப்போதுமே ஆனந்தமாய் இருக்கத் தேவையான சக்தி நம்மிடம் உள்ளது என்பதை உணருங்கள். இப்போது கண்களைத் திறந்து உங்களது உறுதிமொழியைக் கடைப்பிடியுங்கள்.

உங்கள் உறுதிப்பாட்டின் வலிமையினால் உங்களது மனத்தின் முழுப் போக்கையும் நீங்கள் மாற்றியமைத்திருப்பதை நீங்களே உணர்வீர்கள்.

## ஆனந்தம் மலர்வதற்கான யுக்தி-3

தைலக்கிரியை

நாம் தைலக்கிரியை செய்யும்போது எண்ணெய் எச்சில் மூலமாகவும் நாக்கின் மூலமாகவும் நமது உடலிருந்து கோழை தொற்றுக்கள் நச்சுப்பொருட்கள்முதலியவற்றை வெளியேற்றுகிறது.

பல்தேய்க்கும் முன்பாகவும் சாப்பிடுவதற்கும் குடிப்பதற்கும் முன்பாகவும் ஒரு முழு மேஜைக்கரண்டி அளவு நல்லெண்ணெய் அல்லது சுத்திகரிக்கப்பட்ட சூரிய காந்தி எண்ணெய் ஆகிய இரண்டில் ஏதோ ஒன்றை எடுத்துக் கொள்ளுங்கள்.



தாடையைக் கடைவாய்ப் பற்களில் எண்ணெய் படும் வண்ணம் அசையுங்கள் வாய் முழுவதும் எண்ணெய் படும் வண்ணம் கொப்பளியுங்கள். பின்பு லேசாகக் கடிக்கப்பட்ட பற்களிடையே இந்த எண்ணெயை 15 முதல் 20 நிமிடங்கள் வரை கொப்பளியுங்கள். கடைசியில் இந்த எண்ணெயைக் கழிவறையில் துப்பிவிட்டுப் பற்களை நன்றாகத் தேயுங்கள். தாவரங்கள் இருக்கும் இடத்தில் துப்புவது தாவரங்களின் வளர்ச்சியை அழித்துவிடும். எனவே தரையில் துப்ப வேண்டாம்.

கொப்பளித்த எண்ணெயை விழுங்காதீர்கள். அது உடலுக்கு நல்லதல்ல. ஒரு சொட்டு விடாமல் மீண்டும் மீண்டும் மூன்று முறையாவது தண்ணீரைவிட்டு கொப்பளித்து துப்பிவிடுங்கள்.

## ஆனந்தம் மலர்வதற்கான யுக்தி-4

நித்ய சூர்ய நமஸ்காரம்

யோகத்தைப் புரிந்து கொள்ளும் விதத்தில் மனித குலத்திற்குப் பரிசாக அளிக்கப்பட்ட நித்திய யோகத்தின் ஒரு அங்கமே நித்ய சூரிய நமஸ்காரம். பதஞ்சலி முனிவரால் கற்பிக்கப்பட்ட சூத்திரங்களின் மூலம் இன்றைய நவீன மனவியலுக்குத் தகுந்தவாறு வழங்கப்பட்டிருப்பதே நித்ய யோகத்தின் தனிச் சிறப்பாகும்.

தினம் அரை மணிநேரம் ஒதுக்குவது உங்களுடைய உடல் மன ஆரோக்கியத்தை நேரடியாக அதிகரிக்கும்.

## ஆனந்தம் மலர்வதற்கான யுக்தி-5

சக்தி தாரணை
(பிரபஞ்ச சக்தியை உள்வாங்குதல்)

இந்த உத்தி தந்திர சாஸ்திரத்தில் உள்ள குலர்வன தந்திரம் என்ற பகுதியிலிருந்து எடுக்கப்பட்டது.

பிரபஞ்ச சக்தியுடன் ஒத்திசைவு கொள்ள இது ஒரு அழகிய உத்தியாகும்.

சக்தி தாரணையின் முக்கியத்துவம் என்னவென்றால் உங்களை இந்தத் தியானம் மனம் கடந்த நிலை என்ற துரிய நிலையின் நுழை வாயிலுக்குள் அழைத்துச் செல்லும்.

## ஆனந்தம் மலர்வதற்கான யுக்தி-6

சாஸ்திர சஸ்திரங்கள்
(ஞானக் கேடயங்கள்)

தினமும் ஒரு அரைமணி நேரம் அனுபூதி அடைந்த ஞானியால் எழுதப்பட்ட புத்தகங்களைப் படியுங்கள் அல்லது அவரது சொற்பொழிவுகளைக் கேளுங்கள்.

ஒரு ஞானியின் மொழிகள் நேரடியான சாஸ்திரங்கள். அவை இறுதியான அறிவுப் பெட்டகம் மற்றும் சத்தியங்கள் ஞானியின் வார்த்தைகள் நமது அறியாமையை வேரறுக்கும் ஆயுதங்கள்.

இவை அறியாமையை நேரடியாக வேரறுக்க வல்லவை.

ஒரு ஞானி தொடர்ந்து நிறைய உத்திகளை வெளிப்படுத்திக் கொண்டே இருக்கிறார்.

திடீரென்று அதில் ஏதேனும் ஒரு யுக்தியை இந்த தீக்ஷையை யார் உணர்கிறார்களோ அவர்கள் பாக்கியசாலிகள்.

குருவின் மொழிகளைக் கேட்டு உங்கள் வாழ்க்கையோடு அவற்றை மேன்மேலும் இணைத்து விடுங்கள்.

குருவின் வார்த்தைகள் சாஸ்திர சஸ்திரங்கள். எப்பேர்பட்ட துக்கத்திலிருந்தும் உங்களை மீட்டெடுத்துவரும் ஞானக் கேடயங்கள்தான் சாஸ்திரங்கள்.

நீங்கள் உங்களின் இல்லத்தில் அலுவலகத்தில் எங்கெல்லாம் ஓய்வாக அமருகிறீர்களோ அந்த இடங்களிலெல்லாம் ஞானியால் எழுதப்பட்ட ஒரு புத்ததத்தையாவது வைத்துவிடுவது வாழ்விற்கான எளிய முதலீடு.

எப்போதெல்லாம் துக்கம் சோர்வு ஏற்படுகிறதோ அப்போதெல்லாம் இது போன்ற இடங்களில்தான் நீங்கள் அமர்வீர்கள்.

அப்போதெல்லாம் துக்கத்திலிருந்து சோர்விலிருந்து வெளிவருவதற்காக நீங்கள் செய்யும் முதல்வேலை ஏதாவது ஒரு பத்திரிக்கையையோ நாளிதழையோ எடுத்து புரட்டுவதுதான்.

நன்றாகப் புரிந்து கொள்ளுங்கள்... கலவரம் பற்றிய செய்திகளையும் கவர்ச்சி இச்சை ஆசை சம்பந்தபட்ட செய்திகளையும் மனம் சோர்ந்திருக்கும் நேரங்களில் படிப்பது நேரடியாக உங்களின் மன நலத்தைப் பாதிக்கும்.

அந்த நேரங்களில் நீங்கள் அமரும் இடங்களிலிருந்து ஞானிகளின் வாழ்வியல் தீர்வுகள் கொண்ட புத்தகங்களை எடுத்துப் படித்தால் உங்களின் பாதிப்பிலிருந்து வெளி வருவதற்கான தீர்வே அங்குக் காத்திருக்கும்.

## நித்ய தியானம்

நம்மை நம் மனத்திலிருந்து விடுவித்து அதையும் தாண்டிய எண்ணங்களற்ற நிலைக்கு கொண்டு செல்லும் வகையில் வடிவமைக்கப்பட்ட தியானம் நித்ய தியானம்.

நித்ய தியானத்தை 'ஞானத்தில்' வாழுதல் பகுதியில் பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள்.




நித்ய தியானத்தின் ஐந்து படிகளைப் பற்றி விரிவாகத் தெரிந்து கொள்ள ஞானத்தை வாழ்தல்' எனும் பகுதியில் பார்க்கவும்.

## புரஸ்சரணம்

'நீங்கள் கடவுள்!' என்பதற்குக் குறைவாய் உங்களை நம்ப வைக்கும் எந்த ஒரு எண்ணமும் அகங்காரமே!

உங்களின் எல்லாப் பிரச்சினைகளுக்கும் ஒரே தீர்வு, உங்களுக்குள்ளேயும் வெளியேயும் அபூர்ணத் தன்மையை, குறைகளை உருவாக்கும் சக்தியோட்ட குறைபாடுகள் சரி செய்யப்படவேண்டும் என்பதே. அண்டம், பிண்டமாகும். அறிவியல் புரிந்தாலே, கடவுள் சக்திதான் எல்லாமாகப் பரிணமிக்கிறது எனும் சத்தியம் புரிந்து விடும்.

பிரபஞ்ச உணர்வுதான் அதாவது பிரம்ம தத்துவம்தான் பிரபஞ்ச சக்தியாக வெளிப்பட்டது. (பார்க்க பக்கம் 576)

அந்தப் பிரபஞ்ச சக்தி பராசக்தி அதாவது தேவி தத்துவம்தான் இந்த பிரபஞ்சத்தை இயக்குகிறது. அதுதான் காடு மலை மரம் மனிதன் என்ற எல்லாமாகவும் வெளிப்பட்டுக் கொண்டே இருக்கிறது. அதுதான் பஞ்ச பூதமாக தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது.

இவை எல்லாவற்றையும் மொத்தமாக இயக்கும் பிரபஞ்ச ஞான சக்தியைத்தான் குரு சக்தி அதாவது குரு தத்துவம் என்கிறோம். இன்னும் இதை அழகாகப் புரிந்து கொள்வோம்.

நான் உங்களோடு பேச உதவும் இந்த மைக்கிற்குள் இருக்கும் விழிப்புணர்வும் உங்களுக்குள் இருக்கும் விழிப்புணர்வும் ஒன்றுதான். உங்களுக்குள்ளும் எனக்குள்ளும் இருக்கும் விழிப்புணர்வும் ஒன்றுதான். இந்த நிலையைத்தான் 'அத்வைதம்' என்ற வார்த்தை மூலமாக விளக்குகிறார்கள்..

ஆனால் நிச்சயம் இந்த மைக்கை விட நீங்கள் அதிகமான சக்தியைப் பெற்று இருக்கிறீர்கள். உங்களைவிட ஒரு அவதாரப் புருஷர் அதிகமான சக்தியைப் பெற்று இருக்கிறார். இதைத்தான் 'த்வைதம்' என்ற வார்த்தை மூலமாக விளக்குகிறார்கள்.

த்வைதம் அத்வைதம் என்ற பெரிய பெரிய வார்த்தைகளைப் போட்டுக் குழப்பிக் கொள்ளாமல் நேரடியாகப் பார்த்தோமென்றால் இந்த மொத்த பிரபஞ்சத்தில் இரண்டே இரண்டு அம்சங்கள்தான் இருக்கின்றன.

1. விழிப்புணர்வு (consciousness)
2. ஞானம் (intelligence)

மைக்கிற்குள் இருக்கும் விழிப்புணர்வுக்கும் உங்களுக்குள் இருக்கும். Intelligenceக்கும் சம்பந்தமே கிடையாது. அதேபோல ஒரு அவதார புருஷரின் உடலை இயக்கும் cosmic intelligence ஒரு மனிதருக்குள் இருக்காது.

எல்லாப் பொருளுக்குள்ளும் இருக்கும் awareness ஒன்றுதான் அதை உணரும் ம்intellience-தான் வேறு.

ஒரு மனிதன் தன்னுடைய விழிப்புணர்வையும் ஞானத்தன்மையையும் நேரடியாக இறைசக்தியோடு இணைத்துக் கொள்வதின் மூலமாக அந்த அவதார சக்தியின் நிலைக்குத் தன்னை உயர்த்திக் கொள்ள முடியும். தன்னுள் பூரணத் தன்மையை மலர்த்திக் கொள்ள முடியும்.

இதற்கு நேரடியாக உதவும் நுட்பத்தைத்தான் புரஸ்சரணம் என்கிறோம். புரஸ்சரணம் என்பது பூரணத்துவ தியானம்.

(தொடரும்...)

# ராஜீவ் கொலை வழக்கில் மற்ற 6 பேரின் விடுதலைக்காக உயர் நீதிமன்றத்திடம் முறையிடுவோம்: வழக்கறிஞர் புகழேந்தி




பேரறிவாளனைத் தொடர்ந்து மற்ற 6 பேரையும் விடுதலை செய்ய வேண்டும் என வரும் 23ம் தேதி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர இருப்பதாக வழக்கறிஞர் புகழேந்தி கூறினார்.முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்ற முருகன், சாந்தன் ஆகியோர் வேலூர் மத்திய ஆண்கள் சிறையிலும், நளினி பெண்கள் தனிச்சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். மேலும், ராபர்ட் பயாஸ், ஜெயக்குமார் ஆகிய 2 பேரும் சென்னை புழல் சிறையிலும், ரவிச்சந்திரன் மதுரை மத்திய சிறையிலும் அடைக்கப்பட்டுள்ளனர்.

இதே வழக்கில் தண்டனை பெற்றிருந்த திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டையைச் சேர்ந்த பேரறிவாளன் இன்று காலை உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார்.இந்தத் தீர்ப்பின் மூலம் சிறையில் உள்ள மற்ற 6 பேரும் மகிழ்ச்சி அடைந்துள்ளதாக வழக்கறிஞர் புகழேந்தி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறியது: ''முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்ற 7 பேரையும் விடுதலை செய்ய வேண்டும் என தமிழக சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 7 பேர் விடுதலை தொடர்பான தமிழக அமைச்சரவை நிறைவேற்றிய தீர்மானத்தை தமிழக ஆளுநர், குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்தார்.

இதில் தற்போது பேரறிவாளன் மட்டும் விடுதலை செய்யப்பட்டுள்ளார். அவர் தன்னை விடுதலை செய்ய வேண்டும் என உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்ததால் தற்போது அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.இதே வழக்கில் சம்பந்தப்பட்ட 7 பேரையும் விடுதலை செய்ய வேண்டும் என தமிழக ஆளுநர், குடியரசுத் தலைவருக்கு அறிக்கை அனுப்பியுள்ள நிலையில், உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்த ஒருவரை மட்டுமே விடுதலை செய்திருப்பது சரியானது அல்ல. பணம் இருப்பவர்கள் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரலாம்.

ஆனால், பணம் இல்லாதவர்கள் வழக்கு தொடராமல் இருந்தால் அவர்களுக்கு நீதி கிடைக்காதா என்ன?இந்த வழக்கில் 7 பேரையும் விடுதலை செய்திருக்க வேண்டும். அனைவரும் ஒரே வழக்கின் கீழ் உள்ளவர்கள் தானே? அப்படியிருக்க இதில் ஒருவருக்கு மட்டும், விடுதலை செய்து தீர்ப்பு அளித்துவிட்டு, மற்ற 6 பேர் மீது பாராமுகமாக இருக்கக்கூடாது. இது உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர பணம் இல்லாதவர்களுக்கு நீதி கிடைக்காது என்பது போல் உள்ளது. இது தொடர்பாக வரும் திங்கட்கிழமை (23ம் தேதி) சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்ய உள்ளோம்'' என்று அவர் கூறினார்.

# தமிழ்நாட்டை 'திராவிட நாடு' என பெயர் மாற்ற முடியுமா? மே 18 தின எழுச்சி மாநாட்டில் சீமான் கேள்வி

நாம் தமிழர் கட்சி சார்பில் சென்னை பூவிருந்தவல்லியில் மே 18 தின எழுச்சி மாநாடு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில், கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் பேசியதாவது: சரணடைந்து வாழ்வதைவிட சண்டையிட்டு சாவது மேல் என்ற கோட்பாட்டின்படி வாழ்ந்தவர் பிரபாகரன். போரை சிங்கள அரசு திணிப்பதனால், பெரும் பொருளாதார, அரசியல் சிக்கல் நேரிடும் என்று பல ஆண்டுகளுக்கு முன்பே அவர் பதிவு செய்துள்ளார்.பன்னாட்டுப் படைகள் சுற்றி நின்றபோதும், தன் மக்களை விட்டு விலகாமல் போரிட்ட பிரபாகரன் எங்கே? சொந்த நாட்டு மக்கள் கிளர்ச்சி செய்தபோது ஓடி ஒளிந்த ராஜபக்சே எங்கே? 'பிரபாகரன் இருந்திருக்கலாம்' என்று சிங்களவர்களே சொல்லும் நிலை தற்போது உருவாகியுள்ளது.

திடீரென பாஜகவுக்கு ஈழத் தமிழர்கள் மீது பாசம் ஏற்பட்டுள்ளது. இலங்கையிலிருந்து அகதிகளாக இந்தியா வந்து வாழும் ஈழத் தமிழர்களுக்கு



குடியுரிமை வழங்க வேண்டும்.பேரறிவாளன் விடுதலை மகிழ்ச்சியைவிட, நம்பிக்கையைத் தருகிறது. இந்த தீர்ப்பு, சிறையில் உள்ள மற்றவர்களுக்கும் பொருந்தும். எனவே, அவர்களையும் விடுதலை செய்ய வேண்டும்.

மாட்டுக் கறி சாப்பிட தடை விதிப்பவர்கள், மாட்டுக் கறி ஏற்றுமதியைக் கைவிடுவார்களா?

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும். அதேபோல, எனது பாஸ்போர்ட் மீதான தடையையும் நீக்க வேண்டும். பாஜகதான் நாம் தமிழர் கட்சியின் `பி' டீமாக செயல்பட்டு வருகிறது. திராவிட மாடல் என்று பேசி வரும் முதல்வர், தமிழ்நாட்டை `திராவிட நாடு' என்று பெயர் மாற்றம் செய்வாரா? நான் தமிழகம் முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொள்ள உள்ளேன். 2026ல் நாம் தமிழர் அரசை மலரச் செய்வோம். இவ்வாறு சீமான் பேசினார்.

மகிந்தா ராஜபக்சவுக்கு மத்திய அரசு அடைக்கலமும் கொடுக்கக் கூடாது. 7 பேரை விடுதலை செய்யும் அமைச்சரவைத் தீர்மானத்தில் கையெழுத்து போடாமல் மூன்று ஆண்டுகள் காலம் தாழ்த்திய தமிழக ஆளுநருக்கு கண்டனம் தெரிவிப்பது உள்ளிட்ட தீர்மானங்கள் இந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

# குவாட் அமைப்பை பயன்படுத்தி இலங்கை தமிழர் பிரச்சினையில் பிரதமர் மோடி தீர்வு காண வேண்டும்: பழ.நெடுமாறன் வலியுறுத்தல்




குவாட் அமைப்பை பயன்படுத்தி இலங்கை பிரச்சினையில் பிரதமர் மோடி தலையிட்டு நம் நாட்டின் பாதுகாப்புக்கு வந்திருக்கக் கூடிய அபாயத்தை தடுப்பதுடன் தமிழர் பிரச்சினையை தீர்க்க வேண்டும் என உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ.நெடுமாறன் வலியுறுத்தியுள்ளார்.தஞ்சாவூர் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் நேற்று நடைபெற்ற தமிழின படுகொலை நாள் நினைவேந்தல் நிகழ்ச்சியில் பங்கேற்ற அவர் பின்னர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

முள்ளிவாய்க்கால் நினைவு நாளில், பேரறிவாளனை விடுதலை செய்து உச்ச நீதிமன்றம் நல்ல தீர்ப்பை வழங்கியுள்ளது. சிறையிலுள்ள மீதமுள்ள 6 பேருக்கும் இந்தத் தீர்ப்பு பொருந்தும். காவிரி, முல்லைபெரியாறு, இந்தி திணிப்பு என தமிழர்களுக்கு ஊறு விளைவிக்கக் கூடிய எந்த பிரச்சினையாக இருந்தாலும், கட்சி வேறுபாடு இல்லாமல், தமிழர்கள் அனைவரும் ஒன்றுபட்டு நிற்க வேண்டும்.இலங்கையில், சீனா ஆழமாக கால் ஊன்றிஉள்ளது. இது நம் நாட்டுக்கு மட்டுமல்ல, தெற்காசிய நாடுகள் அனைத்துக்கும் ஆபத்தானது.

இந்தோ பசிபிக் கடல் பகுதியில் சீனா ஆதிக்கம் பெற்று விடக்கூடாது என்பதற்காகத்தான், அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான் போன்ற நாடுகள் அமைத்த குவாட் அமைப்பில் இந்தியாவும் இணைந்துள்ளது .இந்த சூழ்நிலையை பயன்படுத்தி, பிரதமர் மோடி, குவாட் மூலமாக இலங்கை இனப்பிரச்சினையில் தலையிட்டு, இந்தியாவின் பாதுகாப்புக்கு வந்திருக்கக் கூடிய அபாயத்தை தடுப்பதுடன், தமிழர் பிரச்சினையை தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அங்குஉள்ள தமிழர் பிரச்சினையில்தான் இந்தியாவின் பாதுகாப்பு அடங்கி இருக்கிறது என்பதை டெல்லியில் உள்ளவர்கள் உணர வேண்டும் என்றார்.

பின்னர், ''சென்னையில் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் முற்றம் நினைவேந்தல் நிகழ்ச்சியில், பிரதமர் மோடியை நீங்கள் ராஜதந்திரம் மிக்கவர் என புகழ்ந்து பேசி இருக்கிறீர்களே?'' என செய்தியாளர்கள் கேட்டதற்கு, ''நான் சொல்லாததை எல்லாம், சொன்னதாக சொல்லாதீர்கள். இது தொடர்பாக சமூக வலைதளங்களில் வரும் கருத்துகளுக்கு நான் பதில் சொல்ல விரும்ப வில்லை'' என்றார்.

# "எனது விடுதலைக்கு முழு காரணமாக இருந்தவர்" வைகோவை சந்தித்த பேரறிவாளன் நெகிழ்ச்சி



"எனது விடுதலைக்கு முழுக்க முழுக்க அண்ணன் வைகோதான் காரணம்" என்று பேரறிவாளன் தெரிவித்தார். ராஜீவ் காந்தி கொலை வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்ட பேரறிவாளன் மற்றும் அவரது தயார் அற்புதம் அம்மாள் ஆகியோர் இன்று காலை, சென்னை அண்ணா நகரில் உள்ள வீட்டில் மதிமுக பொதுச் செயலாளர் வைகோவை நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

இதன்பிறகு செய்தியாளர்களிடம் பேரறிவாளன் கூறுகையில், "இந்த விடுதலைக்கு முழுக்க முழுக்க அண்ணன் வைகோ காரணமாக இருந்தார். அதற்கு நன்றி கூறுவதற்காகத்தான் வந்தோம். நேற்றைக்கே இங்கே வர நினைத்தோம். ஆனால், நேரம் ஆகிவிட்டது.இந்தியாவின் தலை சிறந்த வழக்கறிஞர் ராம் ஜெத்மலானியை அழைத்து வந்து வாதாடச் செய்தார். அவர், சிறைக்குச் சென்று கைதிகளைப் பார்க்கின்ற வழக்கம் இல்லை. ஆனால், வேலூர் சிறைக்கு வந்து எங்களைப் பார்த்தார்.

சென்னை உயர் நீதிமன்றத்தில் வாதாடி, தூக்குத் தண்டனைக்குத் தடை ஆணை பெற்றுக் கொடுத்தார்.உச்ச நீதிமன்றத்தின் அத்தனை அமர்வுகளிலும் பங்கேற்று வாதாடினார். அவருடைய வாதங்கள்தான், எங்கள் விடுதலைக்கு வழிகாட்டியது. ஜெத்மலானி தற்போது உயிரோடு இல்லை. ஆனால், அவர் செய்த உதவியை நாங்கள் என்றைக்கும் மறக்க முடியாது" என்று தெரிவித்தார்.

மலேசிய மடல்

# மலேசிய தேசிய நில நிதி கூட்டுறவு சங்கம் 63–ஆம் ஆண்டை எட்டுகிறது

## முனைவர் மணிமாறன்-டான்ஶ்ரீ குமரன் வாழ்த்து


**கோ**லாலம்பூர், மே 14:

நாடு விடுதலை அடைந்த நேரத்தில் தோட்டத் துண்டாடல் என்னும் சிக்கலாலும் தோட்ட முதலாளிகள் மாறிக் கொண்டிருந்ததாலும் வேலை இழப்பு, குடியிருப்பு சிக்கல் உள்ளிட்ட பல்வேறு இன்னல்களுக்கு ஆளான தோட்டப் பாட்டாளிகளின் நலம் கருதி 1960 மேத் திங்கள் 14-ஆம் நாளில் உருவாக்கப்பட்டதுதான் மலேசிய இந்தியர்களின், குறிப்பாக தமிழர்களின் பெருமையை பறைசாற்றும் தேசிய நில நிதி கூட்டுறவு சங்கம் என்று மலாயாப் பல்கலைக்கழக தமிழாய்வுப் பிரிவின் தலைவர் முனைவர் மணிமாறன் தெரிவிக்கிறார்.

இந்தக் கூட்டுறவு சங்கத்திற்கு நல்லாரும் வல்லாருமாகிய டான்ஶ்ரீ டத்தோ கே.ஆர். சோமசுந்தரம் அவர்கள் தலைமை வகிப்பது முதல் சிறப்பு. அவரின் சிந்தனைக்கேற்ற செயல்மறவாகத் திகழ்பவரும் கூட்டுறவு சங்கத்தின்
தலைமை நிர்வாக இயக்குநருமான டத்தோ பா.சகாதேவன் அவர்கள் அடுத்தச் சிறப்பு.

இதன் முதல் (ஸ்தாபக) தலைவராக துன் வீ.தி.சம்பந்தனும் துணைத் தலைவராக டான்ஶ்ரீ ப.மாணிக்கவாசகமும் செயலாளராக கோவிந்தசாமியும் பொறுப்பு ஏற்றிருந்த தருணத்தில் கூட்டுறவு சங்கம் முதன்முதலில் புக்கிட் சீடிம் தோட்டத்தை வாங்கியபோதே அதற்கு அடித்தளமாக விளங்கியவர் டான்ஶ்ரீ கே.ஆர்.சோமசுந்தரம் அவர்கள்.

தொடக்கத்தில் தடுமாற்றம் கண்டாலும், தற்பொழுது நாட்டில் உள்ள கூட்டுறவு அமைப்புகளுக்கே முன்மாதிரியாக இவ்வமைப்பு திகழ்கின்றது.



ஒரு கூட்டுறவு சங்கம் என்ற அடிப்படையில் தன்னுடைய உறுப்பினர்களுக்கு ஏராளமான சமூக நலச் சலுகையுடன் உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு கல்வி அனுகூலத்தை அள்ளி வழங்குவதுடன், இந்த நாட்டில் தமிழ் வளர்ச்சியையும் தமிழ் எழுத்தாளர்களின் ஊக்குவிப்பையும் இலக்காகக் கொண்டு 30 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ் இலக்கியப் போட்டியையும் தொய்வின்றி நடத்தி வருகிறது இச்சங்கம்.

அத்துடன் கடந்த பத்து ஆண்டுகளாக ஈராண்டுகளுக்கு ஒரு முறை, பன்னாட்டு புத்தகப் பரிசுப் போட்டி நடத்தப்பட்டு அதில் வெற்றி பெறுபவர்களுக்கு 10,000 அமெரிக்க டாலர் பரிசு அளிக்கப்படுகிறது. தமிழ் இலக்கியப் போட்டியைப் பொறுத்தமட்டில், உலக அளவில் இதுதான் அதி-கமான பரிசுத் தொகையைக் கொண்டது. கொரோனா தாக்கத்தினால் உலகமே தேக்கம் கண்டிருந்தபோதும் 2020-இல் 5-ஆவது பன்னாட்டு புத்தகப் பரிசுப் போட்டியை நிகழ்த்திவிட்டு, இப்போது 6-ஆவது பன்னாட்டு புத்தகப் பரிசுப் போட்டியில் முழுமையாக ஈடுபட்டு வருகிறது தேசிய நில நிதி கூட்டுறவு சங்கம்.

இதற்காக, வெ.10 கோடி முதலீட்டுடன் டான்ஸ்ரீ சோமா மொழி-இலக்கிய அறவாரியம் என்ற பெயரில் தனி அறவாரியம் அமைத்திருப்பது இன்னும் சிறப்பு.

பன்னாட்டுப் புத்தகப் பரிசுப் போட்டியில் தொடர்ந்து வெளிநாடுவாழ் தமிழர்கள் வெற்றிபெறும் சூழல் எழலாம் என்பதைக் கருத்தில் கொண்டு, உள்நாட்டு எழுத்தாளர்களும் பயனடையும் வண்ணம், பன்னாட்டு புத்தகப் பரிசுப் போட்டிடன் மலேசியப் புத்தகப் பரிசுப் போட்டியையும் இணைத்து இந்த அறவாரியம் நடத்துகிறது. இரு போட்டிகளிலும் மலேசியத் தமிழ் எழுத்தாளர்கள் பங்கு கொள்ளும் வாய்ப்பும் அளிக்கப்படுவது, இந்த நாட்டில் தமிழ் வளர்ச்சிக்காக கூட்டுறவு சங்கம் எந்த அளவுக்கு பாடாற்றுகிறது என்பதற்கு இவை யாவும் தக்க சான்றாகும்.

அதைப்போல மலேசிய இந்தியர்களின் கலை-பண்பாட்டு-இசைத் துறை வளரவும் அதற்காக தனியாக அமைக்கப்பட்டுள்ள டான்ஶ்ரீ கே.ஆர். சோமா கலை பண்பாட்டு வாரியத்தின் மூலம் நாட்டிய, நாடக, இசைக் கலை வளர்ச்சி மேம்பாட்டுக்காக பாடுபட்டு வருகிறது இந்தச் சங்கம்.

இத்தனைப் பெரிய அளவில் அருந்தொண்டாற்றி வரும் கூட்டுறவு சங்கத்தைப் பெற்றிருப்பதற்கு மலேசிய இந்திய சமுதாயம், குறிப்பாக, தமிழ்க் குலம் எஞ்ஞான்றும் நன்றி பாராட்ட வேண்டும் என்று தெரிவித்த முனைவர் மணிமாறன், அண்மையில்கூட மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் பிரிவில் உயர்க்கல்வி மேற்கொள்ளும் நலிந்த குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கி செய்த உதவிக்கு மாணவர்களின் சார்பிலும் துறை சார்பிலும் கூட்டுறவு சங்கத் தலைவர்
டான்ஶ்ரீ கே.ஆர். சோமசுந்தரம் அவர்களுக்கும் அதன் நிருவாகச் செயலா-ளர் டத்தோ பா.சகாதேவன் அவர்களுக்கும் தனிப்பட்ட முறையில் நன்றி தெரிவிப்பதாகவும் சொன்னார்.

தோட்டப் பாட்டாளிகளின் நலனை கருத்தில் கொண்டு தொடங்கப்பட்ட கூட்டுறவு சங்கத்தின் தலைவராக டான்ஶ்ரீ கே.ஆர். சோமசுந்தரம் அவர்கள் வாய்த்தது, மலேசியத் தமிழ்மக்கள் பெற்ற பெரும்பேறு என்று முன்னாள் துணை அமைச்சரும் மஇகா பேராக் மாநிலத் தலைவரும் கூட்டுறவு சங்க மொழி-இலக்கிய அறங்காவலர்களில் ஒரு-வருமான டான்ஶ்ரீ க.குமரன் தெரிவித்தார்.



கல்வியில் உலக அளவில் புகழ்பெற்ற ஹாவர்ட் பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை அமைந்தபோது, அதற்காக அரும்பாடாற்றிய அமெரிக்கவாழ் தமிழ்ப் பற்றாளர்கள்-தமிழக அரசுடன் சேர்ந்து கூட்டுறவு சங்கத்தின் சார்பில் ஒரு கோடி ரூபாய் கொடை அளித்தவர் டான்ஶ்ரீ கே.ஆர். சோமசுந்தரம் என்று டான்ஸ்ரீ குமரன் நினைவு கூர்ந்தார்.


இவ்வாறு கல்வி, இலக்கியம், கலை, ஆன்மிகம் என்றெல்லாம் கடமையாற்றிவரும் தேசிய நில நிதி கூட்டுறவு சங்கம், இந்த நாட்டில் முதன் முறையாக வீட்டுடைமைத் திட்டத்தை உருவாக்கியது என்பது இன்னும் குறிப்பிடத்தக்கது.

கூட்டுறவு சங்கம் முதன் முதலில் வாங்கிய புக்கிட் சீடிம் தோட்டத்தில் தன் சொந்த பாட்டாளிகளின் நலனை கருத்திற் கொண்டு மலிவான விலையில் நடைமுறைப்படுத்திய இந்த வீட்டுடமைத் திட்டம்தான் நாட்டில் உருவான முதல் வீட்டுடைமைத் திட்டமாகும். அரசாங்கத்திற்கே முன்மாதிரியாகப் பார்க்கப்பட்டது இந்த வீட்டுடைத் திட்டம்.

61 ஆயிரத்திற்கும் அதிகமான அங்கத்தினர்களைக் கொண்டுள்ள கூட்டுறவு சங்கம், தான் அடையும் உபரி இலாபத்தை உறுப்பினர்களுக்கு பகிர்ந்து அளிப்பதை முக்கியக் கடமையாகக் கொண்டுள்ளது.

கூட்டுறவு சங்க முதல் தலைவர், துன் வீ.தி.சம்பந்தன் பிறந்த நாளை ஆண்டுதோறும் கொண்டாடிவரும் கூட்டுறவு சங்கம், அதை கல்வி மறுமலர்ச்சிக்கு உரிய விழாவாக அனுசரித்து வருகிறது. அதன் அடிப்படையில், மலேசி-யக்
கல்விச் சான்றிதழ் (எஸ்பிஎம்), மலேசிய உயர்க் கல்விச் சான்றிதழ் (எஸ்டிபிஎம்) தேர்வுகளில் சிறந்த அடைவு நிலையுடன் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு கல்வி ஊக்குவிப்பு நிதியுடன் தங்கப் பதக்கமும் வழங்கி சிறப்பித்து வருகிறது.

ஒரு கூட்டுறவு சங்கம் தன்னையும் செம்மையாக நிலைநிருத்திக் கொண்டு, இப்படி யெல்லாம் இலக்கியப் பணி, கல்விப் பணி, கலை வளர்ச்சி, சமூகப் பணி என்று செயல்பட முடிகிறது என்றால், அதற்கெல்லாம் இந்த சங்கத்திற்கு வாய்த்த தகுதிசால் தலைமைதான் காரணம் என்பதில் கடுகளவும் மிகையில்லை என்று குமரன் குறிப்பிடுகிறார்.



இந்த நாட்டின் மையப் பகுதியான கிள்ளான் பள்ளத்தாக்கில் நடைபெறும்
பெரும்பாலான இலக்கிய நிகழ்ச்சிகளுக்கும் நூல் வெளியீட்டு நிகழ்ச்சிகளுக்கும் கலை நிகழ்ச்சிகளுக்கும் மிகக் குறைந்த கட்டணத்தில் அல்லது இலவசமாக துன் சம்பந்தன்
மாளிகையில் அமைந்துள்ள டான்ஶ்ரீ டத்தோ கே.ஆர். சோமா அரங்கத்தை வழங்கி, நிகழ்ச்சிப் படைப்பாளர்களுக்கு உற்றுழி உதவி வருவது கூட்டுறவு சங்கத்தின் இன்னொரு சிறப்பு.

இவற்றுக்கும் மேலாக, ஆயிரக்
கணக்கான மக்களுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலை வாய்ப்பை அளித்துவரும் இந்தச் சங்கம் ஒரு வேலை வாய்ப்பு மையமாகவும் விளங்குகிறது.

இந்த நாட்டில் தமிழ் எழுத்து பொறிக்கப்பட்ட உயரமான ஒரேக் கட்டடத்தைக் கொண்டிருப்பதுடன் இந்திய சமுதாயத்தின் பெருமையைப் பறைசாற்றுவதும் தேசிய நில நிதி கூட்டுறவு சங்கம்தான்.

தொழில்முனைவர்களுக்கு அவர்களின் தகுதி, அடைமான சொத்து ஆகியவற்றின் அடிப்படையில் 5 ஆயிரம் முதல் 5 இலட்ச வெள்ளி வரை 6 சதவீத வட்டியுடன் கடன் வசதியும் வழங்கப்படுகிறது.

அதைப்போல தன் உறுப்பினர்கள் வீட்டுடைமையாளராக உருமாற வேண்டும் என்னும் பரந்த நோக்கில், முதல் முறையாக வீடு வாங்க முனைவோருக்கு 4.55 சதவிகித வட்டியுடன் தகுதிக்கேற்ப 3 இலட்ச வெள்ளிவரை கடன் வசதியும் அளிக்கப்படுகிறது. உறுப்பினர்களின் பிள்ளைகள் ஆதரவற்ற நிலைக்கு ஆளானால், அவர்களின் கல்விச் செலவிற்காக 18 வயது வரை மாதந்தோறும் 1,000 வெள்ளி அளவிற்கு கூட்டுறவு சங்கம் வழங்குகிறது.



இவற்றுக்கிடையே, ஆன்மிக சேவையையும் மேற்கொள்வது, கூட்டுறவு சங்கத்தின் இன்னொரு சிறப்பு. கூட்டுறவு சங்க நிர்வாகத்தின்கீழ் உள்ள தோட்டங்களில் ஆலயங்கள் உருவாக்கப்பட்டு, அந்தந்தத் தோட்டங்களில் வாழும் பாட்டாளுக்கான ஆன்மிக பணியை கூட்டுறவு சங்கம் ஆற்றி
வருகிறது என்று 2022 மே 14-இல் கூட்டுறவு சங்கம் 63-ஆவது ஆண்டை எட்டுவதன் தொடர்பில் டான்ஶ்ரீ க.குமரன் தன் எண்ண வோட்டத்தைப் பகிர்ந்து கொண்டார்.

***நக்கீரன்*** - *Nakkeeran 013-244 36 24*


**ONTARIO SENIOR TAMILS BENEVOLENT ASSOCIATION - (OSTBA)**
**EST. 2012. REG: NOT FOR PROFIT ORGANIZATION #1866873, ONTARIO, CANADA**

**Annual General Meeting**
**of the Ontario Senior Tamils Benevolent Association (OSTBA) will be held on Wednesday June 22,2022 from 9.30 am to 4.00 pm.**
**VENUE: Mississauga Valley Community Centre, (Shed A)**
**1275 Mississauga Valley Blvd Mississauga, ON L5A 3R8**

Agenda
1. Registration of Participants – Members of Good Standing
2. National Anthem
3. Thamil Thai Vaalthu
4. A Minute of Silence in memory of Deceased Members
5. President's Address
6. Welcoming New Members
7. Minutes of the AGM held on August 28,2021
8. Filling of vacant positions in the Board of Trustees
9. Audited Financial Statements -April 01.2021 -March31.2022
10. Vote of Thanks
11. A.O.B

**Breakfast and Lunch will be prepared on site. All are kindly requested to follow instructions regarding wearing Mask.**

Tel: 647 795 0504
Email: ostba2019@gmail.com
Web:ostba.ca

Mailing Address: OSTBA, P.O.BOX 48068, Mississauga, ON. L5A 4G8 (Dundas & Sheppard Intersection)

Mrs.T Suppuladchumy
Secretary (OSTBA)
Date : May 18,2022

Mr.S.Arianayagam
President (OSTBA)
Date: May 18.2022


30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு
பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்
ஸ்காபுறோ
சங்கர் அன் கோ
இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்
தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.
Summer Special : கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள், மரக்கறி விதைகள் இன்னும் பல...
உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்
யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்
மண்சட்டிகள், மட்பானைகள், மண்அடுப்புக்கள், மண்கூசாக்கள், மின் தேங்காய் துருவி அனைத்தும் இங்கு கிடைக்கும்.
இல்லத்தரசிகளின் சமையலறைக்குத் தேவையான Rice Cookers, Grinding Machines, Rotty Makers, Sumeet, Preeti, Premier, Chef Mastrer Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துள்ளோம். மலிவான விலைகளில் பெற்றுக் கொள்ளுங்கள்.
Tasty தமிழா
Tasty Tamila தயாரிப்புகள் இப்போது சங்கர் அன் கோவில் கிடைக்கும்.
பனங்கருப்பட்டி
தேன் நெல்லி
காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்
SHANKAR & CO
2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)

# நெடுமரமான நெடுமாறன்! காவி ஆனந்தனான காசி ஆனந்தன்!

மலேசிய மடல்

**கோ**லாலம்பூர், மே 16:

ஆர்எஸ்எஸ் கனவு காணும் அகன்ற பாரதம் கலைந்து விட்டாலும் இருக்கின்ற இந்தியாவைக் கொண்டு ஒடுங்கிய பாரதத்தையாவது அமைத்துவிட வேண்டும் என்னும் துடிப்புடன் செயல்படுகிறது பாஜக.

ஆர்எஸ்எஸ் அமைப்பின் அரசியல் கரமாக விளங்கும் பாஜக-வின் குத்தீட்டியாக இருக்கும் மோடியும், இந்தியாவை இந்து சாம்ராஜியமாக உருவாக்கும் பணியில் சளைக்காமல் ஈடுபட்டு வருகிறார்.

இதற்குத் தடையாக இருக்கின்ற தமிழ் நாட்டையும் தமிழ் நாட்டில் கொளு கொண்டிருக்கும் திராவிட சித்தாந்தத்தையும் எப்படியாவது சிதைக்க வேண்டும் என்பதில் மோடி காட்டும் ஆவேசம் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

இதற்காகத் திட்டமிட்டு வட இந்தியர்களை தமிழ் நாடு முழுவதிலும் குடியமர்த்தும் குயுக்தி வேலையும் 20 ஆண்டுகளாகத் தொடர்கிறது.

இதற்கிடையில், தமிழ் நாட்டின் கல்வி வளர்ச்சியை சிதைக்க வேண்டும் தொழில் வளர்ச்சியை முடக்க வேண்டும் தமிழ் நாட்டு மாணவர்களின் மருத்துவக் கல்வி வாய்ப்பில் முட்டுக் கட்டையை ஏற்படுத்தி, மருத்துவக் கட்டமைப்பை உருகுலைக்க வேண்டும்

மீனவர்களில் வாழ்வாதாரத்தைச் சிதைத்து தமிழக கடற்கரை முழுவதிலும் இருந்து அவர்களை வெளியேற்றிவிட்டு, அந்தப் பகுதிகளை ஆக்கிரமிக்க வேண்டும் தமிழ் நாட்டில் இந்தியைத் திணித்து, தமிழ் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை இட வேண்டும்.

தமிழகத்தில் உள்ள மத்திய அரசு நிறுவனங்களில் வட இந்தியர்களை பேரளவில் நியமித்து, தமிழ் இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பைத் தட்டிப் பறிக்க வேண்டும்.

விவசாய நிலங்களைப் பாழ்படுத்தி, வேளாண் தொழில் கட்டமைப்பை அடியற்றுப்போகச் செய்யவேண்டும்

இதற்கெல்லாம் தோதாக ஆளுநர் ஆர்.என். ரவி மூலம், தற்போதைய தமிழ் நாட்டு அரசின் நிருவாகத்தை முடக்க வேண்டும் என்ற முனைப்பில் காரியமாற்றிவரும் மோடியைப் பார்த்து, மிகச் சிறந்த ராஜ தந்திரி என்று தமிழ்த் தேசிய அடையாளமாக விளங்கிய பழ. நெடுமாறன் சொல்ல வேண்டிய அவசியம் என்ன?

அதுவும், ஈழப் படுகொலை குறித்த முள்ளி வாய்க்கால் நினைவேந்தல் நிகழ்ச்சியில், இன்னுங்குறிப்பாக ஆர்எஸ்எஸ்-பாஜக ஏற்பாடு செய்த மேடையில் நெடுமாறன் இப்படி பேச வேண்டிய தேவை ஏன் எழுந்தது.

இன்னும் 25 ஆண்டுகளில் இந்தியா தானாக சிதறிவிடும் அதற்கான பிரிவினை வேலைகளை ஆர்எஸ்எஸ்-பாஜக கூட்டணி ஆக்ரோசமாக செய்கின்றன் ஒரு வகையில் இது நல்லதுதான்.

காங்கிரஸ் அதற்கான வேலைகளை ஏற்கனவே நிறைவேற்றிவிட்ட நிலையில், தற்பொழுது பாஜக, அந்த வேலையை தீவிரமாக மேற்கொண்டு வருகிறது என்று 2013 அக்டோபரில் என்னிடம் நேரில் சொன்னவர், இதே பழனியப்பன் நெடுமாறன்.

தஞ்சையில் அமைந்துள்ள முள்ளி வாய்க்கால் நினைவிடத்தில்தான் இந்தக் கருத்தை நெடுமாறன் சொன்னார். இருந்தாலும், நெடுமாறன்மீது ஒரு மெல்லிய ஐய ரேகை தொடர்ந்து வண்ணம்தான் இருந்தது.

கலைஞர் மு. கருணாநிதி என்ன சொன்னாலும் எதைச் செய்தாலும் குற்றம் காண்பதில் குறியாக இருந்த நெடுமாறன், ஜெயலலிதாவை ஏதோவொரு வகையில் ஆதரித்த வண்ணமாக அவர் தொடர்ந்ததால் அவர்மீது எழுந்த சந்தேகம் தணியாமலேயே இருந்தது.

இப்பொழுது, காசி ஆனந்தன், திருச்சி வேலுச்சாமி போன்றோரை மேடையில் வைத்துக் கொண்டே மோடியையும் தமிழக பாஜக தலைவர் அண்ணாமலையையும் புகழ்ந்து பேச வேண்டிய நெருக்கடி நெடுமாறனுக்கு ஏன் ஏற்பட்டுள்ளது.

ஏதோ நடக்கிறது.

முதலில், நெடுமாறன் அந்த மேடையில் ஏறி இருக்கக்கூடாது.

வெறும் மத-சாதி அரசியலால் தமிழ் நாட்டில் காலூன்ற முடியாது என்பதை உணர்ந்து கொண்ட பாஜக, ஏதேதோ செய்துப் பார்ப்பதன் ஒரு கூறாகத்தான் இதையும் பார்க்க வேண்டி உள்ளது.

மலேசியாவில்கூட இதுவரை தமிழ் இலக்கிய வட்டத்தில் காணப் படாத முகத்தினர் எல்லாம் பாரதிக்கும் கண்ண தாசனுக்கும் விழா எடுப்பதைக் காணமுடிகிறது. இப்பொழுது, கடைசியாக ஈழத் தமிழர் விவகாரத்தையும் கையில் எடுக்கின்றனர்.

இருந்தாலும் காசி ஆனந்தன் காவி ஆனந்தனாக மாறுவதும் நெடுமாறன் நெடுமரமாக மாறுவதும் தமிழினம் சற்றும் எதிர்பாராதது.

உலகத் தமிழர்களே விழிப்படையுங்கள்! நம்மைச் சுற்றி ஏதேதோ வேகவேகமாக அரங்கேறுகிறது.

**நக்கீரன்** - Nakkeeran 013-244 36 24


MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.

தமிழில் தொடர்புகளுக்கு:

வசந்தி சிவராஜா - 416-616-3077




ALL DEBT SOLUTIONS C R PLAN

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

# இவ்வார ராசிபலன்

**20-05-2022 வெள்ளி தொடக்கம் 26-05-2022 வியாழன் வரையும்**




**மேஷம்:** வெற்றிச் செய்திகளை தொட்டு ரசிக்கும் வாரம். விவசாயம் பலன் தரும். பணப்பற்றாக்குறை நீங்கும். கல்வியில் கவனம் தேவை. போதிய தனரவு உண்டு. பங்குச்சந்தையில் கவனம் தேவை. பயணத்தால் அனுகூலம் உண்டு. ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. உறவுகளின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். நண்பர்களால் நன்மை உண்டு. விவேகம் வெற்றித்தரும். குடும்ப ஒற்றுமை மேம்படும். தெளிவான முடிவுகள் உதயமாகும். எதிர்காலத் தேவைகள் பூர்த்தியாகும். எண்ணங்கள் ஏற்றம் தரும். பகை மறையும். கணவன், மனைவி உறவு தித்திக்கும். சுபகாரியம் இல்லத்தில் இனிதே நடந்தேறும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். பண நடமாட்டம் கூடும். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். உல்லாசப் பயணம் இனிக்கும். புதிய வேலை முயற்சி பலிதமாகும். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்கள் நலம் தரும். இல்லத்தில் மகிழ்ச்சி கிட்டும். கணவன், மனைவி உறவில் களிப்புறவு உண்டாகும். பணப்புழக்கம் சரளமாகும். காரியம் கை கூடும். மூத்தோர்கள் மனக்குறை அகலும். சாதித்துக் காட்டும் சாதனையான காலம். மன அமைதி கிட்டும். பொருளாதாரம் ஏற்றம் பெருகும். முகப்பொலிவு கூடும். உடல்நலம் சிறக்கும். புதிய தொழில் முயற்சியை தள்ளிப்போடுங்கள். திருமணமாகாத மங்கையருக்கு திருமண பாக்கியம் கைக்கூடும். கொடுக்கல், வாங்கலில் சுமூக நிலை ஏற்படும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றியாகும். செய்த்தொழில் சிறக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பிரபஞ்ச கடவுள், அதிர்ஷ்ட எண்: 3,2,9,7
அதிர்ஷ்ட நிறம்: பொன்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,R




**ரிஷபம்:** பிதா வழி உறவுகளால் பெருமை சேரும் வாரம். ஆதாயம் பெருகும். கலைஞர்களுக்கு ஒப்பந்தங்கள் குவியும். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சி கிட்டும். ஒரு சிலருக்கு கவுரவப் பதவிகள் தேடி வரும். ஆன்மீக வாதிகள் உத்தியோகஸ்தர்கள் ஏற்றம் பெறுவார்கள். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை வளரும். தன்னம்பிக்கையும் துணிச்சலும் மேலோங்கும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். மனைவியின் பிரார்த்தனை மாற்றம் தரும். வாழ்த்துக்கள் கிடைக்கும். செய்த்தொழில் சிறப்படையும். பண நடமாட்டம் கூடும். நீண்ட நாளைய நோய் விலகும். வெளிநாட்டு ஆதாயம் கிட்டும். கலைஞர்களுக்கு ஒப்பந்தம் குவியும். அன்யோன்யம் அதிகரிக்கும். நட்பு வட்டம் விரிவடையும். இல்வாழ்வில் இனிமை கூடும். தென்றல் வீசும். எதிர்ப்புக்கள் விலகும். நோய் அகலும். செல்வாக்கு உயரும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். பெண்களுக்கு மன அமைதியுயம், மகிழ்ச்சியும் கிட்டும். மாங்கல்ய நமஸ்காரம் மனோ தைரியம் கொடுக்கும். பிரார்தனை பலன் கொடுக்கும். வெளிவட்டாரப் பழக்கம் நலம் தரும். பணப்புழக்கம் சரளமாகும். கடன்சுமை குறையும். நலமே விளையும் இனிய வாரமாகும். கன்னிப்பெண்களின் விருப்பம் ஈடேறும். சுபகாரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். நாவடக்கம் தேவை. புதிய வேலை முயற்சி பலிதமாகும். கலைஞர்களுக்குத் திருப்புமுனையான காலம்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பொன்காளியம்மன், அதிர்ஷ்ட எண்: 2,4,9,6
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,B




**மிதுனம்:** வீண் வம்புகள் விலகும் வாரம். உன்னதமான காலம். பங்குச்சந்தை லாபம் தரும். புதிய முயற்சிகள் தாமதமாகும். உறவினர்களால் சஞ்சலம் ஏற்படும். உடல்நலனில் அக்கறை தேவை. செல்வாக்கு உயரும். மாணவர்களுக்கு எச்சரிக்கை தேவை. நல்ல செய்திகள் நாடி வரும். முயற்சிகள் வளர்ச்சி அடையும். கெளரவத்தில் கவனம் தேவை. கலக்கமான மனநிலை காணப்படும். அனுகூலம் தரும். பகைவர் பணிந்து நிற்பர். திட்டமிட்ட காரியம் வெற்றி பெறும். எண்ணம் வண்ணமயமாகும். எதிர்ப்புகள் தவிடுப்பொடியாகும். நண்பர்களால் மதிப்பு உயரும். அதிகாரியின் பாராட்டு கிடைக்கும். பணியில் இடமாற்றம் ஏற்படும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. வாழ்க்கை தரம் உயரும். உதவிகள் குவியும். நீண்ட கால எண்ணங்கள் நிறைவேறும். அத்தியாவசிய தேவைகள் பூர்த்தியாகும். போதிய தனவரவு இருக்கும். வீண் வம்பு விலகும். மாலை நேரத்தில் கவனம் தேவை. பொறுப்புக்கள் கூடும். சேமிப்பு அதிகமாகும். புதிய சிந்தனை உதயமாகும். அணிகலன் சேர்க்கை ஏற்படும். கலக்கமான மனநிலை காணப்படும். கண்ணாடிப் பொருட்கள் சேதம் ஏற்படும். பயணம் அனுகூலம் தரும். உயர்வுகள் தாமதமாகும். கூட்டுத்தொழில் லாபம் தரும். பதற்றம் குறையும். தனசேர்க்கை உண்டு. மனநிம்மதி குறையும். அலைச்சல் அதிகரிக்கும். புதிய முயற்சியில் ஈடுபடலாம். வாகனச் செலவு ஏற்படும். பணியில் பாராட்டு கிடைக்கும். தான தர்மங்கள் பலன் தரும். அத்தியாவசிய செலவுகள் ஏற்படும். நண்பகலில் நல்ல தகவல் வரும். நன்மதிப்பு கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ எல்லையம்மன், அதிர்ஷ்ட எண்: 8,2,1,4
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,S




**கடகம்:** உத்தியோக வாய்ப்பு கிட்டும் வாரம். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். பூமியால் நன்மை உண்டு. ஆரோக்கியம் சீராக இருக்கும். முயற்சிகள் பலன் கொடுக்கும். உடன்பிறப்புக்களால் ஆதாயம் கிடைக்கும். வழக்குகள் தாமதமாகும். மனைவியால் நன்மை உண்டு. மற்றவர்களால் தொல்லை உண்டு. நினைவாற்றல் பெருகும். உடல்நலனில் அக்கறை தேவை. தொட்ட காரியம் ஜெயமாகும். பொருளாதார நிலை உயரும். மங்கையருக்கு திருமணம் கைகூடும். மனக்குழப்பங்கள் தீரும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். புதிய கடன் வாங்க நேரிடும். தேகப்பலம் கூடும். சுமூகமான சூழ்நிலை பெருகும். இல்லத்தில் அமைதி கூடும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். மனச்சுமை குறையும். பணப்புழக்கம் சரளமாகும். கடன்சுமை குறையும். கன்னிப்பெண்களின் விருப்பம் ஈடேறும். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சி கிட்டும். கலைஞர்களுக்கு ஒப்பந்தங்கள் குவியும். செய்த்தொழில் சிறப்படையும். தன்னம்பிக்கையும் துணிச்சலும் மேலோங்கும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். வேண்டும் வரம் கிட்டும். தாய், தந்தை உதவி உண்டு. ஒரு சிலருக்கு கவுரவப் பதவிகள் தேடி வரும். உத்தியோகஸ்தர்கள் ஏற்றம் பெறுவார்கள். புதிய வாகனங்களால் முதலீடு உண்டாகும். செய்த்தொழிலில் முன்னேற்றம் உண்டு. சேமிப்பு வளரும். பங்குச்சந்தை லாபம் தரும். உத்தியோகப் பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். பழைய பாக்கிகள் வசூலாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பாலமுனீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 6,9,1,3
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,V




**சிம்மம்:** விரும்பிய பொருள் சேரும் வாரம். விலையுயர்ந்த பொருட்களில் முதலீடு உண்டாகும். பொருளாதாரம் உயரும். தொலைதூரத் தொடர்பு லாபம் தரும். பாக்கெட்டில் காசும் கரையாது. தொட்டது துலங்கும். நினைத்தது நடக்கும். இனிக்கும் வாரம் தான். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். திட்டமிட்ட காரியங்கள் ஒன்றிரண்டு நடந்தேறும். நலம் காணும் தருணம். வெற்றிப் பாதையில் அடி எடுத்து வைப்பீர்கள். நினைத்ததை சாதித்துக் காட்டும் சாதனையான காலம். பணப்புழக்கம் சீராக இருந்து வரும். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை வளரும். கடன் கச்சைகள் தீரும். இல்லத்தில் மகிழ்ச்சியும், மன அமைதியும் கிட்டும். திருமணமாகாத மங்கையருக்கு திருமண பாக்கியம் கைகூடும்.



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
**Dr. K. RAM.Ph.D (USA)**
தொடர்புக்கு: **0091-9840160068 / 9940431377**

தெம்பும், தைரியமும் கூடும். கொடுக்கல், வாங்கலில் சுமூக நிலை ஏற்படும். உற்சாகத்தோடு செயல்படுவீர்கள். வாழ்க்கைத்துணையால் வளம் பெருகும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். ஏற்றம் அதிகரிக்கும். எதிலும் வெற்றிக் கிட்டும். பணம் புரளும். திருமண தீபம் சுடர்விடும். அணிமணிகள் சேரும். விரும்பியது நிறைவேறும். காதலர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும். பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். அரசு வழியில் கவனம் தேவை. உறவினர்களின் ஒத்துழைப்பு கிட்டும். செயல்களில் துணிவு கூடும். திருமண முயற்சி பலன் தரும். பெற்றோர் உடல்நிலையில் கவனம் தேவை. ஏற்றுமதி தொழிலில் லாபம் கிடைக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பாதவிநாயகர், அதிர்ஷ்ட எண்: 2,9,7,6
அதிர்ஷ்ட நிறம்: பொன் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,U




**கன்னி:** வீண் செலவுகள் அதிகரிக்கும் வாரம். பழைய பகை தீரும். பொதுப்பணியில் ஆர்வம் கூடும். விளையாட்டுத்துறையில் வெகுமதி கூடும். காதலர்கள் தம்பதியாவார்கள். கல்வியில் கவனம் தேவை. தர்மச் சிந்தனை மேலோங்கும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. வாழ்த்துச் செய்திகள் வரும். பெற்றோர்களால் பாராட்டுப் பெறுவீர்கள். மறைமுக எதிர்ப்புக்கள் மாறும். உறவினர் வருகை உண்டு. பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். பணவரவு திருப்தி தரும். உடன் பிறப்புக்களால் உதவி கிடைக்கும். மதிப்பும் மரியாதையும் உயரும். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். புகழ் கூடும். தெய்வ நம்பிக்கை கூடும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். இல்லத்தில் மேன்மை ஏற்படும். சூழ்நிலைகள் அதிகமாகும். புதிய பொருள் சேர்க்கை ஏற்படும். அந்நிய தேச பயணம் உண்டு. இரும்புத் தொழில் ஏற்றம் தரும். ஆபரணச் சேர்க்கை உண்டு. புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். மங்கள நிகழ்ச்சிகள் நடைபெறும். பணமும், பாராட்டும் சேரும். அரசு வகையில் ஆதாயம் கிட்டும். ஆசைகள் நிறைவேறும். வரன் வாயில் தேடி வரும். வியாபாரத்தில் வேகம் கூடும் காலம். உத்தியோக உயர்வு தாமதம் ஆகும். கணவன், மனைவி அன்யோன்யம் குறையும். புதிய சொத்துக்கள் சேரும். விலகி சென்றவர் விரும்பி வருவர். திருமணப் பேச்சு முடிவிற்கு வரும். வரவு திருப்தி தரும். மருத்துவச் செலவுகள் குறையும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பல்லவ கணபதி, அதிர்ஷ்ட எண்: 7,1,2,4
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,Q




**துலாம்:** வெகுமதி தேடி வரும் வாரம். திருப்தி ஏற்படும். உறவினர் வருகையால் கலகலப்புக் குறையும். செயல்பாட்டில் கவனம் தேவை. மதிநுட்பம் மாபெரும் வெற்றித் தரும். நட்பு வட்டம் விரிவடையும். தாராளமான தனவரவு உண்டு. எதிர்கால சிந்தனை ஏற்றம் பெறும். தனவரவு உண்டு. கல்வியில் பெருமை சேரும். பாகப்பிரிவினை சுமூகமாகும். ஆடம்பரச் செலவுகள் அதிகரிக்கும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். இலக்கிய ஆர்வம் கூடும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். பணவரவு திருப்தி தரும். நீண்ட நாளைய நோய் விலகும். தொழில்முயற்சி வெற்றி தரும். புதிய முயற்சி கை கூடும். நண்பர்கள் உதவி கிட்டும். குடும்பத்தில் அமைதி உண்டு. உடல்நலனில் அக்கறை தேவை. சுபகாரியம் கைகூடும். ஞாபகத்திறன் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. வியாபாரம் வெற்றி தரும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். மாணவர்களுக்கு சாதகமான காலம். கலைஞர்களுக்கு புகழ் கூடும். சேமிப்பு உயரும். சொந்த பந்தங்களால் உதவி உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். அன்யோன்யம் அதிகரிக்கும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். பணவரவு சுமாராக இருக்கும். தீர்த்த யாத்திரை உண்டு. தந்தை உடல் நலனில் கவனம் தேவை. வெளியூர் பயணம் உண்டு. மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். பிள்ளைகளின் தொல்லைகள் அகலும். புதிய கடன் வாங்க நேரிடும். மாணவர்களுக்கு மகிழ்ச்சி கூடும். எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அம்மன், அதிர்ஷ்ட எண்: 9,5,7,1
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,L




**விருச்சிகம்:** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும் வாரம். பணமுயற்சி பலன் தரும். நினைத்த விஷயம் நிறைவேறும். வரவுகள் பெருகும். அன்னிய தேசப் பயணம் உண்டு. ஆபத்துக்கள் விலகும். அதிகாரம் குவியும். ஆபரணச் சேர்க்கையுண்டு. வாகன யோகம் உண்டு. வரவுகள் திருப்தி தரும். பேச்சில் கவனம் தேவை. வீடு தேடி வெற்றி வரும். வருமானம் திருப்தி தரும். வாகன மாற்றம் உண்டு. மாற்று யோசனை பயன் தரும். மாணவர்களுக்கு அக்கறை கூடும். விளையாட்டில் கவனம் தேவை. புது முயற்சிகளை தள்ளிப் போடவும். பெற்றோர் வழியில் பிரியம் கூடும். பிரியமானவர்களால் செலவு அதிகரிக்கும். யோகப் பலன் கூடும். வம்பு வழக்குகள் தீரும். எண்ணங்கள் வண்ண மயமாகும். உறவினரால் உதவி கிட்டும். அன்னதானம் ஆரோக்கியம் தரும். தனவரவுகள் பெருகும். சகோதர வழியில் சந்தோஷம் கூடும். காதலர்களுக்குள் கையிருப்பு கரையும். வியாபாரம் விருத்தியாகும். கோரிக்கைகள் நிறைவேறும். பேரியோர்களின் பாராட்டு கிடைக்கும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கூடும். தொழிலில் கவனம் தேவை. தொலைதூரப் பயணம் லாபம் தரும். நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். பணவரவு பெருகும். தாய்ப்பாசம் அதிகரிக்கும். மனை வாங்கும் யோகம் உண்டு. கல்வியில் கவனம் தேவை. முதலீடுகளால் முன்னேற்றம் உண்டு. பணப்புழக்கம் அதிகரிக்கும். மனநெருக்கடிகள் தீரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: இந்திர பகவான், அதிர்ஷ்ட எண்: 4,3,9,5
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,K




**தனுசு:** துணிவோடு செயல்படும் வாரம். திறமைகள் வெளிப்படும். வீண் வம்பு அகலும். விவேகமான பேச்சுக்களால் தொல்லைகள் அகலும். ஆரோக்கியம் சீராகும். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். மங்கள நிகழ்ச்சிகளில் இருந்து பங்கு பெறுவீர்கள். இனிய தகவல் உண்டு. வங்கி சேமிப்பு உயரும். விருந்தினர் வருகை உண்டு. பயணம் வெற்றித்தரும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். இனம் புரியா சந்தோஷம் குடிக்கொள்ளும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். மனை வாங்கும் யோகம் உண்டு. வாயில் தேடி வாய்ப்பு வரும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. பங்குத்தொழில் லாபம் தரும். உத்தியோகத்தில் உயர்வு கிட்டும். குடும்பச் சுமை கூடும். வழக்குகளில் திருப்பம் ஏற்படும். பிரச்சனைகள் முடிவுக்கு வரும். வரவுகள் மிகுதியாகும். உடல்நலம் சீராகும். மாற்று மருத்துவம் பலன் தரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிட்டும். அனுகூலச் செய்திகள் வந்து சேரும். உதவிகள் கிடைக்கும். ஆபரணப் பொருள் களவு போகும். சுபச்செய்தி தேடி வரும். நட்பு வட்டம் விரிவடையும். அலைச்சல் அதிகரிக்கும். ஊதிய உயர்வு கிட்டும். வியாபாரம் சுமாராக இருக்கும். புதிய முயற்சி பலிதமாகும். செயல்களில் நிதானம் தேவை. கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். வாகன மாற்றம் ஏற்படும். சாதகமான வாய்ப்பு அமையும். ஆண்களின் அதிகாரம் உயரும். ஏஜென்ஸி தொழில் ஏற்றம் தரும். பணிசெய்யும் இடத்தில் பாராட்டு உயரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சமுக ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 3,7,5,1
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,G

***(தொடர்ச்சி 36ம் பக்கம்)***

# "வீட்டைக்கூட அடமானம் வைத்துதான் அவனை கனடாவுக்கு அனுப்பினோம்":

## இந்திய மாணவர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து வெளியாகும் அதிர்ச்சியளிக்கும் உண்மைகள்

கனடிய செய்திகள் Canadian News




கடந்த மாதம் கனடாவில் இந்திய மாணவர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட விடயம் சர்வதேச அளவில் கவனம் ஈர்த்தது. அந்த மரணம் இறப்பின் துயரத்தை மட்டும் வெளிக்கொணராமல், பிள்ளைகளை கனடாவுக்கு கல்வி கற்பதற்காக அனுப்பும் பெற்றோர் அனுபவிக்கும் கஷ்டங்கள் குறித்த உண்மைகளையும் வெளிக்கொணர்ந்துள்ளது. கனடாவில் கல்வி கற்பதற்காக இந்தியாவிலிருந்து சென்ற கார்த்திக் வாசுதேவ் என்ற மாணவர் சென்ற மாதம் ரொரன்றோவில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

மகனை இழந்த துயரம் ஒருபுறம் இருக்க, தானும் தன் மனைவியும் தங்கள் மொத்த சேமிப்பையும் மகனுடைய கல்விக்காக செலவிட்டுவிட்டதாக தெரிவித்துள்ளார் கார்த்திக்குன் தந்தையான ஜித்தேஷ் வாசுதேவ். அத்துடன், தங்கள் வீட்டையும் அடமானம் வைத்து 50,000 டொலர்கள் கடன் வாங்கித்தான் தங்கள் மகன் கார்த்திக்கை கனடாவுக்கு தாங்கள் அனுப்பியதாக தெரிவிக்கும் ஜித்தேஷ், அந்த பணம் கார்த்திக்கினுடைய முதலாம் ஆண்டு கல்விக்கட்டணத்துக்கு மட்டுமே போதுமானதாக இருந்ததாகவும் தெரிவித்துள்ள விடயம் கவனிக்கவேண்டிய விடயமாக அமைந்துள்ளது. ஆம், கார்த்திக்கை அவரது பெற்றோர் இழந்துவிட்டார்கள். அது ஈடு செய்யமுடியாத இழப்பு. ஆனால், மகன் வெளிநாடு செல்வான், கல்வி கற்பான், வேலைக்குச் செல்வான், கடனை அடைத்துவிடலாம் என்ற நம்பிக்கையில், இருந்த சேமிப்பு எல்லாவற்றையும் செலவிட்டு, வீட்டையும் அடமானம் வைத்து அவரது பெற்றோர் வாங்கிய கடனை இனி யார் அடைப்பார்கள்.

ஏற்கனவே, கனடாவுக்குப் புலம்பெயர்ந்தோர் பலர், விலைவாசியை சமாளிக்க முடியாமல் நாடு திரும்பிக்கொண்டிருப்பதாக அதிர்ச்சியளிக்கும் தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில், கனடாவுக்கு கல்வி கற்கச் செல்லும் வெளிநாட்டு மாணவர்கள் உள்நாட்டு மாணவர்களை விட நான்கு மடங்கு அதிகக் கட்டணம் செலுத்தவேண்டியுள்ளது என அடுத்த அதிர்ச்சியளிக்கும் செய்தி வெளியாகியுள்ளது. கடந்த ஆண்டு வெளியான ஒன்ராறியோ ஆடிட்டர் ஜெனரலுடைய அறிக்கை ஒன்று, ஒன்ராறியோ கல்லூரிகள், சர்வதேச மாணவர்கள் செலுத்தும் கல்விக் கட்டணத்தை சார்ந்திருப்பதை வெளிப்படுத்தியுள்ளது. அந்த அறிக்கையில், அரசுக் கல்லூரிகளில் பயிலும் வெளிநாட்டு மாணவர்கள் 30 சதவிகிதம் மட்டுமே என்றும், ஆனாலும், கல்லூரிக்கு வந்த ஆண்டு கல்விக்கட்டணத்தில் 68 சதவிகிதத்தை அவர்கள் மட்டுமே கட்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2020ஆம் ஆண்டின் Global Affairs Canada அறிக்கையின்படி, கனடாவின் 2017, 2018ஆம் ஆண்டுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தி என அழைக்கப்படும் GDPயில் சர்வதேச மாணவர்களின் பங்களிப்பு 16.2 மற்றும் 19.7 பில்லியன் டொலர்கள் ஆகும்!

ஆக, ஒரு நல்ல எதிர்காலம் அமையும் என நம்பி கனடாவுக்கு கல்வி கற்கச் செல்லும் வெளிநாட்டு மாணவர்களில் ஒருவரான கார்த்திக்கின் குடும்பம் அவரது மரணத்தால் கதிகலங்கிப் போயிருக்கும் நிலையில், இந்த செய்தி மற்றவர்களுக்கும் ஒரு பாடமாக அமைந்துள்ளது. இந்நிலையில், தங்கள் மகனுடைய மரணத்துக்கு நீதி கிடைக்கவேண்டும் என அவரது பெற்றோர் பிராச்சாரங்களைத் துவக்கியுள்ளார்கள்.

## இவ்வார ராசிபலன்


(35ம் பக்கத் தொடர்ச்சி)




**மகரம்:** மறைமுக எதிர்ப்புக்கள் குறையும் வாரம். பெண்களுக்கு அணிகலன் சேரும். வாகனத்தில் கவனம் தேவை. எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். தொழில் லாபம் உண்டு. புதிய வேலை முயற்சி பலிதமாகும். உல்லாசப் பயணம் இனிக்கும். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். பண நடமாட்டம் கூடும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். சுபகாரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். எச்சரிக்கையோடு செயல்பட வேண்டும். நீண்ட நாளைய நோய் விலகும். பணவரவு திருப்தி தரும். மனமகிழ்ச்சி அதிகமாகும். தேக பலம் கூடும். ஞாபகத் திறமைகள் அதிகரிக்கும். சுபகாரியம் கைகூடும். உடல்நலனில் அக்கறை தேவை. குடும்பத்தில் அமைதி உண்டு. நண்பர்கள் உதவி கிட்டும். புத்தி சாதுர்யம் கூடும். பழைய பாக்கி வசூலாகும். திடீர் பயணம் உற்சாகம் தரும். பங்குச்சந்தையில் லாபம் கிடைக்கும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. பயணங்களால் பணம் கரையும். நினைத்த காரியம் நிறைவேறும். பெண்களுக்கு வேலைபளு அதிகரிக்கும். நல்லோர்களின் பாராட்டு கிடைக்கும். மனக்கசப்பு நீங்கும். புதிய தொழில் வாய்ப்புக்கள் பெருகும். அயல்நாட்டுப் பயணம் உண்டு. பிரியமானவர்களால் லாபம் அதிகரிக்கும். பெற்றோர் வழியில் பிரியம் கூடும். புதிய முயற்சிகளை தள்ளிப்போடவும். மாற்று யோசனை பயன் தரும். வாகன மாற்றம் உண்டு. வருமானம் திருப்தி தரும். வஸ்திர தானம் வளம் சேர்க்கும். மனமகிழ்ச்சி கிட்டும்.
வழிபட வேண்டிய தெய்வம்: மாசாணியம்மன், அதிர்ஷ்ட எண்: 4,1,9,3
அதிர்ஷ்ட நிறம்: ஊதா நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,Z




**கும்பம்:** எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும் வாரம். சந்தோஷம் அலைமோதும். கனிவான பேச்சு அவசியம். கலைகளில் ஆர்வம் கூடும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். மருத்துவச் செலவு குறையும். பேச்சில் நிதானம் தேவை. செயல்களில் நிதானம் தேவை. விரயங்கள் கூடும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். அலைச்சல் ஆதாயம் தரும். வளமான சிந்தனை உருவாகும். பிள்ளைகளின் தேவை பூர்த்தியாகும். வியாபாரம் திருப்தி தரும். பணியாட்கள் ஆதரவு பெருகும். மன நெருக்கடி தீரும். எண்ணங்கள் பூர்த்தியாகும். எதிர்பார்த்த வி'யம் தாமதமாகும். நல்ல செய்திகள் நாடி வரும். இடையூறு அகலும். கூட்டுப் பிரார்த்தனை நன்மை தரும். எதிரிகளின் தொல்லை குறையும். முகப்பொலிவு கூடும். திடீர் பயணம் ஏற்படும். விரயம் குறையும். சகோதர வகையில் சகாயம் கிடைக்கும். கருத்து வேறுபாடுகள் விலகும். நண்பர்கள் சந்திப்பு நன்மை பயக்கும். பெண்களால் பெருமை உண்டு. எதிர்ப்புக்கள் மாயமாய் மறையும். கணவரிடத்தில் மதிப்பு உயரும். குழப்பங்கள் அகலும். மருத்துவச்செலவு அதிகரிக்கும். இல்லத்தில் அமைதி கூடும். பெண்களுக்கு ஆபரணங்கள் சேரும். மாலை நேரத்தில் கவனம் தேவை. போதிய தனவரவு இருக்கும். அத்தியாவசிய தேவைகள் பூர்த்தியாகும். நீண்ட கால எண்ணம் நிறைவேறும். உதவிகள் குவியும். வாழ்க்கைத் தரம் உயரும். அதிகாரியின் பாராட்டு கிடைக்கும். எதிர்ப்புகள் தவிடுப்பொடியாகும். புத்தி சாதுர்யம் பெருகும். அன்னிய தேசப்பயணம் உண்டு. காதல் ஒற்றுமை அதிகரிக்கும். வழக்குகள் சாதகமாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: விருட்ஷ தேவதை, அதிர்ஷ்ட எண்: 1,7,5,4
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,U




**மீனம்:** வாழ்த்துச் செய்திகள் வரும் வாரம். சிறப்புக்கள் சேரும். புதுமையை விரும்புவீர்கள். அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. மறைமுக எதிர்ப்புகள் மாறும். உறவினர் வருகை உண்டு. புதிய நாட்டம் ஏற்படும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். வழக்குகள் சாதகமாகும். வாகன மாற்றம் உண்டு. பொது வாழ்வில் புகழ் கூடும். உடன்பிறப்புக்களின் உதவி கிடைக்கும். மதிப்பும் மரியாதையும் உயரும். வெற்றியை எட்டும் தருணம். முதலீடுகளால் முன்னேற்றம் உண்டு. பணப்புழக்கம் அதிகரிக்கும். தொல்லைகள் விலகும். வெளியூர் பயணம் வெகுமானம் சேர்க்கும். வாகனத்தால் செலவு ஏற்படும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். நீண்ட நாளைய முயற்சி நிறைவேறும். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிடைக்கும். வாயில் தேடி வாய்ப்பு வரும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. பங்குத்தொழில் லாபம் தரும். உத்தியோகத்தில் உயர்வு கிட்டும். ஆபரணத் தொழில் உயர்வு தரும். இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் மாறும். காரிய வெற்றி உண்டு. ஏற்றுமதி தொழிலில் கவனம் தேவை. பேச்சுத்திறமை அதிகரிக்கும். ஆடை, அணிகலன் சேரும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். பொறியியல் துறை லாபம் தரும். திருமண வாய்ப்புக் கூடும். உடல்நலம் திருப்தி தரும். குடும்ப ஒற்றுமை பலப்படும். பொருளாதாரம் உயரும். உதவிகள் கிட்டும். செயல் திறமை அதிகரிக்கும். எதிரிகள் பலம் குறையும். கலைத்துறையில் முன்னேற்றம் கொடுக்கும். மனைவியின் பிரார்த்தனை மாற்றத்தை தரும். மற்றவர்களால் அனுகூலம் உண்டு.
வழிபட வேண்டிய தெய்வம்: கற்பக விநாயகர், அதிர்ஷ்ட எண்: 8,5,4,1
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,J



## கடந்தவையும் கடப்பவையும் (32)

**- உமா மோகன் -**

சிவனருட்செல்வர் வீட்டில் நின்றே அங்கு
வருமவள் பாங்கைக் கண்ட போது - மனம்

பழங்கால நினைவினில் ஆழ்துபோக மீண்டும்
நிகழ்கால நிலைக்குள் இழுத்தாற்போல சேதி

'நாளை புதுப் பாடசாலை' - இது
வேளைக்கே தெரியும் எனினும் நினைவூட்டல்

கிறிஸ்தவம் பரப்பும் நோக்கில் அமைத்த
முதற்பாடசாலை அது என்பார்

அடிக்கடி பெயர்கள் பலமாறி இன்று
யூனியன் கல்லூரி ஆனது அழகாக

தெற்காசிய முதற்கலவன் பாடசாலை
என்பதாலும் ஒரு பெருமை அதற்குண்டு

மழை நாள்அன்று முதன்முதல் அங்கு
சேறான அம்மண்ணில் சப்பாத்தும் நிறம்மாற

நீட்டிற்குப் போனது நடைபாதை - ஓரத்தில்
நெட்டையான தண்டுகளை பக்கவாட்டிலும் கொண்ட

அடர்ந்து உயர்ந்த மரம் ஒன்று - அதில்
நிறைந்த அழகிய வண்ணப் பூக்கள்

கமகமக்கும் அம்மலரை முதன்முதலில்
அதிசயமாய்ப் பார்த்து நிற்க - சிரித்தபடி

'நாகலிங்கப்பூ' என்றார் கூட்டி வந்த ஆசிரியர்

வட்ட வடிவ செந்நிற ஆவுடை - அதன்
நட்ட நடுவில் ஒரு பாணலிங்கம் - அதற்கு

கவிழ்ந்து குடைபிடிக்கும் நாகம் ஒன்று
ஆவுடையைத் தாங்குவது போல - அம்மலர்

உண்மையில் அதிசயம் தான் - பூக்களிவை
காய்களாக மாறும் போதும் - அன்றைய

பெரும் குண்டுகள் போல் உருண்டும் திரண்டும்
வெடிப்பதற்கு ஆயத்தம் போலிருக்கும்

இத்தகைய அழகை தினம் தினம்
மெத்த மகிழ்வோடு இரசிக்கும்படி - அம்

மரத்தின் அருகில் கிடைத்தது வகுப்பறை
தூரத்தில் இருந்து வந்தாலும் நல்ல

துணை எனக்கிடைத்த தோழியோடு
இணைந்ததால் கழிந்தது நற்பொழுதாய் அப்பொழுதும்...

(தொடரும்)

# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**



உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**

# Carefirst Family Health Team



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION ACCREDITATION AGRÉMENT CANADA

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com



அமரர் உயர்திரு சோதிலிங்கம் பரமலிங்கம் அவர்களின்

# 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

**மலர்வு: 20-05-1950**
**உதிர்வு: 17-04-2022**



**அமரர். உயர்திரு. சோதிலிங்கம் பரமலிங்கம்**

அன்பின் திருவுருவமாக, பாசத்தின் உறைவிடமாக எங்கள் குடும்பத்தின் தீபமாக விளங்கி எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி, மீளாத் துயரில் விட்டுச் சென்ற எங்கள் அன்புத் தெய்வமாகிய அமரர் உயர்திரு சோதிலிங்கம் பரமலிங்கம் அவர்கள் இறைவன் திருவடி எய்திய சோகமான செய்தியைக் கேள்வியுற்று, எங்கள் இல்லம் தேடி வந்து. நேரில் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும், தொலைபேசி வாயிலாகவும், மற்றும் WhatsApp, Viber, Text Message ஆகிய ஊடகங்களின் மூலம் ஆறுதல் கூறிய நல்லுள்ளங்களுக்கும், மற்றும் உணவு, ஆகாராங்கள், தேநீர் போன்றவற்றை இல்லத்திற்கு கொண்டு வந்து தந்த அன்புள்ளங்களுக்கும், மலர் வளையங்கள் அனுப்பியவர்களுக்கும், மலர் வளையங்களை வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், அஞ்சலி உரையாற்றியவர்களுக்கும், இறுதிக் கிரியைகளில் நேரில் வந்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், திருமுறை மற்றும் தேவாரங்களை ஓதியவர்களுக்கும், அனைத்துக் கிரியைகளையும் நடத்திய அந்தணப் பெரியோர்களுக்கும், அமரரது திருவுடலை இலங்கையிலிருந்து கனடாவிற்கு விரைவாக கொண்டுவர ஏற்பாடுகளைச் செய்தவர்களுக்கும், Chapel Ridge Funeral Home ஊழியர்களுக்கும் மற்றும் அனைவருக்கும் எங்கள் உளமார்ந்த நன்றி!

அமரர் உயர்திரு சோதிலிங்கம் பரமலிங்கம் அவர்களின் ஞாபகார்த்த கிரியைகள் மற்றும் பூசைகள் *17-05-2022* அன்று அவரது இல்லத்தில் இடம்பெற்றது. எதிர்வரும் *05-06-2022* அன்று ஞாயிற்றுக்கிழமை 733 Birchmount Rd, Scarborough, ON M1K 1R5 என்னும் விலாசத்தில் அமைந்துள்ள கனடா கந்தசுவாமி ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளன. அன்றைய பிராத்தனைகள் மற்றும் மதியபோசனத்திலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு மிகவும் பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

**இங்ஙனம் மனைவி, மக்கள், மற்றும் குடும்பத்தினர்**


Chapel Ridge FUNERAL HOME & CREMATION CENTRE



**Serving the Tamil Community of Greater Toronto**



உங்கள் உறவொன்றை பிரிந்து தவித்தும் தடுமாறும் வேளையில் அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம்.

கவலையை விட்டு விலகிச் செல்ல அனுபவத்துடன் கூடிய நாங்கள் உங்களுக்கு உதவிடுவோம்.

உங்கள் உறவுகளின் இழப்பின்போது உங்களோடு இணைந்து உங்களில் ஒருவராக உங்களுக்குச் சேவை புரிய காத்திருக்கின்றார்.

CHRISTEEN SEEVARATNAM
(416) 258-6759



இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமீடலாம்
**Pre-Arranging – A Wise Choise**

**FINANCIAL BENEFITS**
*Lock in the cost at today's prices
*Convenient time payments
*Insured against early death

**EMOTIONAL BENEFITS**
*Letting your family know your wishes
*Peace of mind to you & your family
*Relieve the added stress & burden

**Chapel Ridge Funeral Home & Cremation Centre**
**8911 Woodbine Ave. Markham, ON. L3R 5G1**
www.chapelridgefh.com -- Email: christeenseeva@yahoo.ca

*(சென்ற வார தொடர்ச்சி)* *(அத்தியாயம் 56)*

# கல்கியின் பொன்னியின் செல்வன்

## வந்தியத்தேவனின் மீண்டும் ஓர் கடம்பூர் பயணம்

'தேவி உண்மையில் அதற்காக மட்டுமா அல்லது தாங்கள் அடிபணிந்து கை கூப்பிக் கேட்டுக் கொண்ட வேண்டு கோளை புறக்கணித்து தங்கள் உள்ளத்தில் அழியாத புண்ணை உண்டாக்க பழிக்குப் பழி வாங்க சபதம் முடிக்கும் நோக்கமா? இத்தகைய இந்த வாளை பூஜை செய்கிறேன்' என்றான் ஆதித்தகரிகாலன். அதற்கு நந்தினி 'ஒரு சமயம் அந்த எண்ணம் எனக்கு இருந்தது ஆனால் எங்கள் உறவைப் பற்றி வந்தியத்தேவன் கூறிய போது நான் நம்பவில்லை ஆனால் அது உண்மை என்று தெரிந்து கொண்டதால் என் முடிவை மாற்றிவிட்டேன்' என்றதும் ஆதித்தகரிகாலன், 'அவன் இங்கே தான் ஒழிந்திருக்கிறான் அந்தப் பாதகனை நீ மன்னிக்கலாம் ஆனால் நான் மன்னிக்க மாட்டேன்' என்று தன்னிடம் உள்ள வாளை பார்த்துக் கொண்டு அருகிலுள்ள திரை அருகில் சென்றான் கோபத்துடன். திரையைக் கிழித்தான் அப்போது மணிமேகலை சிறு கத்தியுடன் வெளிப்பட்டாள் உடனே 'கந்தமாறா உன் தங்கையை இங்கிருந்து அழைத்துச் சென்றுவிடு' என்றான். 'நந்தினி உண்மையைச் சொல்லிவிடு என்ன நோக்கத்திற்காக என்னை எதற்காக கடம்பூர் அரண்மனைக்கு வரச் சொன்னாய்? நீ சொல்லி அனுப்பிய கதைகள் எதையும் நான் நம்பவில்லை எதற்காக பெரியபழுவேட்டரையரை தஞ்சைக்கு அனுப்பினாய் அன்று என் மூர்க்கத்தனத்தால் நீ கேட்ட வரத்தை என்னால் கொடுக்க முடியவில்லை அதனால் நீ பெரியபழுவேட்டரையரை மணந்து தஞ்சைக்கு வந்தாய். நான் காஞ்சியில் நிம்மதியாக இருக்கிறேன் அது உனக்கு பிடிக்கவில்லை அதனால் கடம்பூர் வரவழைத்தாய் இதோ உன் வாள் உன் நோக்கத்தை நிறைவேற்று. உன் பழியை முடிப்பதற்கு கந்தமாறனையோ, வந்தியத்தேவனையோ, பாத்திபேந்திரனையோ ஏவி விட வேண்டாம் அவர்கள் மீது எனக்கு கோபத்தையும் உருவாக்க வேண்டாம் உன் சபதத்தை நீயே நிறைவேற்று' என்றான். அதற்கு நந்தினி 'உண்மை தான் கோமகனே! தங்களை இங்கு அழைத்ததன் நோக்கமும் அதுவேதான் ஆனால் தங்கள் நண்பன் வந்தியத்தேவனோ நான் உடன் பிறந்தவர்கள் என்று சொன்னதை நான் நம்பிய பின் அந்த எண்ணத்தை நான் மாற்றிக் கொண்டுவிட்டேன். என் கைகளில் பலம் இல்லை என் நெஞ்சு இடிந்து விட்டது வீர பாண்டியனுடைய மரணத்திற்கு பழி வாங்குவதாக நான் சபதம் செய்தது உண்மை மீன் சின்னம் பொறித்த இந்த பாண்டிய குலத்து வாளினால் தங்களைக் கொல்வேன் அல்லது என்னை நானே கொன்று மாள்வேன்' என்றாள் நந்தினி. இதைக் கேட்ட கரிகாலன் 'உலகின் முன்னிலையில் நீ பழுவேட்டரையர் இளைய ராணியாக இருக்கலாம் ஆனால் உண்மையில் நீ அவரை மணந்து கொள்ளவில்லை ஏதோ காரணத்திற்காகவே நீ அவருடைய அரண்மனையில் இருக்கிறாய். முன் ஒரு தடவை நான் தஞ்சையில் கேட்ட போது இவ்வாறுதான் கூறினாய் அப்போ என் ஆசைக் கனவுகளை உனக்கு நினைவுபடுத்தினேன். அதற்கு நீ பல நிபந்தனைகள் விதித்தாய் பழுவேட்டரையரைக் கொன்று, என் தந்தையையும் சகோதரர்களையும் சிறைப்படுத்தி, உன்னை சோழ சிங்காசனத்தில் ஏற்றி வைக்க வேண்டும் என்றாய். உன் கொடூரமான குணம் கண்டு நான் காஞ்சிக்குப் போனேன் என்னை நீ நினைவுகளால் துன்புறுத்தினாய் இப்பொழுது கேட்கிறேன் இந்தப் பெரிய சோழ ராஜ்ஜியத்தை தியாகம் செய்துவிட்டு பிறந்த நாட்டையும், தாய் தந்தையையும் உற்றார் உறவினரையும் துறந்து விடுகிறேன் நாம் கப்பல் ஏறி கடல் கடந்து செல்வோம் உன் சம்மதத்தைச் சொல் இப்பொழுதே புறப்படுவோம்' என்றார். இவர்கள் உரையாடலை யாழ் களஞ்சியத்தில் ஒழிந்திருந்த வந்தியத்தேவன் கேட்டுக் கொண்டிருந்தான். இது என்ன சகோதரன் சகோதரியை கொல்லப் போகிறானோ? அல்லது இருவரும் ஒருவரை ஒருவர் கொல்லப் போகிறார்களோ என்று தெியவில்லை! அவர்கள் இருவரிடமும் அவர்களின் உறவைப் பற்றி சொல்லியாகிவிட்டது ஏதேனும் அசம்பாவிதம் நடந்து விடக் கூடாது என்று இளையபிராட்டி என்னை அனுப்பினார். என் கடமையைச் செய்தாகிவிட்டது. என் உயிரைப் பலி கொடுத்தால் இவர்கள் குரோதம் தீருமோ என்று அவன் உள்ளம் கொந்தழித்தது அவ்வேளை நந்தினி 'கோமகனே மீண்டும் சொல்லுகிறேன் வாணர் குலத்து வாலிபன் சொன்னதை நாம் முழுமையாக நம்புகிறேன் நாம் சகோதரர்' என்றாள்.

அவ்வேளை ஆதித்தகரிகாலர் மிகக் கோபம் கொண்டு 'எங்கே அந்தப் பாதகன் வந்தியத்தேவன் உன்னுடைய புதிய காதலன்' என்றபடி கத்தியை சுழற்றி அறையைச் சுற்றித் தேடினான். அப்பொழுது நந்தினி ஆதித்தகரிகாலரின் காலடியில் விழுந்து, 'கோமகனே இதைக் கேளுங்கள் வாணர்குல வாலிபனைப் பற்றி தாங்கள் கூறுவது அபாண்டம் என் நெஞ்சை பிளந்து பாருங்கள் தங்கள் திருவுருவத்தினை தவிர வேறு எதுவும் இராது! இது சத்தியம் ஈழ நாட்டில் வெறி கொண்டு அலையும் அந்த மாதரசி என் அன்னை என்பதை நான் அறிவேன் அதனால் நம் இருவருக்கும் உள்ள தடை நீங்க வழியே கிடையாது' என்று கூறி விம்மி விம்மி அழுதாள். ஆதித்தகரிகாலனும் கவலையில் மூழ்கினான். அவ்வேளை வேட்டை மண்டபத்து கதவை திறந்து மந்திரவாதி ரவிதாசன் நந்தினி அறைக்குள் வர முயன்றான். அதே சமயம் வந்தியத்தேவனின் கழுத்தை காளாமுகக் கோலம் கொண்ட வைர மனிதர் ஒருவர் நெருங்கி கீழே தள்ளிவிட்டதும் அவனும் தரையில் விழுந்து நினைவிழந்தான். இந்தக் காளாமுக உருவத்தைக் கண்டு மணிமேகலையும் கூச்சலிட்டாள். அந்த காரிருள் மரணத் தருவாயில், முன்னிருக்கும் சந்தருகில் மனிதர்கள் அங்குமிங்கும் ஓடும் காலடிச் சத்தம் கேட்டது. 'வானுலகைப் பார்க்கும் ஆசையினால் ஆதித்தன் அஸ்தமனத்தை அடைந்தான் உலகில் கலி என்னும் காரிருள் சூழ்ந்தது என்கிறது திருவாலங்காட்டு செப்பேடு இது வீர பாண்டியன் தலை கொண்ட வீராதி வீரனாகிய சோழ சாம்ராஜ்ஜியத்துப் பட்டத்து இளவரசர் ஆதித்தகரிகாலன் அகால மரணம் அடைந்தார் என்பதை சொல்கிறது. காரிருள் சூழ்ந்த அந்த கடும் இரவுப் பொழுதில் நினைவு திரும்பிய வந்தியத்தேவன், தான் இப்பொழுது எங்கே இருக்கிறேன்? எப்படி என்ன நடந்தது என்று வெகுவாக சிந்தித்தான். தான் களஞ்சிய அறையில் இருந்து கழுத்து நெரித்து தள்ளப்பட்டேன் என்று ஞாபகப்படுத்திக் கொண்டான். தன் கைகளை தடவிப் பார்த்தான் அவன் கையில் ஒரு கத்தி அதில் ஈரம் தென்பட்டது இது என்ன கத்தி அதுவும் மீன் இலச்சினை பொறித்த வாளாக இருக்குமோ! இந்த இருட்டில் எதுவும் தெரியவில்லையே? என்றபடி மேலும் தடவினாள் அவன் கைகளில் மனித உடல் தட்டுப்பட்டது. இது என்ன இறந்து போன மனித உடல் அனாதரவாகக் கிடக்கிறது! இது யாருடையது என்று தடவிப் பார்த்தான். அது இளவரசர் என்று தெரிந்து கொண்டான். நான் என் காரியத்தில் வெற்றி கொள்ளவில்லை குந்தவை பிராட்டி என்னை தன் தமையனின் அருகில் அவர் நிழல் போல் இருந்து காப்பாற்று என்றாள். என்னால் முடியவில்லை! என்று மனம் கலங்கி நிற்கையில் கந்தமாறனும், அவன் தந்தை சம்புவரையரும் சில ஆட்களுடன் அங்கு வந்தனர். இந்தக் காட்சி கண்டு, 'இது என்ன பாதகம் கொலைகாரா நீ எங்கும் தப்பி ஓடவில்லையா இங்கே தான் இருக்கிறாயா? சிநேகத் துரோகி ராஜ துரோகி தந்தையே எங்கள் வம்சத்திற்கு அழியாத களங்கத்தை உண்டு பண்ணிவிட்டான்' என்றான். அப்பொழுது சம்புவரையர் ஆதித்தகரிகாலனின் உடலின் அருகில் உட்கார்ந்து 'விருந்துக்கென்று அழைத்து வேந்தனைக் கொன்றபழி என் மீது விழுந்துவிட்டதே இது என்ன விதி' என்று புலம்பினார்.




அப்பொழுது வந்தியத்தேவன் 'யார் இளவரசரைக் கொன்றார்கள் என் மேல் பழிவருகிறதே என் செய்வேன் எப்படி இந்தக் கொடிய பழியில் இருந்து தப்புவது நான் கொலை செய்யவில்லை' என்று கூற முற்பட்டான். அவ்வேளை மணிமேகலை திரை சீலையை விலக்கிக் கொண்டு வந்தாள். சம்புவரையர் திகைத்துப் போய் 'அம்மா நீ எங்கே இங்கு?' என்று கேட்க, 'அவர் இவரைக் கொல்லவில்லை இவர் மேல் பழி போடாதீர்கள் நான் தான் இந்த வாளினால் இளவரசர் ஆதித்தகரிகாலனைக் கொன்றேன்' என்றாள். எல்லோரும் ஆச்சரியமாக மணிமேகலையைப் பார்த்தனர். அப்பொழுது சம்புவரையர் 'கந்தமாறா தங்கையை அழைத்துப் போ' என்றார். இதைக் கேட்ட வந்தியத்தேவன் 'கந்தமாறா நீ சொல்வது தான் உண்மை நான் தான் குற்றவாளி உன் சகோதரி என்னைக் காப்பாற்றவே இவ்வாறு கூறுகிறாள். இளவரசி தங்களுக்கு நன்றி என் உயிர் பிரிந்தாலும் உங்கள் பாசத்தை மறக்க மாட்டேன் இப்பொழுது அந்தப்புரத்துக்குப் போங்கள்' என்றான். 'இது ஒன்றே போதும் உன்னை நான் கொன்று விடுகிறேன்' என்று வாளை ஏந்தியபடி வந்தியத்தேவனின் அருகில் சென்றான் கந்தமாறன் அவர் தந்தை அவனைத் தடுத்து மணிமேகலையை அழைத்து செல் என்று உத்தரவு போட்டார். பின்னர் 'வந்தியத்தேவனை கட்டிப் போடுங்கள்' என்றார். அவ்வேளை அரண்மனை வெளிப் புறத்தில் கூச்சல் கேட்கவே சம்புவரையர் அங்கு விரைந்து சென்றார். வந்தியத்தேவன் தன் இக்கட்டான சூழ்நிலையை நினைத்து கலங்கினான். இளவரசனை கொலை செய்த துரோகியை தண்டிப்பது என்றால் சித்திரவதை செய்வார்கள் என்று பலவாறாக சிந்தனை செய்து கொண்டு இருந்தான். அந்த வேளை தீ பரவிக் கொண்டு வந்ததைக் கண்டு இது என்ன நாம் இப்போது இந்த தீயிலே கருகப் போகிறோம் எனக்கும் அழியாத பழி இளவரசரின் உடலை எரியவிடக் கூடாது அவர் உடலை எடுத்துச் சென்று அவர் பாட்டனார் மலையமானிடம் ஒப்படைக்க வேண்டும்' என்றபடி விரைவாக எழுந்து ஆதித்தகரிகாலன் உடலை தன் தோளில் தூக்கிப் போட்டுக் கொண்டு விரைவாக நடந்தான். கடம்பூர் அரண்மனைக்கு வெளியில் மலையமானின் படைகள் பெரும் திரளாக நின்றனர். சம்புவரையர் தன் மகன் கந்தமாறனிடம் சென்று 'மகனே நீ உடனடியாக வெளியேற வேண்டும் என் கட்டிலுக்கு கீழே ஒரு சுரங்கப் பாதை உண்டு அங்கிருந்து புறப்பட்டால் நீ தஞ்சை போகலாம் அங்கே பெரிய பழுவேட்டரையர் இருப்பார் அவரிடம் இங்கு நடந்தவை பற்றி சொல் அங்கு சின்னப் பழுவேட்டரையாரிடமோ, மதுராந்தகரிடமோ சொல் கரிகாலர் மாண்டு விட்டார் உடனே மதுராந்தகருக்கு பட்டம் கட்ட இது நல்ல சமயம் என்று தெரியப்படுத்து. மலையமானும் கொடும்பாணார் வேளாளரும் குறுக்கே நிற்பார்கள் எம் பலத்தை திரட்டி அவர்களை அடியோடு அழித்து விட வேண்டும். கரிகாலரை வாணர் குலத்து வீரன் கொன்றான் என்றும், அதற்கு அருள்மொழிவர்மரும், குந்தவையும் காரணம் என்றும், சோழ நாட்டில் பரப்ப வேண்டும் இதற்கு அநிருத்தரும் துணை போயிருக்க வேண்டும் என்று சொல் உடனே புறப்படு' என்றார். 'ஆம் தந்தை நான் உடனே புறப்படுகிறேன் என் தங்கை மணிமேகலையைப் பார்த்துக் கொள்ளுங்கள்' என்றான்.

பின்னர் சுரங்கப் பாதை வழியாக கந்தமாறன் வெளியேறினான். சம்புவரையர் மாளிகைக்கு வெளியில் நடக்கும் ஆரவாரம் என்ன என்பதைப் பார்க்க வாசற் பக்கம் வந்தார். அப்பொழுது வீரர்கள் கதவுகளை உடைத்துக் கொண்டும் சுவர் மீது ஏறிக் குதித்துக் கொண்டும் வீரர் சம்புவரையர் மாளிகைக்குள் வந்தனர். இதைத் தொடர்ந்து திருக்கோவலூர் மலையமானும், பாத்திபேந்திரனும் வந்தார்கள். மலையமான் 'இது என்ன பாதகம் செய்தீர் எங்கே வீர பாண்டிய தலைகொண்ட வீராதி வீரர்! எங்கே சோவூர் போர்க்களத்தின் வெற்றி வீரன்! எங்கே என் பேரன்! எங்கே அவனை என்னிடம் ஒப்படைத்து விடுங்கள். இல்லாவிட்டால் உம் கோட்டை கொத்தளம் எல்லாம் இடித்து தரைமட்டமாக்கி விடுவேன்' என்றார். அச்சமயம் நந்தினியின் அந்தப் புரத்தில் இருந்து தீ பற்றி எரிவதைக் கண்டு திகைத்து நின்றனர். நிலா முற்றத்தில் நின்ற பெண்கள் எல்லோரும் கவலையுடன் காணப்பட்டனர். மணிமேகலையோ 'ஐயோ தீ அவர் அங்கு இருக்கிறார்' என்று கத்தியபடி அத்திசையில் ஓடினாள். சம்புவரையர் அவளைத் தடுத்து நிறுத்தச் சென்றார். அவ்வேளை வந்தியத்தேவன் ஆதித்தகரிகாலனின் உடலைச் சுமந்தபடி தாண்டித் தாண்டி நடந்து வந்தான். மலையமான் அவனை உற்றுப் பார்த்தார் அவர் உடல் நடுங்கியது. உள்ளம் கலங்கியது தொண்டை அடைத்துக் கொண்டது. வந்தியத்தேவன் மலையமான் அருகில் வந்தான். 'இதோ இளவரசர் கரிகாலர் இந்த வீராதி வீரனை உயிரோடு கொண்டு வந்து கொடுக்க முடியவில்லை அவர் உடலை தீக்கிரையாகா வண்ணம் கொண்டு வந்து சேர்த்தேன். விதியினாலும் சதியினாலும் கொல்லப்பட்ட உங்கள் பிள்ளையை ஏற்றுக் கொள்ளுங்கள்' என்று கரிகாலனின் உடலை படுக்க வைத்தான் அவனும் கீழே விழுந்துவிட்டான். மலையமானோ சொல்லணாத் துயருடன் அலறி அழுதார். பின்னர் அக்கினியின் வேகம் கண்டு 'அக்கினியே எம் வேலை முடிந்துவிட்டது இந்தப் பாதகன் சம்புவரையரை சிறை செய்து சக்கரவர்த்தி சுந்தர சோழரிடம் அழைத்துச் சென்று தண்டனை பெற்றுக் கொடுங்கள் மகனைப் பார்க்க வேண்டும் என்ற ஆசையுடன் இருக்கும் சக்ரவர்த்திக்கு இவன் உடலையாவது கொண்டு செல்வோம்' என்று தஞ்சை நோக்கிப் புறப்பட்டனர்.

கொள்ளிடத்து வடகரையிலுள்ள திருநாரையூர் என்னும் கிராமத்தில் நம்பியாண்டார் நம்பி சைவப் பெரியார் மடலாயம் இருந்தது. அங்கு பெரிய பிராட்டி செம்பியன் மாதவி மதுராந்தகரின் தாயார் ஈசானப் பட்டரைப் பார்க்க வந்திருந்தார். அவர்கள் இருவரும் சோழ சிம்மாசனத்தில் மதுராந்தகர் ஏறுவதைத் தடுக்க உலக அறிய உண்மையை சொல்லி விடுவதே என்று முடிவெடுத்துள்ளனர். பின்னர் தேவியார் சிவிகையில் ஏறிப் புறப்பட ஆயத்தமானார். அச்சமயம் ஆழ்வாரக்கடியான் அங்கு வந்தான். தேவி அவரைக் கண்டு, 'திருமலை நான் வந்த காரியம் கலக்கம் நீங்கி தெளிவாயிற்று' என்றார். அதைக் கேட்டு 'அது மிக்க நல்லது கடம்பூரில் இருந்து மிகப் பயங்கரமான செய்தி வந்துள்ளது தாயே சோழ குலத்தில் இம்மாதிரியான துர் சம்பவம் இதுவரை நடந்ததில்லை கடம்பூர் அரண்மனையில் ஆதித்தகரிகாலர் காலமானார். அதன் பின் கடம்பூர் மாளிகை தீப்பட்டு எரிந்து விட்டதாம் இளவரசரின் சடலத்தை தஞ்சைக்கு ஊர்வலமாக எடுத்து வருகிறார்களாம். திருக்கோவலூர் மலையமான், கடம்பூர் சமபுவரையர் மற்றும் அவருடைய குடும்பததாரையும் சிறைப்பிடித்து வருகிறார் ஊர்வலம் ஒரு இலட்சம் சனங்களுடன் வருகிறதாம்' என்றார். 'திருமலை நீ சொல்வது எத்தனை பயங்கரச் செய்தி தூம கேது தோன்றி மறைந்து விபரீதம் ஏற்படுத்தி விட்டதே! கருணைக் கடலான இறைவன் சோழ குலத்தைக் காப்பாற்ற வேண்டும்' என்றார். 'தாயே சிலர் தங்கள் குமாரர் மதுராந்தகர் பட்டத்திற்கு ஏற வேண்டும் என்றனர் சிலர் அருள்மொழி சிங்காசனம் ஏற வேண்டும் என்றனர் கொடும்பனார் வேளாரின் படைகள் தஞ்சைக் கோட்டையை சுற்றி முற்றுகை இட்டுள்ளது இளவரசர் ஆதித்தகரிகாலரின் சடலத்துடன் மலையமான் தஞ்சை நோக்கிப் போகிறார். பழுவேட்டரையரைச் சேர்ந்த சிற்றரசர்கள் படை திரட்டுகிறார்கள். முதல் மந்திரி அநிருத்தரும் கலக்கம் அடைந்துள்ளார். தாங்கள் தான் சோழ சாம்ராஜ்ஜியத்தை நாசமடையாமல் காப்பாற்ற வேண்டும் வேறு வழி கிடையாது' என்றான்.

*தொடரும்...)*

Jenita.Jaffna@gmail.com
தொகுப்பு, எழுத்தாக்கம்: மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை
மாதினி நிமலன

மொன்றியல் நகரில் உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com





Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 416-291-0005
www.iselldreamcondos.ca www.iselldreamhomes.ca




26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்


LOOKING FOR YOUR Dream House?
Call SEYON CHANDRAKUMAR
647-401-9211
416-321-0110
@REALTORSEYON
WWW.REALTORSEYON.COM
INFO@REALTORSEYON.COM
7595 MARKHAM RD #19, MARKHAM, ON L3S 0B6
AJAX - 1801 HARWOOD AVE N #5, AJAX, ON L1T 0K8
RE/MAX
ROYAL PROPERTIES
BUYING
SELLING
INVESTING




உதயம் 1363 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday May 20, 2022


# Our Major Mandate of this Election is to increase Affordability and lower the Cost of Living

*- NDP Candidate Doly Begum*




# எமது தேர்தல் அறிவிப்புக்களின் முன்னணியில் உள்ளது மக்களுக்கு தாராளமான வாழ்க்கைக்கு உதவக் கூடிய வகையில் வாழ்க்கை செலவைக் குறைப்பதே - NDP வேட்பாளர் Doly Begum

எதிர்வரும் யூனு் 2ம் திகதி நடைபெறவுள்ள ஒன்றாரியோ மாகாணத் தேர்தலில் எமது தேர்தல் அறிவிப்புக்களின் பல முக்கிய விடயங்களைக் குறிப்பிட்டுள்ளோம். அவற்றுள் முன்னணியில் உள்ளது மக்களுக்கு தாராளமான வாழ்க்கைக்கு உதவக் கூடிய வகையில் வாழ்க்கை செலவைக் குறைப்பது தான் என ஸ்காபுறோ தென்மேற்கு தொகுதிக்கான ஙேீ கட்சியின் வேட்பாளர் **Doly Begum** தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை அவரது தொகுதியில் அமைந்துள்ள தேர்தல் பிரச்சாரக் காரியாலயத்தில் இடம்பெற்ற சந்திப்பு ஒன்றில் கனடா உதயன் பிரதம ஆசிரியர் அவர்களுக்கு அளித்த நேர்காணல் ஒன்றில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஆர். என். லோகேந்திரலிங்கம் மற்றும் அவரது உதவியாளர் திரு சங்கர் சிவானந்தன் ஆகியோர் **NDP** கட்சியின் வேட்பாளர் **Doly Begum** அவர்களைச் சந்தித்தார்கள்.

அங்கு பிரதம ஆசிரியரின் பல கேள்விகளுக்கு மிகுந்த உற்சாகத்துடன் வேட்பாளர் **Doly Begum** பதிலளித்தார்.

ஒன்றாரியோ மாகாணத்தின் மாணவர்களின் பாடசாலைக் கல்வி தொடர்பாகவும் அவர்கள் பல்கலைக் கழகங்களுக்குச் புகுகின்றபோது போதிய அறிவைக் கொண்டவர்களாக விளங்க வேண்டும் என்றும் அதனால் விஞ்ஞானம் போன்ற பாடத்திட்டங்களில் பல மாற்றங்களைக் கொண்டு வரவுள்ளதாகவும் வேட்பாளர் **Doly Begum** தெரிவித்தார்.

ஒன்றாரியோ மாகாணத்தில் தங்கள் அரசு பதவியேற்றால் பாடசாலைக் கல்வித் திட்டம் தொடர்பாக எவ்வாறான முற்போக்கான திட்டங்களை அறிவிக்க உள்ளீர்கள் என்ற கேள்விக்கு பதிலளிக்கும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார். பிரதம ஆசிரியரின் மேலும் சில கேள்விகளுக்கும் வேட்பாளர் **Doly Begum** தகுந்த பதில்களை அளித்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## Ontario Liberal Candidate Mazhar Shafiq visits Villa Karuna Tamil Seniors Home

## ஸ்காபுறோவில் ‘வில்லா கருணா’ முதியோர் இல்லத்திற்கு விஜயம் செய்த ஒன்றாரியோ லிபரல் வேட்பாளர் Mazhar Shafiq

ஸ்காபுறோவில் தமிழர் நிர்வாகத்தில் இயங்கும் “வில்லா கருணா“ முதியோர் இல்லத்திற்கு சில நாட்களுக்கு முன்னர் விஜயம் செய்த ஒன்றாரியொ லிபரல் கட்சி வேட்பாளர் **Mazhar Shafiq** அவர்கள் மேற்படி இல்லத்தின் நிறுவனர் திருமதி இந்திராணி நாகேந்திரயைச் சந்தித்து இல்லத்தின் தேவைகள் பற்றி உரையாடினார். அத்துடன் அங்கு தங்கியுள்ள தமிழ் பேசும் மூத்தோர்களையும் சந்தித்து உரையாடினார். அத்துடன் அவர்களுக்கு இனிப்பு வழங்கி மகிழ்வித்தார். இங்கு காணப்படும் படங்களில் “வில்லா கருணா“ முதியோர் இல்லத்தில் பணியாற்றும் பெண் ஊழியர்களும் காணப்படுகின்றனர். (படங்கள்: அர்யுன்)




If elected, I committ to work with the Tamil Canadian community on the following aspects.

தேர்ந்தெடுக்கப்பட்டால், பின்வரும் அம்சங்களில் தமிழ் கனேடிய சமூகத்துடன் இணைந்து பணியாற்ற நான் உறுதியளிக்கிறேன்.

1. I will give my full support to the "Tamil Community Centre" project that has already been committed by the provincial government.
ஏற்கனவே மாகாண அரசினால் ஆதரவு வழங்கப்பட்ட ”தமிழ் சமூக நிலையம்” என்கின்ற திட்டத்திற்கு எனது முழு ஆதரவையும் வழங்குவேன்.

2. I will raise issues without any hesitation faced by Tamil Canadians at the Ontario Legislative Assembly. I will work with my party and the Ontario government to have any barriers removed for Tamil Canadians to fully participate at all aspects of this province.
ஒன்ராறியோ சட்ட சபையில் தமிழ் கனடியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை எந்தவித தயக்கமுமின்றி கொண்டு செல்வேன். இந்த மாகாணத்தின் அனைத்து விடயங்களிலும் தமிழ் கனடியர்கள் முழுமையாக பங்கேற்பதற்கு எதிராக இருக்கும் தடைகளை நீக்குவதற்கு எனது கட்சி மற்றும் ஒன்ராறியோ அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றுவேன்.

3. Ontario Liberal party unanimously supported the "Tamil Genocide Education Week act" that was given a royal assent as a law of Ontario the 7 day period from May 12 to 18th to educate Ontarians to learn and understand the Tamil Genocide and other genocides around the world. I will make sure this proclamation is implemented fully at all possible avenues.
ஒன்ராறியோ லிபரல் கட்சி ”தமிழ் இனவழிப்பு அறிவூட்டல் வாரச் சட்டத்தை” ஒருமனதாக ஆதரித்தது. இது ஒன்ராறியோவின் சட்டமாக மே மாதம் 12ம் திகதி முதல் 18ம் திகதி வரையிலான 7 நாள் கால அவகாசத்தை தமிழ் இனவழிப்பு மற்றும் பிற இனவழிப்புக்களை ஒன்ராறியோ மக்களுக்கு அறிவூட்டும் காலமாக அமைகிறது. இந்தப் பிரகடனத்தை சாத்தியமான அனைத்து வழிகளிலும் முழுமையாக செயல்படுத்தப்படுவதை உறுதி செய்வேன்.

4. Ontario Liberal Party supported the Tamil Heritage Month motion and I am proud to celebrate along with the strong and vibrant Tamil Canadian community.
ஒன்ராறியோ லிபரல் கட்சி தமிழர் மரபு மாதப் பிரேரணையை முற்று முழுதாக ஆதரித்தது. வலுவான மற்றும் துடிப்பான தமிழ்க் கனேடிய சமூகத்துடன் இணைந்து தமிழர்களின் மரபைக் கொண்டாடுவதில் பெருமிதம் கொள்கிறேன்.

On June 2, Elect
Mazhar Shafiq
Candidate
Member of Provincial Parliament
Scarborough Centre
Liberal
Contact us:
Unit 116- 1550 Birchmount Road, Scarborough ON
E-mail: info@mazharshafiq.ca Tel: 647-691-5122

